GOKULAM அக்டோபர் '94 ரூ. 3.00

கோகுலம்



சாதனை படைத்த

சிங்கக் குட்டி!



everest/94/PP/72-tm-R



கோகுலம்

கோகுலம்
1994
அக்டோபர்
மாத இதழ்
மலர் : 12
இதழ் : 9

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும்.
- பாரதியார்

அருமைச் சிறுவர் சிறுமியரே,

எல்லோருக்கும் அன்பு வணக்கம்.

போன இதழில் வெளிவந்த தலையங்கத்தையும் ஆசிரியரின் பெருமையைக் கூறும் நாடகத்தையும் பல ஆசிரியர்கள் கடிதம் எழுதிப் பாராட்டியிருக்கிறார்கள். இன்றைய சிறுவரை நாளைய சிறந்த குடிமகனாக்கும் பொறுப்பு மூன்று சக்திகளுக்கு இருக்கிறது. பெற்றோர், ஆசிரியர், சிறுவர் இலக்கியம். இந்த சக்தி களுக்கு இழிவு ஏற்படும் வகையில் இதுவரை கோகு லத்தில் எந்த ஒரு படைப்பும் வரவில்லை. இனியும் வராது. மாணவர் ஆசிரியர் உறவு மேம்பட்டு, ஓர் அன்புப் பிணைப்பாக இருக்க வேண்டும் என்பதில் கோகுலம் தனிக் கவனம் செலுத்துகிறது.

இந்த ஆண்டு தேசத் தந்தை மகாத்மா காந்தியின் 125 ஆவது பிறந்த நாள் உலக முழுவதும் கொண்டாடப் படுகிறது. சத்யாக்கிரகத்திற்கு எத்தனை சக்தி உண்டு என்பதை உலகுக்கு உணர்த்தியவர் அவர். இதே சத்யாக் கிரகத்தை ஆயுதமாகக் கொண்டு தனது அன்புத் தாத்தா வுக்கு நியாயம் கிடைக்க செய்யும் சிறுவனை உங்களுக் காக இந்த இதழில் ஒரு சிறுகதையில் அறிமுகப்படுத்து கிறோம்.

'இரண்டாவது சாவி'யில் சந்திப் புதிய ஆபத்தில் சிக்கி, மீண்டு, நம்மைப் பரபரப்பில் ஆழ்த்துகிறான்.

எழுதத் துடிக்கும் பள்ளி மாணவ மணிகளுக்கு ஊக்கம் அளிக்கவே 'வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி' அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டி வைத்திருப் பதைப் பாராட்டி எழுதியுள்ள ஆசிரியர்களும், பெற்றோர்களும் இந்தப் போட்டியில் பெருமளவுக்கு தங்கள் மாணவர்களைக் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும். இதற்கான கதைகள் ஏற்கெனவே வரத் தொடங்கி விட்டன. கதைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 30.9.94. இதுவரை எழுதாதவர்கள் உடனே எழுதி முடிவு தேதிக்குள் அனுப்புங்கள்.

இடம் இன்மையால் இந்த இதழில் "உங்கள் நூலகம்" இடம் பெறவில்லை.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)



கோகுலம்

அக்டோபர் 1994

இந்த இதழில்...

அறிவியல்

தொடர்கதை

கதைகள்

பாடல்கள்



* விக்கிரமாதித்தனும் நான்கு திருடர்களும் பக்கம் 45

* அணில் ஏன் விழுவதில்லை? - பக்கம் 81



படக்கதை

மற்றவை



அறிமுகம்



போட்டி

பெட்டிச் செய்திகள்

மூளைக்கு வேலை

ஆயிரம் ஏரோப்ளேன்கள்



வடிவேல் தன் தம்பியுடன் முற்றத்தில் உட்கார்ந்து 'ஏரோப்ளேனை' வைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்தான்.

முற்றத்தின் எதிர்ப்பக்கம் கந்தனின் வீடு. அங்கே இருந்தபடி கந்தன் அவர்கள் விளையாடுவதைக் கவனித்துக் கொண்டிருந்தான். சாவி கொடுத்தால் அந்த ஏரோப்ளேன் பொம்மை சிறிது உயரம் பறந்து கீழே இறங்கும். பொம்மையின் உருவமும், பளபள நிறமும், பறக்கும்போது எழுப்பிய சத்தமும் கந்தனின் மனதைக் கவர்ந்தன. மெதுவாகக் கிணற்றைச் சுற்றிக் கொண்டு வடிவேல் தம்பியோடு விளையாடிக் கொண்டிருந்த இடத்திற்கு வந்தான்.

"வடிவேல், ஏரோப்ளேன் பொம்மை ரொம்ப நல்லா இருக்குடா."

"எங்க மாமா, சிங்கப்பூர்லேருந்து வாங்கிக் கொடுத்து அனுப்பியிருக்கார்."

"என்ன விலை இருக்கும்?"

"எனக்குத் தெரியாது. ரொம்ப ரொம்ப விலை இருக்கும். ஆனா எத்தனை ரூபா கொடுத்தாலும் இந்தியாவில் இந்த மாதிரி பொம்மையை வாங்க முடியாது."

பொம்மையின் தனிப் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டு பெருமைப்பட்டான் வடிவேல்.

"வடிவேல், அந்தப் பொம்மையை நான் ஒரு தடவை விட்டுட்டுத் தரட்டுமா?" - ஆவலை அடக்க முடியாமல் கேட்டான் கந்தன்.

"நான் மாட்டேன். நீ ஏண்டா இங்கே வந்தே? நீங்க குடியிருக்கிற பகுதி அது தானே?" என்று விரட்டினான் வடிவேல்.

"பார்த்ததும் ஆசையா இருந்ததுடா வடிவேல். அதான் கேட்க வந்தேன். விடாட்டா ஓம் பரவாயில்லை. அதை ஒரே ஒரு தடவை கையில் வைத்துப் பார்த்துட்டுத் திருப்பித் தந்துடறேன்."

ஆவலை அடக்க முடியாமல் வெட்கத்தை விட்டுக் கேட்டான் கந்தன்.

"நான் தரவே மாட்டேன். நீ உங்க வீட்டுக்குப் போடா. இல்லே, எங்க அம்மாவைக் கூப்பிடுவேன்" என்று விரட்டினான் வடிவேல்.

கந்தன் குடியிருந்த பகுதி, வடிவேலின் அப்பாவுக்குச் சொந்தமானது. கந்தனின் தந்தை வசதியானவர் இல்லை. அதனால், கந்தன் விளையாடுவதற்காகத் தங்கள் வீட்டுக்கு வரக்கூடாது என்று வீட்டை வாடகைக்கு விடும்போதே நிபந்தனை போட்டிருந்தாள் வடிவேலின் அம்மா. அதனால், 'அம்மாவிடம் சொல்லுவேன்' என்று வடிவேல் பயப்படுத்தியதும், கந்தன் பேசாமல் தங்கள் பகுதிக்குத் திரும்பிவிட்டான். அங்கிருந்தபடியே ஜன்னலில் அமர்ந்து கொண்டு அவர்கள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"வடிவேல், தம்பியைக் கூட்டிக்கிட்டு டிபன் சாப்பிட வா" என்று அவன் அம்மா அழைக்கவும் வடிவேல் தம்பியோடு உள்ளே போனான். ஏரோப்ளேனை எடுத்துக் கொண்டு போக மறந்து விட்டான். அந்த அழகான சிங்கப்பூர் ஏரோப்ளேன், கவனிப்பார் இன்றி அனாதையாகக் கிடந்தது அங்கே.

ஜன்னலில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த கந்தன், "வடிவேல் பொம்மையை விட்டுட்டுப் போறே" என்று நினைவு படுத்திக் கத்தலாமா என்று யோசித்தான். அதைவிட அதை எடுத்து ஒரு முறை விட்டு விட்டுப் பிறகு கூப்பிட்டுக் கொடுத்துவிடலாம் என்ற முடிவுடன் முற்றத்தில் இறங்கி, கிணற்றைச் சுற்றிக் கொண்டு போனான். பொம்மையை ஆசை பொங்க எடுத்துத் தடவிப் பார்த்து மகிழ்ந்தான். சாவியைக் கொடுத்துக் கீழே விட்டான். 'விர்' என்று கிளம்பிய ஏரோப்ளேன், உயர்ந்து, பறந்து, நேராகக் கிணற்றுக்குள் போய் விழுந்து விட்டது! கந்தன் இதை எதிர்பார்க்கவில்லை. சுற்றுமுற்றும் பயத்தோடு நோக்கினான். யாரும் தன்னைக் கவனிக்கவில்லை என்பதை உறுதி செய்து கொண்டதும், சத்தம் இன்றி வந்த சுவடு தெரியாமல் திரும்பிவிட்டான்.

சிறிது நேரத்தில் வடிவேல் தம்பியுடன் திரும்பி வந்தான். பொம்மையைக் காணாமல் திகைத்தான். கந்தன் படிக்கும் சத்தம் கேட்டது.

வடிவேல் உள்ளே சென்று அம்மாவிடம் விஷயத்தைக் கூறினான்.

"நீ விளையாடும்போது யாராவது இருந்தார்களா?" என்று கேட்டாள் அம்மா.



"கந்தன் இருந்தாம்மா. எங்கிட்டே. ஒரு தடவை விளையாடக் கேட்டான். நான்தான் தரமாட்டேன்னுட்டேன்'' என்றான் வடிவேல்.

"அவன்தான் எடுத்திருக்கணும்,'' என்று அம்மா கூறிக் கொண்டிருக்கும்போதே அவனது அப்பா வந்துவிட்டார். அம்மாவும் வடிவேலும் கூறிய புகார்களைக் கேட்டுவிட்டு அவர் முற்றத்திற்கு வந்து கந்தனின் தந்தையை அழைத்துக் கேட்டார்.

நிபந்தனையை மீறி கந்தன் வீட்டுக்காரர் பகுதிக்குப் போனான் என்ற புகாரே கந்தனின் தந்தைக்குக் கோபத்தை வரவழைத்துவிட்டது. அதனால்தானே இந்தத் திருட்டுப்பழி? "கந்தா, இங்கே வாடா'' என்று கோபம் பொங்க அழைத்தார்.

கந்தன், மெதுவாக நடந்து வந்தான். அவன் கையில் அப்பா கோபம் வந்தால் அடிக்கும் பிரம்பு இருந்தது! எல்லோரும் வியப்புடன் அவனைப் பார்த்தனர்.

"அப்பா, நான்தான் அந்தப் பொம்மையை எடுத்தேன்'' என்று எதையும் மறைக்காமல் எல்லாவற்றையும் கூறினான் கந்தன்.

"உங்க பேச்சைக் கேட்காது அங்கே போனது தப்புத்தான். அதோடு நமக்கு வாங்க வசதி இல்லாத பொருளுக்கு ஆசைப் படக் கூடாது என்பதையும் புரிஞ்சுக்கிட்டேன். இந்தாங்க, நீங்க தண்டனையா எத்தனை அடி கொடுத்தாலும் வாங்கிக் கறேன்'' என்று கந்தன் பிரம்பை நீட்டிய போது, அப்பா கண்கலங்கினார்.


நீச்சல் அறிந்த அப்பா, உடனே கிணற்றுக்குள் இறங்கி ஏரோப்ளேனை எடுத்து வந்து வடிவேலின் அப்பாவிடம் கொடுத்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். உள்ளே வந்தார்.

தலையைத் துவட்டிக் கொண்டிருந்த அப்பாவிடம் கந்தன் வந்தான்.

"அது உனக்கு வேண்டாண்டா. அதன் விலைக்கு ஒரு அளவு தெரியும். ஆனால், கோழையைப் போல் செய்த தப்பை; அதுவும் பிறர் காணாமல் செய்துவிட்ட தவறை மறைக்கும் நரித்தனம் இல்லாது, தவறை ஒப்புக் கொண்டு தண்டனைக்குத் தயாராக வந்த உன் மனத்துணிவும், நேர்மையும் விலைமதிப்பு இல்லாதவை,'' என்று அப்பா அணைத்துக் கொண்டபோது, ஆயிரம் ஏரோப்ளேன்களை விட்ட மகிழ்ச்சியும் பெருமையும் கந்தன் முகத்தில் ஒளிவீசின.

- ஜெ. ஹரிப்ரகாஷ்

சாதனை படைத்த சிங்கக் குட்டி



• சாதனை நிறைவேற சாமியை வேண்டுதலோ!

உலகம் முழுவதும் உள்ள நீச்சல் வீரர்களுக்கும், சாதனை யாளர்களுக்கும் மிகவும் அறிமுகமானவனாகி விட்டான் பன்னிரண்டே வயதான சிறுவன் குற்றாலீஸ்வரன். பல மணி நேரம் தொடர்ந்து நீந்துவதிலும், சாதனை படைப்பதிலும் இவனுக்கு இருந்த திறமை, விடா முயற்சி ஆகியவைகளைக் கண்டு வியந்த தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம், குற்றாலீஸ்வரனைத் தத்து எடுத்துக் கொள்ளும்படி உத்தரவு பிறப்பித்தார். திறமை மிக்க பயிற்சியாளர்களின் கீழ் குற்றாலீஸ்வரனுக்குப் பயிற்சியும் ஆதரவும் தரப்பட்டது. நம்பிக்கை வீண் போகவில்லை.

இந்தியாவின் தனுஷ்கோடிக்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடைய உள்ள பாக் ஜலசந்தியை இந்த ஆண்டு குற்றாலீஸ்வரன் நீந்திக் கடந்தான். 32 கி.மீ. நீள முள்ள இந்த ஜலசந்தியை நீந்திக் கடக்க இவன் எடுத்துக் கொண்ட நேரம் 16 மணி 5 நிமிடங்கள். இது ஓர் உலக சாதனை. நீச்சல் உலகம் குற்றாலீஸ்வரனை வியப்புடன் கவனிக்கத் தொடங்கியது.

பாக் ஜலசந்தியை நீந்திக் கடந்த பிறகு குற்றாலீஸ்வரன் இங்கிலீஷ் கால்வாயைக் கடக்க விரும்பினான். இங்கிலீஷ் கால்வாய் என்பது பிரான்சையும் இங்கிலாந்தையும் கடல் வழியாக இணைக்கும் 21 மைல் கல்வாய். இதில் வேகமான நீரோட்டங்கள் உண்டு. எதிர்பாராத தடைகள் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் உண்டு. நீச்சல் வீரர்களுக்கு இங்கிலீஷ் கால்வாயை நீந்திக் கடப்பது என்பது வாழ்க்கையின் ஓர் இலட்சியம். ஒரு சிலருக்குத்தான் இது கை கூடி வந்திருக்கிறது. அந்த இலட்சியத்தை அடைய சிறுவன் குற்றா லீஸ்வரனும் விரும்பினான்.

இந்த உலக சாதனையை குற்றாலீஸ்வரன் செய்யக் கூடியவனே என்பதை நன்கு உணர்ந்த பயிற்சியாளர்கள், இவனுக்கு ஊக்கமளிக்கும் விதத்தில் தொடர்ந்து பயிற்சியளித்து, இவனைத் தயார் செய்தார்கள். இந்த இங்கிலீஷ் கால்வாயை நீந்திக் கடக்க இஷ்டப்படியெல்லாம் முயற்சி செய்யக் கூடாது. இதற்கு என்று ஒரு நீச்சல் கழகம் இருக்கிறது. இந்தக் கழகத்தினரின் அனுமதியைப் பெற்றே நீந்த வேண்டும். இந்த நீச்சல் கழகத்தின் செயலாளரான மைக் வோரம் என்ற பிரிட்டிஷ்காரர், பன்னிரண்டே வயதான குற்றாலீஸ்வரனைப் பார்த்ததும், "வீண் முயற்சி செய்கிறான்" என்று மனதிற்குள் எண்ணினார்.

இதற்கான முன்னோடிப் போட்டிகளில் முதலா வதாக வந்து குற்றாலீஸ்வரன் தனது தகுதியைக் காட்டிய போது அவர் ஆச்சர்யப்பட்டார்.

குற்றாலீஸ்வரன் தனது நீச்சல் சாத னையைத் தொடங்க நாளும் நேரமும் இடமும் குறிப்பிடப்பட்டது. அதன்படியே, லண்டன் நேரப்படி திங்கள் (ஆகஸ்ட் 15) அதிகாலை 6.27 மணிக்கு, இங்கிலாந்தில் உள்ள ஷேக்ஸ்பியர் பீச் என்ற கடற்கரையில் இருந்து குற்றாலீஸ்வரன் நீந்தத் தொடங்கினான். இவன் நீந்திய போது நீரின் வெப்ப நிலை 10 - 12 டிகிரிதான். இங்கே தமிழ் நாட்டில் வளர்ந்தவர்களுக்கு உடம்பே விறைத்துப் போகக் கூடிய நிலை. இந்த குளிர்ந்த வெப்ப நிலையில் குற்றாலீஸ்வரன் நீந்தத் தொடங்கி, இங்கிலீஷ் கால்வாயை 11 மணி, 36 நிமிடங்களில் நீந்திக் கடந்து உலக சாதனை படைத்தான். 21 மைல் நீளமுள்ள கால்வாயைக் கடந்து பிரான்ஸில் உள்ள கேப் கிரீஸ் கடற்கரை யில் கரையேறிய போது மாலை மணி 6.03.

இரண்டு வாரங்களுக்குமுன், பம்பாயைச் சேர்ந்த ரிஹேறன் மேத்தா என்ற சிறுவன் இதே கால்வாயைக் கடந்து சாதனை படைத்தான். ஆனால் இந்தச் சாதனை குற்றாலீஸ்வரனால் இப்பொழுது முறியடிக்கப்பட்டு விட்டது. இங்கிலீஷ் கால்வாயை மிகக் குறைந்த வயதில் கடந்த சிறுவன் என்ற பெருமையை குற்றாலீஸ் வரன் பெற்று விட்டான்.

குற்றாலீஸ்வரன் தெய்வ நம்பிக்கையும், விடா முயற்சியும், நன்றி உணர்வும் மிக்க வன். இங்கிலீஷ் கால்வாயைக் கடந்ததும் பத்திரிகை யாளர்களுக்கு அளித்த பேட்டியில் "இந்தச் சாதனையின் பெருமை முழுவதையும் எனக்கு ஊக்கமளித்து உதவிய தமிழக முதல்வர் ஜெய லலிதாவுக்குக் காணிக்கை யாக்குகிறேன்" என்று கூறியிருக்கிறான் நன்றி மறவா குற்றாலீஸ்வரன். உலக முழுவதிலும் இருந்து அவனுக்குப் பாராட் டுகள் வந்து குவிகின்றன.

இந்தியாவின் பெருமையை உலகறிய வைத் துள்ள குற்றாலீஸ்வரன் சென்னை கோபாலபுரத் தில் உள்ள டி.ஏ.வி. பள்ளியில் எட்டாம் வகுப் பில் படித்து வருகிறான். பெற்றோர் ரமேஷ் - சிவகாமி. உலக சாதனை படைத்துள்ள குற்றா லீஸ்வரனை ஆயிரக்கணக்கான கோகுலம் வாசகர் சார்பில் நாமும் வாழ்த்திப் பாராட்டு கிறோம்.

அட்டை வண்ணப்படம்,
கட்டுரைப் படம் : **யோகா**

எந்த வீடு யாருக்கு?
போட்டி முடிவு

இந்தப் போட்டியில் அதிக அளவுக்கு வெளி மாநில வாசகர்கள் கலந்து கொண்டிருக் கிறார்கள். மொத்தம் ஆயிரத்து ஐந்நூறைத் தொட்டுவிட்டது! இருப்பினும் எல்லாவற்றிற் கும் சரியான விடையை எழுதியவர்கள் 300 பேர் களே தேறினார்கள். குலுக்கல் முறையில் பரிசுக் குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர் :

1. அறிவொளி பாரதி,
   செம்மாண்டாம்பாளையம் அஞ்சல்.
2. ஏ. ஜானகி, சென்னை - 76.
3. எம். அனிஷா, சென்னை - 17.
4. மோ. பிரதீப், நாமக்கல்.
5. ஆர். தேவ் ஆனந்த், சென்னை - 1.
6: பி. ஹேமலதா, புட்டிரெட்டிப்பட்டி.
7. ம. சல்வின், விருதுநகர்.
8. ஆர். முத்துசாமி, சிவகங்கை.
9. எஸ். சேட்லைட், கோவில்பட்டி.
10. எஸ். என். ஜெயஸ்ரீ, கரூர் - 4.
11. வி. ஜே. ஆசிக் அலி, பள்ளப்பட்டி.
12. ஆர். விஷ்ணுப்பிரியா, செய்யார்.
13. எம். நாகூர்கனி, விரசோழன்.
14. சி. மார்லே ராஜ்குமார்,
    கும்பகோணம்.
15. எஸ். சேக்முகமது, தாராபுரம்.
16. கே. வி. கிருஷ்ணகுமார், கோபி.
17. எஸ். சுப்ரியா, பெங்களூர் - 16.
18. ஆர். கோபிநாத், ஆரணி.
19. எஸ். ஏ. செந்தில்ராஜா, தூத்துக்குடி - 1.

சரியான விடை :

1. குகை - 11 சிங்கம்
2. கொட்டில் - 12
3. டெலிபோன் கம்பக் கூடு - 13 காகம்
4. மணல் குவியல் - 14 சரஸ் நாரை
5. சுவர் வளை - 18 எலி
6. வலைக்கூண்டு - 20 புறா
7. மூங்கில் கூண்டு - 17 கோழி
8. மரப்பொந்து - 16 மரங்கொத்தி
9. தொங்கும் கூடு - 19 தூக்கணாங்குருவி
10. மரக்கிளை - 15 குரங்கு

பரிசு பெற்றோருக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.



• விஜய் கணேஷ்

செங்கோட்டையைச் சேர்ந்த ஸ்ரீ ராம மந்திரம் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் 8வது படித்து வரும் 12 வயது மாணவி எல். ராஜலட்சுமியும் இந்த ஆண்டு பாஸ் பண்ணி யிருக்கிறாள். இந்தி ஆசிரியர் களாகும் தகுதியை இந்த இளம் வயதிலேயே பெற்று விட்ட இவர்களைப் பெருமையோடு பாராட்டுகிறோம்.

• ராஜமுருகன்





• எம். எம். ஆனந்த்

சின்னச் சின்ன சிறுவரின் பெரிய பெரிய சாதனை!

இளம் ஆசிரியர்!

கோவை கிக்கானி பள்ளியில் ஏழாவது படிவத்தில் பயின்றுவரும் 12 வயதுச் சிறுவன் எம். எம். ஆனந்த் 93 ஆம் ஆண்டில் நடை பெற்ற பிரவின் உத்திராத் தேர் வில் பாஸ் பண்ணியிருக் கிறான். இதே தேர்வை



• திருமலை

குமரி முதல் சென்னை வரை

அருப்புக் கோட்டையைச் சேர்ந்த முத்துராமலிங்கபுரத்தில் தேவாங்கர் மேல்நிலைப் பள்ளி யில் 8வது வகுப்பில் படித்து வருபவன் சிறுவன் ரா. த. ராஜ முருகன். இவன் முத்துராம லிங்கபுரத்தில் சிறப்பான முறையில் இயங்கி வரும் கோகுலம் சிறுவர் சங்கத் தின் உறுப்பினனும் கூட. இந்தியா முழுவதும் சைக்



• ராஜலட்சுமி

கிளில் பயணம் செய்து சாதனை படைக்கத் திட்டமிட்டுள்ள இச்சிறுவன் முதல் கட்டமாக இந்த ஆண்டு மே மாதம் கன்னியா குமரியில் இருந்து சென்னை வரை பயணம் செய்து முடித்திருக்கிறான். அருப்புக் கோட்டையில் இவனுக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப் பட்டது. வெகுவிரைவில் இவனது இலட்சியம் நிறைவேறும் என்பதைத் தொடக்கமே காட்டுகிறது.

பேசிய விரல்கள்!

சென்னை அண்ணா நகரைச் சேர்ந்த எட்டாம் வகுப்பு மாணவன் சிறுவன் விஜய் கணேஷ். இவனுடைய மிருதங்க அரங்கேற்றம் சமீபத்தில் நடைபெற்றது. முன்னணி வித்வான்களான திருவெண்காடு ஜெயராமன் அவர்கள் பாட, திருப்பாற்கடல் வீரராகவன் அவர்கள் வயலின் வாசிக்க, இந்த நிகழ்ச்சியில் சிறுவன் விஜய் கணேஷின் விரல்கள் பாடி, பேசி அசத்தின. எதிர்காலத்தில் ஒரு பாலக்காடு மணியாக உள்ள இவனை இப்போதே வாழ்த்திப் பாராட்டுவோம்.

சின்ன திருக்குறளார்!


வ. ஆ. அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள குரும்பப் பட்டியில் 2 ஆம் வகுப்பில் படித்து வருபவன் ஏழே வயதான சிறுவன் ஜே. திருமலை. பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழாவில் இவன் பதினைந்தே நிமிடங்களில் 200 திருக்குறள்களை மனப்பாடமாக ஒப்பித்து வந்திருந்தவர்களை அசத்தினான். குறளில் எண்களைச் சொல்லிக் கேட்டால், அந்த எண்ணுக்குரிய குறளை 'டக்,டக்'கென்று கூறுகிறான். திருக்குறளில் இவன் வருங்காலத்தில் பெரிய அகராதியாக விளங்கி, திருக்குறள் முனுசாமியைப் போல் உயர்வான் என்று இவனுக்கு 'திருக்குறள் முனுசாமி' என்ற பட்டத்தையும் விழா மேடையில் வழங்கியிருக்கிறார்கள். நாமும் வாழ்த்திப் பாராட்டுவோம்.


சிங்கக் குட்டிச் சிறுவன்!

நாம், பூனைகளை வளர்ப்பது போல் தென் ஆப்பிரிக்காவில் வசிக்கும் வேன் மாக்க்பாடைன் எனும் சிறுவன் சிங்கங்களை அன்போடு வளர்க்கிறான். 12 வயதாகும் இந்தச் சிறுவன் மூன்று வருடங்களுக்கு முன்பு மூன்று சிங்கக் குட்டிகளை வளர்க்க ஆரம்பித்தான். இவனுடைய பெற்றோர்களும் இவனுக்குத் துணையாக உள்ளனர். இவனுடைய தந்தை அரசிடம் சிங்கங்களை வளர்க்க அனுமதி பெற்றிருக்கிறார். நாய்களுடன் விளையாடுவது போன்று இச்சிறுவன் சிங்கக் குட்டிகளுடன் அனாயாசமாக பயமில்லாமல் விளையாடுகிறான். சில சமயங்களில் இவனுடைய பெற்றோர் இவனிடம், 'நீ வளர்ப்பது பூனைகளல்ல; ஞாபகம் வைத்துக் கொள்' என்று கூறுமளவிற்குச் சிங்கங்களுடன் இச்சிறுவன் பழகுகிறான்.

- இந்திரா கோபாலன், கைலாசபுரம்.







கேளுங்கள் சொல்லப்படும்!

நண்டு சட்டை உரிக்குமா?

★ **பாம்பைப் போல் நண்டும் சட்டை உரிக்குமா? - க. பஞ்சநாதன், திருவலம்.**

நண்டும், பாம்பைப் போலச் சட்டை உரிக்கும். ஒரு நண்டு தனது ஆயுட்காலத்தில் சுமார் 18 முறை சட்டை உரிப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

★ **நீரில் எண்ணெய்த் துளி பட்டதும் வட்ட வட்டமாக மிதப்பது ஏன்?**

- கா. பெரியநாயகி, புத்தூர்சத்திரம்.

நீரின் மூலக்கூறு வேறு, எண்ணெயின் மூலக்கூறு வேறு. ஒரே மாதிரியான மூலக்கூறு உடையவை உடனே ஒன்றுடன் ஒன்று கலந்துவிடும். எண்ணெய் எண்ணெயோடும், நீர் நீரோடும் எளிதில் கலந்து ஒன்றாகி விடும். ஆனால் வெவ்வேறான மூலக்கூறுடையவை எளிதில் கலந்து விடுவதில்லை. எண்ணெய்க் கிண்ணத்தில் நீர்த்துளி பட்டாலும் சரி, நீரில் எண்ணெய்த் துளிபட்டாலும் சரி, ஒன்றாகி விடாது பிரிந்தே நிற்கின்றன. இதன் விளைவே வட்ட வடிவமாக மிதத்தல்.

★ **எந்த நாட்டின் கொடியிலாவது Dragon எனப்படும் இராட்சச விலங்கு போடப் பட்டுள்ளதா?**

- வா. கமலநாதன், பெரும்பாக்கம்.

யுனைடெட் கிங்டம் எனப்படும் பிரிட்டிஷ் கூட்டாட்சியின் வெல்ஷ் (WELSH), நமது நாட்டின் யூனியன் பிரதேசமான பூடானின் கொடிகளிலும் இராட்சச விலங்கான Dragon இடம்பெற்று இருக்கிறது.

★ அகில இந்திய வானொலி (A.I.R.) நிலையங்களில் நிகழ்ச்சிகள் தொடங்கப்படுமுன் ஒரு இசை வைக்கிறார்களே, அது எந்த இசைக் கருவியிலிருந்து பிறக்கும் இசை? அதை யார் இசையமைத்தார்கள்?

- மெர்லி. பெர்னான்டஸ்,
பாளையம்கோட்டை.

இது வயலின் இசை. இதை இசையமைத்துத் தந்தவர் உலகப்புகழ்பெற்ற இசை மேதையான யெஹூதி மெனுஹின்.

★ ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியருக்கு மனைவி இருந்திருக்கிறாரா?

-மு. ரயதுல்லா ஷெரிப்,
வாணியம்பாடி.

இருந்திருக்கிறார். பெயர் ஆன். ஹட்டாவே.

★ முதன் முதலில் கிராமஃபோன் ரிக்கார்டில் பதிவு செய்யப்பட்ட பெருமைக்குரிய பாடல் என்ன பாடல்?

- வா. கேசவ்சந்த், மதுரை -2.

இசைத்தட்டு என்ற கிராமஃபோன் ரிக்கார்டில் முதலில் பதிவு செய்யப்பட்ட பாடல் சிறுவர்க்கெல்லாம் பெருமையளிக்கக்கூடிய "மேரி ஹேட் எ லிட்டில் லேம்ப்" என்ற குழந்தைகளுக்கான நர்சரி பாடல்.

சேரநம்பி

★ சர்க்கஸ் கலைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் பள்ளி இந்தியாவில் இருக்கிறதா? எங்கு இருக்கிறது?

- வெ. நாகராஜன்,
மூனார்.


இந்தியாவிலேயே இருக்கிறது. கேரள மாநிலத்தில் உள்ள நெல்லிச்சேரி என்ற இடத்தில் மட்டுமே சர்க்கஸ் கலைஞருக்கான பயிற்சிப் பள்ளி இருக்கிறது.


★ அதிக எடையுள்ள மூளை மனிதனுக்கா இல்லை திமிங்கலத்திற்கா?

- பொ. சுமதி,
நசரத்பேட்டை.

இரண்டு பேருக்கும் இல்லை. மனித மூளையின் எடை 1349 கிராம். திமிங்கலத்தின் மூளை எடை 2050 கிராம். ஆனால், சிட்டுக்குருவி (SPARROW) யின் மூளை எடை என்ன தெரியுமா? 1.03 கிராம்! அதிக எடையுள்ள மூளை அமைந்துள்ளது சிட்டுக் குருவிக்குத்தான்!

★ ஒட்டகச்சிவிங்கி பார்வை குறைபாடு





உள்ளதா?

- முத்து. சேனகன், பொள்ளாச்சி.

பார்வை குறைபாடு உடையது என்பது தவறு. அது ஒரு நிறக் குருடு (COLOUR BLIND) வகை. அதனால் பச்சை, ஆரஞ்சு, பழுப்பு வண்ணங்களை மட்டும் இதனால் பிரித்துக் காண முடியாது. மற்ற வண்ணங்களைப் பார்த்து அறிய முடியும்.

★ **நீராவி இஞ்சினைக் கண்டுபிடித்தது ஜேம்ஸ் வாட்தானே?**

- வா. பவானி, நாமக்கல்.

தாமஸ் நியூகாமென் (THOMAS NEQ COMEN) என்பவர்தான் 1712ல் நீராவியால் இயங்கும் இஞ்சின்களைக் கண்டுபிடித்தார். இவர் கண்டுபிடிப்பில் தயாரான பல இஞ்சின்கள் "காமென் இஞ்சின்" என்ற பெயரிலேயே நாடெங்கும் உள்ள பல சுரங்கங்களில் பயன்படுத்தப்பட்டு வந்தன. 1778ஆம் ஆண்டுவாக்கில், இவைகளின் ஒன்று பழுதடைந்த போது ஜேம்ஸ்வாட் அதைச் சரிசெய்ய அழைக்கப்பட்டார். அதைச் சரிசெய்ததோடு, அதன் அமைப்பில் பல மாற்றங்களைச் செய்து ஜேம்ஸ்வாட் புது மாதிரியான ஓர் இஞ்சினையே வடிவமைத்தார். எளிமையாகக் கையாளக்கூடிய இதன் வடிவம் தன்மை இதைப் பிரபலப்படுத்தி, ஜேம்ஸ்வாட்டுக்குப் பெயர் வாங்கித் தந்தது. தாமஸ் நியூகாமெனின் பெயரை



மறக்க வைத்து விட்டது!

★ **முதலைகளின் வயதை எப்படிக் கணக்கிடுகிறார்கள்?**

- எம். பொன்தல்லி,
ஸ்ரீமுஷ்ணம்.

முதுகுத் தோலில் காணப்படும் வரி வடிவங்களை வைத்து முதலைகளின் வயதைக் கணக்கிடுகிறார்கள்.

★ **ஆயிரக்கணக்கான மக்களைக் கூண்டோடு ஹிட்லர் கொல்ல விஷவாயுவைப் பயன்படுத்தினார் என்கிறார்களே, அது என்ன வாயு?**

- மு. அரங்கசாமி,
காசிப்பேட்டை.

ஆயிரக்கணக்கான மக்களைக் கொல்ல ஹிட்லர் பயன்படுத்திய காஸ் ஹைட்ரஜன் சயனைடு வாயு. (ZYKLON-B)

★ **மின்சார நாற்காலியில் உட்கார வைத்து குற்றவாளிக்கு மரண தண்டனை தருகிறார்களே, அந்த மின்சாரம் எத்தனை வோல்ட் சக்தியுடையது?**


- வி. அமலதாஸ்,
பேர்ணாம்பட்டு.

மரண தண்டனை மின்சார நாற்காலிகளில் செலுத்தப்படும் மின்சாரத்தின சக்தி 2000 வோல்ட் ஏ.சி. கரண்ட்.

★ சாவி என்பது தமிழ்ச் சொல்லா?

– இரா. பழனியப்பன்,
திருக்கண்ணபுரம்.


இல்லை. ஹிந்திச் சொல்லான 'சாபி'யின் தமிழாக்கப்பட்ட வடிவமே சாவியாகும். "தாழக்கோல்", "திறவுகோல்" என்பவையே சரியான தமிழ்ச் சொற்கள். "திறவுகோல்" என்பது இன்னமும் மலையாளத்தில் சாவியைக் குறிக்கப் பயன்படுகிறது.



★ இன்று புவிகாந்த முள் வடக்கு நோக்கியிருப்பது போல், ஒரு காலத்தில் தெற்கு நோக்கி இருந்தது என்ற கருத்து உண்மை தானா?

– க. மெய்யப்பன், திருமெய்யம்.

அப்படி ஒரு கருத்து அறிவியல் அறிஞர்களிடையே இருக்கிறது. வால் நட்சத்திரங்களின் தாக்குதலால், பூமியில் பல கோடி ஆண்டுகளுக்கு முன்பிருந்த காந்த மண்டலம் பாதிக்கப்பட்டு எதிர்த் திசையில் குவிந்திருக்கிறது. இப்படி வடக்கிலும் தெற்கிலுமாக இந்த இடமாற்றம் பலமுறை நடைபெற்றிருக்கிறது என்கிறார்கள் இவர்கள். இதைத் தக்க சான்றுகளுடன் 1906ல் வெளியிட்ட பெருமைக்கு உரியவர் பிரான்சு நாட்டு இயற்பியல் அறிஞர் பெர்னார்டு புருன்ஸ் (BERNARD BRUNHS).



நிலா ராணி

நிலா ராணி பாரடி,
நீல வான வீதியில்!
உலா வந்து போகிறாள்
ஊரை சுற்றிப் பார்க்கிறாள்!

நட்சத் திரத் தோழிகள்
நாள் புறமும் சூழவே
இட்பமுடன் வருகிறாள்
தினந் தினமும் பவனியே!

மேக நிழலில் மறைகிறாள்!
மீண்டும் வெளியில் வருகிறாள்!
சோக மில்லை முகத்திலே
சொர்ண ஒளி தருகிறாள்!

நீல வானக் கடலிலே
நிலவு மங்கை நீந்தியே
ஞாலம் ஒளி பெருகவே
நடை பழகி வருகிறாள்!

பனி மலர்கள் பூத்திட
பாப்பா கண்டு மகிழ்ந்திட
கனிவுடனே வருகிறாள்!
காரி ருளும் விலகவே!

அன்னை கண்டு அழைக்கிறாள்!
அமுதம் ஊட்ட விழைகிறாள்!
பொன்னிலவு ராணியும்
போவ தெங்கே வேகமாய்?

–செ.க.மலரடியான்



பாமாயில் கவர் மாலை


தேவைப்படும் பொருள்கள் :

1. வீணாகப் போகும் காலியான பாமாயில் கவர்கள். அல்லது வீணாகப் போகும் பிளாஸ்டிக் கவர்கள். இவை ஏதாவது கலராக இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும்.
2. சிறிய ஊசி
3. நூல் கண்டு.

செய்யும் முறை :

முதலில் பிளாஸ்டிக் கவர்களை பிசுக்குப் போக சர்ப் சோப் பௌடர் போட்டு ஊறவைத்து கழுவி எடுத்து, துடைத்து ஈரமில்லாது வைத்துக் கொள்ளவும்.

2. எந்த அளவிலான இதழ்களுடைய மாலையைச் செய்ய வேண்டும் என்பதை முதலில் நிச்சயம் செய்து கொள்ளுங்கள். அதற்கு ஏற்றபடி A,B,C,D, அளவுப் படம் அமைய வேண்டும். இங்குள்ள ABCD அளவு, 3 அங்குல உயரத்திற்கு வரக்கூடியது.



3. A,B,C,D அளவை அப்படியே அல்லது டிரேஸ் எடுத்து ஒரு கெட்டி அட்டையில் ஒட்டி வெட்டி வைத்துக் கொள்ளவும்.

4. இந்த அட்டையை அப்படியே பிளாஸ்டிக் கவரின் மேல் வைத்து வரைந்து, கத்தரித்து எடுத்துக் கொள்ளுங்கள். இவை மாலைக்கான இதழ்கள். மீடியம் சைஸ் மாலைக்கு, சுமார் 300 கத்தரித்த இதழ்களாவது தேவைப்படும்.

5. கத்தரித்த இதழை இப்பொழுது அழகாக மடித்து வைத்துக் கொள்ள வேண்டும். முதலில் A,C பகுதிகளை நேராக வரும்படி மடிக்கவும். பிறகு B நுனியை மேலேயும், D நுனியைக் கீழேயும் வரும்படி மறுபடி மடிக்கவும். (மொத்தம் 3 மடிப்புகள்) படத்தில் கோடிட்ட இடங்கள்.

6. ஊசி நூலைக் கோத்துக் கொண்டு மடித்த இதழின் நடுவே குத்தி, சுழற்சி முறையில் (Rotation Type) சேர்த்துக் கொண்டே வரவும். இதழ்களைக் கோக்கக் கோக்க, இதழ்கள் அடர்த்தியாக அமைந்து, மாலை வளரும்.

7. கோப்பதற்கு முன்பாக, நூலின் நுனியில் ஒரு காகிதத்தைச் சுருட்டிச் சேர்த்துக் கொள்ளவும். இல்லாவிட்டால் கோக்கப்படும் இதழ்கள் அடுக்காகி வளர வளர, கனம் தாங்காது நூலின் கீழ்வழியாக வெளியே வந்து விடும்.

8. மாலை எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதை, கையில் உள்ள பிளாஸ்டிக் கவர்களைக் கொண்டுதான் முடிவு செய்ய வேண்டும். பாமாயில் கவர் குறைவாகவும் பால் கவர் அதிகமாகவும் இருந்தால், இடையிடையே ஒரு அங்குல உயரத்திற்கு பாமாயில் கவர் இதழ்களை வைக்கவும். இடையிடையே பிளாஸ்டிக் மணிகளைக் கோக்கலாம். இதெல்லாம் உங்கள் கற்பனையைப் பொறுத்தது.

9. கவர்கள் நிறைய இருந்தால் மாலையாக முடி போடாது, தோரணமாகச் செய்து தொங்க விடலாம்.


10. மாலைகளாக்க, இரு முனைகளையும் முடிச்சுப் போட்டு ஒரு கலர் சுங்கு வைத்து விடலாம்.

— கே. குப்புராஜ்


குட்டிகள் முதலில்

யானைகள் மிகவும்கூர்மையான அறிவு கொண்டவை. குட்டிகளைக் காப்பதில் எல்லா யானைகளுமே அக்கறை காட்டுகின்றன. இதில் வித்தியாசமே இல்லை. யானைக் கூட்டங்கள் ஆற்றைக் கடக்க நேரிட்டால் முதலில் கூட்டத்தில் உள்ள குட்டியானைகளை அனுப்பிய பின்பே பெரிய யானைகள் ஆற்றைக் கடக்கும். இதற்குக் காரணம், பெரிய யானைகள் முதலில் ஆற்றைக் கடந்து சென்றால் அவற்றின் பளு காரணமாக ஆற்றில் பள்ளம் ஏற்படும். இதனால் குட்டிகள் அந்தப் பள்ளங்களில் தத்தளித்து ஆற்றைக் கடக்க முடியாமல் சிரமப்படும் என்பதற்காகதான் இந்த ஏற்பாடு! குட்டிகளைக் காப்பாற்றுவதில் எவ்வளவு தற்காப்பு யோசனை பார்த்தீர்களா!

— எஸ். விஜயா சீனிவாசன்



கண்டுபிடியுங்கள்!



இங்குள்ள 10 வட்டங்களில் இரண்டு மட்டும் ஒரே மாதிரி தோற்றம் கொண்டவை. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.

விடை : 1, 9

பெரிய காந்தி இவரு!

வே. சபாநாயகம்



"ராஜா! ராஜா! இன்னுமா தூக்கம்? மணி ஏழாகுது. பள்ளிக்கூடம் போக வேண்டாமா?" என்று அம்மா ராஜாவை உலுக்கி எழுப்பினாள். ராஜா விருப்பமின்றி எழுந்தான்.

"போய்ப் பல்லை விளக்கு. காப்பி தர்றேன்!" என்று அம்மா அடுக்களைக்குப் போனாள்.

ராஜா பற்பசையைப் பிரஷ்ஷில் வைத்துக் கொண்டு தெரு நடைக்கு வந்து எட்டிப் பார்த்தான். தாத்தா வழக்கம் போலக் குளித்து விபூதி பூசி சம்மணமிட்டுத் திண்ணையின் கோடியில் அமர்ந்திருந்தார். "தாத்தா! குட்மார்னிங்!" என்று கத்தியபடி அவரிடம் ஓடினான். "வாடா கொழந்தே! இப்பத்தான் எழுந்திரிச்சியா?" என்று பாசத்துடன் அவனை வரவேற்றார் அவர்.

"ராஜா! காப்பி கலந்தாச்சு!" - அம்மாவின் குரல் அவனை அவரிடமிருந்து இழுத்தது. "தோ வர்றேன்!" என்று சொல்லி விட்டு, "ஏன் தாத்தா! நீங்க காப்பி சாப்பிட்டாச்சா?" என்று விசாரித்தான் ராஜா.

தாத்தாவின் முகத்தில் ஒரு சின்ன சோகம் வெளிப்பட்டது. "இன்னும் இல்லேடா கண்ணா! அதனால் என்ன, நீ போய்ச் சாப்பிடு" என்றார் தளர்ந்த குரலில்.

"தோ போய்க் கொண்டு வரேன்" என்று துள்ளிக் கொண்டு உள்ளே ஓடினான் ராஜா. வாய் கொப்பளித்து முகம் கழுவி வந்ததும் அம்மா கொடுத்த காப்பித் தம்ளரை வாங்கியபடி, "ஏம்மா! தாத்தாவுக்கு இன்னும் காப்பி தரலியா?" என்று கேட்டான்.

"உன் வேலையைப் பாரு! இந்த நாட்டாண்மை எல்லாம் வேணாம்" என்று அம்மா சிடுசிடுத்தாள்.

"ஏம்மா. ஏழு மணியாச்சுன்னு எனக்கு மட்டும் காப்பி தர்றியே? தாத்தா பாவம் வயசாச்சே - அவருக்கும் பசிக்குமில்லே. கொடு. அவருக்குக் கொடுத்துட்டு வரேன்" என்று ராஜா முரண்டு பண்ணினான்.

"உதை வாங்காமே குடிச்சுட்டுப் போய் உன் ஹோம்வொர்க்கைப் பாரு. இல்லேன்னா அப்பாவைக் கூப்பிடுவேன்" என்று அம்மா மிரட்டினாள்.

"கூப்பிடேன். அவுருகிட்டியே கேக்கறேன்" என்றான் ராஜா. அதற்குள் குளியலறையிலிருந்து வெளிப்பட்ட அப்பா,



"அம்மா! வர வாண்டுப் பய கையி லேயும் கல் எதுவும் இல்லே!"

"அப்படி நினைக்காதே! அதை அவங்க டவுசர் பையில் போட்டு ஒளிச்சு வைச்சிருப்பானுங்க!"

- மீ. ப. நாராயணன்

"என்ன ரகளை இங்கே? என்னடா ராஜா?" என்றார்.

ராஜா பேசுமுன் அம்மா முந்திக் கொண்டாள்.

"காப்பியக் குடுத்தா பேசாமக் குடிச் சுட்டு வீட்டு வேலை செய்யாம, 'தாத் தாவுக்கு ஏன் தரலை'ன்னு அடம்பிடிக் கிறான். உங்கப்பா பேரப் பிள்ளையைத் தூண்டி விட்டுட்டு சாது மாதிரி உக்காந் திருக்கிறார். அவரைப் போய்க் கேளுங்க என்ன ரகளைன்னு?" என்று பொரிந் தாள்.

அப்பா, தெரு நடைக்குப் போய் எட்டிப் பார்த்தார். ராஜா தன் காப்பித் தம்ளரை அவரிடம் நீட்டி, "நீங்க முதல்லே குடிங்க தாத்தா!" என்று அவரை உலுக்கிக் கொண்டிருந்தான்.

"ஏம்ப்பா! இந்த வயசிலே உங்களுக்கு ஏன் இப்படிப் புத்தி போவுது? அறியாப் புள்ளையைத் தூண்டி விட்டு ஏன் கேக்க ணும்? நீங்களே நேராக் கேட்டாக் காப்பி குடுத்துட்டுப் போறோம்?" என்று தந்தையி டம் சீறினார் அப்பா.

"சிவ சிவா! நான் ஏண்டா அவனைத் தூண்டி விடறேன். பாத்தியாடா கண்ணு! வீணாத் தாத்தாவுக்குத் திட்டு வாங்கித் தாரியே! நீ போய்க் குடி!' என்று தழு தழுத்த குரலில் தாத்தா சொன்னார்.

ராஜா கண்கலங்க, தாத்தாவைப் பார்த்தபடியே உள்ளே போனான். அவ னது பிஞ்சு மனம் தாத்தாவுக்காக உருகி யது. பாவம் தாத்தா! அப்பாவும் அம்மா வும் ஏன்தான் இப்படி அவரை அலட்சி யப்படுத்துகிறார்களோ! தன்னை மட்டும் வேளா வேளைக்கு சாப்பிட வற்புறுத்தும் அம்மா, தாத்தாவை அப்படி வற்புறுத்து வதில்லை. அப்பாவும் தாத்தாவிடம் ஒரு நாளும் பரிவு காட்டியதில்லை. ஒவ்வொரு வேளையும் இப்படித்தான். எல்லோரும் சாப்பிட்டான பிறகு கடைசியாகத்தான் அதுவும். மிச்சமிருந்தால்தான் தாத்தா வுக்கு. தாத்தா இந்த அப்பாவை எப்படி அருமையாக வளர்த்திருப்பார்! இப் போது அம்மா பேச்சைக் கேட்டுக் கொண்டு பசியால் தாத்தா துடித்தாலும் கண்டுகொள்வதில்லை. ஆனால், தாத்தா மிகவும் பொறுமைசாலி. ஒருநாள் கூடப் புகார் செய்வதில்லை. தான் வலியக் கேட்டாலும் ஏதாவது பேச்சை மாற்றி மழுப்பி விடுவார். அப்படி இருக்கையில் அவர்தான் என்னைத் தூண்டி விடுவதாக அம்மா சொல்வது அநியாயம். இதற்கு ஏதாவது செய்தாக வேண்டும். சின்னப் பையனான அவனால் தாத்தாவுக்கு நியா யம் கிடைக்க என்ன செய்ய முடியும்?

பள்ளிக்கூடத்தில் ராஜாவுக்குப் பாடத்தில் கவனமே இல்லை. தாத்தாவின் பிரச்னைக்கு தீர்வு காணுவதிலேயே அவன் மனம் ஆழ்ந்திருந்தது. அம்மா அப்பாவை வழிக்குக் கொண்டு வர வழி தெரியாமல் தவித்தான். அப்போதுதான் ஆசிரியர் காந்தித் தாத்தாவின் சாதனை களில் ஒன்றான 'உண்ணா நோன்பு' பற் றிச் சொன்னார்.

அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சத்யாக்கிரகம் செய்து அவர்களைப் பணியவைத்த மாதிரி, தன் நாட்டு மக்க ளைத் தன் வழிப்படுத்த மேற்கொண்ட உபவாசம் பற்றி எடுத்துச் சொல்லி அதில் அவர்கள் எப்படி அந்த அகிம்சா ஆயுதத் தின் முன்னே மண்டியிட்டார்கள் என்று உணர்ச்சி பொங்க ஆசிரியர் கூறிய போது, ராஜாவுக்குப் பொறிதட்டியது. அவனுடைய பிரச்னைக்கு ஆயுதம் கிடைத்து விட்டது. காந்தித் தாத்தா வழி யில் அதைப் பிரயோகம் செய்து பார்த்து விட அவன் முடிவு செய்தான். மறுநாள் சனிக்கிழமை, விடுமுறை நாள். வீட்டில் அப்பாவும் இருப்பார். உண்ணாநோன்பும் அத்துடன் மௌனவிரதமும் காந்தித் தாத்தா மாதிரி மேற்கொண்டு, இந்த

அப்பா அம்மாவை வழிக்குக் கொண்டு வந்து தாத்தாவுக்கு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று ராஜா முடிவு செய்தான்.

மறுநாள் காலை என்ன எழுப்பியும் ராஜா படுக்கையை விட்டு எழுந்திருக்க வில்லை. அம்மா பயந்து போய் அப்பாவை அழைத்தாள். தூங்குவது போல அதற்கப்புறமும் பாசாங்கு செய்ய முடியாமல் ராஜா எழுந்து உட்கார்ந்தான். "சரி போய்ப் பல் விளக்கிட்டு வா. காப்பி கலக்கறேன்" என்று அம்மா சொல்லி விட்டு உள்ளே போனாள். ஆனால் ராஜா அசையாமல் உட்கார்ந்திருந்தான்.

காப்பியைக் கலந்து கொண்டு வந்த அம்மா அவன் அசையாமல் நிலைகுத்திய பார்வையோடு அமர்ந்திருப்பதைப் பார்த்ததும் பயந்து போனாள். "ஐயோ! என்னடா ஆச்சு உனக்கு? ஐயோ இங்கே வாங்களேன். ராஜா என்னமோ மாதிரி பாக்கறான்" என்ற அவளது ஓலம் கேட்டு அப்பா ஓடி வந்தார். அப்பாவும் அவனை உலுக்கிப் பார்த்து விட்டு அவனது வித்தியாசமான பார்வையையும் செயலையும் கண்டு மிரண்டு போனார்.

அதற்குள் தாத்தாவும் இவர்களது கூக்குரல் கேட்டு உள்ளே ஓடி வந்தார். "என்னடா ராஜா! என்ன பண்ணுதுப்பா உனக்கு?" என்று அவர் ஆதரவுடன் ராஜாவின் தலையில் வருடியதும், ராஜா பாய்ந்து அவர் மடியில் படுத்துக் கொண்டு அவரது இடுப்பைக் கைகளால் அணைத்துக் கொண்டான்.


"பார்த்தீங்களா? எல்லாம் உங்கப்பா செய்யிற வேலைதான்! இவுரு என்னமோ புதுசா இவனைத் தூண்டி விட்டிருக்காரு!" என்று அம்மா ஆத்திரத்துடன் கத்தினாள்.

"ஏம்ப்பா இந்த வயசில உங்களுக்கு இந்த வேண்டாத வேலையெல்லாம்?" என்று அப்பா தாத்தாவிடம் சீறினார்.

"நான் என்னப்பா பண்ணிட்டேன்? இப்பத்தானே நான் உள்ளேயே வர்றேன். என்ன ஆச்சுன்னே எனக்குத் தெரியாதேப்பா!" என்றார் தாத்தா பரிதாபமாக.

"அவ்வளவும் வேஷம்! இவுருதான் ஏதோ சொல்லிக் கொடுத்திருக்காரு. இல்லேண்ணா அவனா இப்படிப் பண்ண மாட்டான்" என்று அம்மா விடாமல் தாத்தாவைக் குற்றம்சாட்டினாள்.

இனிமேலும் பேசாதிருந்தால் தாத்



தாவை இவர்கள் குதறி விடுவார்கள் என்று பயந்த ராஜா தன் மௌனவிரதத்தைக் கைவிட்டான்.

"அம்மா! தாத்தாவை ஏன் வீணாப் பழி சொல்றீங்க? தாத்தா மேல் இப்படி நீங்க ரெண்டு பேரும் பண்ற கொடுமைக்காகத்தான் நானா இந்த மாதிரி உண்ணா விரதம் இருக்கிறேன்" என்றான்.

"என்னது உண்ணாவிரதமா? பெரீய காந்தித் தாத்தா இவுரு! மூஞ்சியைப்



பாரு!" என்று அப்பா கையை ஓங்கினார்.

"மரியாதையா சாப்பிட்டுட்டு வேலையப் பாரு!"

"முடியாது! என்னை அடிச்சே கொன்னாலும் சாப்பிட மாட்டேன். தாத்தாவுக்கு வேளா வேளைக்குச் சாப்பாடு போட்டு ஒழுங்கா நீங்க நடத்தறவரைக்கும் நானும் சாப்பிடப் போறதில்லே.

பட்டினி கிடந்து செத்தாலும் சரிதான்!'' என்றான் ராஜா உறுதியாக.

''ஓகோ! அவ்வளவுக்கு ஆகிப் போச்சா! விடு கழுதையை. கும்பி பசிச்சா தானே சாப்பிடும்'' என்று கண்மண் தெரியாது குதித்த அப்பா, "நீங்க போய் வெளியிலே உக்காருங்க. உங்க ளாலேயே அவன் கெட்டுப் போயிட்டான்'' என்று கோபத்தைத் தாத்தா மீது காட்டி விட்டு வெளியே போனார். அம்மாவும் தாத்தாவை முறைத்தபடியே உள்ளே போனாள்.



தாத்தா ராஜாவைக் கெஞ்சினார். "வேண்டாண்டா ராஜா! நீ சின்னப் பிள்ளை. உனக்குப் பசி தாங்காது. இதனாலே எந்தப் பலனும் ஏற்படாது. எனக்குத்தான் இன்னும் அதிகமாகத் திட்டு விழும். உனக்கும் கஷ்டம்!''

''அதைத்தான் பார்க்கலாம். நான் பட்டினி கிடந்து காட்டறேன். அவங்களை மாத்த வேறே வழியே கிடையாது!'' என்றான் ராஜா முதிர்ந்த அனுபவசாலியைப் போல. தாத்தா தன் முயற்சியில் தோல்வியைக் கண்டு கலங்கிப் போய் திண்ணைக்குத் திரும்பினார். பிஞ்சுப் பேரன் பட்டினி கிடக்கிறான் என்ற நினைப்பு உள்ளத்தை கனக்க வைத்தாலும், அத்தனையும் தனக்காக என்ற நினைப்பு அவருக்கு உள்ளுக்குள் பெருமையாக இருந்தது.

அப்பா வெளியே போகும் போது ராஜாவை மறுபடி ஒரு தடவை மிரட்டி விட்டுப் போனார். தான் மாலை திரும்பி வருவதற்குள் அவன் ஒழுங்காகச் சாப்பிட்டு விட்டு நல்ல பிள்ளையா நடந்து கொள்ளாவிட்டால் கடுமையாகத் தண்டிப்பதாகச் சொல்லி விட்டுப் போனார். அப்பா போன பிறகு அம்மா வந்து தன் பங்குக்கு மிரட்டி, உருட்டி, கெஞ்சி, குஷிப்படுத்தி என்னென்னமோ முயற்சி செய்து பார்த்தாள். ராஜா தன் பிடிவாதத்தை விடவில்லை. அவன் சாப்பிடாததால் அம்மாவும் சாப்பிடவில்லை. தாத்தாவுக்கும் போடவில்லை. ராஜா நேரம் ஆக ஆகத் துவண்டு போனான். நடுப்பகலில் இரண்டாவது வேளை சாப்பிடுகிற நேரத்தில் வெயிலில் போட்ட கீரைத் தண்டாய் வாடிப் போனான். ஆனால், அந்த நிலையிலும் வேதனையை முகத்தில் ஒரு சிறிதும் காட்டவில்லை. கண்களில் தீர்மானமும் லட்சியமும் ஒளி விட்டன.

மாலை இருட்டிய பிறகே அப்பா வந்தார். அம்மாவும் தாத்தாவும் சோர்ந்து போய்க் கவலையுடன் இருப்பதைப் பார்த்ததும் நிலைமை இன்னும் சீர்திருந்தவில்லையென்று அவருக்குப் புரிந்து விட்டது. "என்ன இன்னுமா அவன் சாப்பிடலே?'' என்று அம்மாவிடம் கேட்டார். அம்மா சோகமாகத் தலையை அசைத்தாள். அப்பா, ராஜாவை நெருங்கி, "டேய் ராஜா! இது என்ன முரட்டுப் பிடிவாதம்? இப்போ சாப்பிடப் போறியா இல்லியா?'' என்று அதட்டினார். 'முடியாது' என்கிற மாதிரி ராஜா தீர்மானமாகத் தலையை அசைத்தான்.

"என்ன உனக்கு இவ்வளவு பிடிவாதம்? முளைச்சு மூணு இலை விடலே! உனக்கு இவ்வளவு தைரியமா?'' என்று



வெற்றி கொள்ளுவோம்!

சுமைகள் கூடச் சுவைக ளாக
மாறிடக் கூடும் - நாம்
சுறு சுறுப்பில் தேனீ யாக
மாறிவிட் டாலே.

தடை கள் கூடப் படிக ளாக
ஆகிடக் கூடும் - நாம்
தைரியத் தில் சிங்க மாக
ஆகிவிட் டாலே.

எதிரி களும் நண்பர் களாய்
மாறிடக் கூடும் - நம்
இதய மெலாம் அன்பு மயம்
ஆகிவிட் டாலே.

புதிரே அல்ல உண்மை இது
அன்பு ஒன்றுதான் - இந்தப்
பூவுலகில் அனைவ ரையும்
வெற்றி கொள்ளுமே

உண்மை அன்பு சுறு சுறுப்பு
ஊக்கம் உடைமை - மூன்றும்
ஒரு வருக்கு எந்த நாளும்
இருந்திடும் என்றால்

என்றும் அவர் மற்ற வரை
வெற்றி கொள்ளுவார் - வாழ்க்கை
எப் பொழுதும் அவர்க்கு மிக
இனிமை யாகுமே!

- ரா. பொன்ராசன்

அப்பா ராஜாவின் காதைப் பிடித்துத் திருகினார். ராஜா முகம் சிணுங்கவே இல்லை. பசியோடு வலியும் சேர்ந்தது. அவன் கற்சிலையைப் போல் உணர்ச்சிகளைக் காட்டாது இருந்தான்.

அம்மா ஓடி வந்து, "வேண்டாம், விட்டுடுங்க. அவன் பிடிவாதம் புடிச்சா விட மாட்டான்" என்று தடுத்தாள். தாத்தா தட்டுத்தடுமாறி திண்ணையி லிருந்து இறங்கி வந்து, "வேண்டாம்ப்பா! அறியாக் குழந்தை. பசியாலே வதங்கிப் போயிக் கிடக்கு. நீ வேறே துன்புறுத் தாதே!" என்றார் இறைஞ்சலாக.

"போங்க எல்லாம் அந்தண்டே! எல் லோரும் இப்படிச் செல்லம் குடுத்துக் குடுத்துத்தான் அவன் கெட்டுப் போயிட் டான். கெடக்கட்டும் பட்டினி. எனக்குப் பசிக்குது. வா, வந்து எனக்குச் சாப்பாடு போடு!" என்று அப்பா வெறுப்பாகச் சொல்லி விட்டு அடுக்களைக்குப் போனார். அம்மாவும் கண்களில் நீர் வழிய அவரைப் பின்தொடர்ந்தாள். தாத்தா சோகமாக ராஜாவின் அருகில் அமர்ந்தார்.

அம்மா அழுது கொண்டே பரிமாறியது சாப்பிட உட்கார்ந்த அப்பாவுக்கு எரிச்சலை ஊட்டியது. "ஏன் இப்படி நீயும் அழுது தொலைக்கிறே! 'குழந்தையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிற' மாதிரி எல்லாவற்றிற்கும் நீதான் காரணம்?" என்று எரிந்து விழுந்தார்.

அம்மா விசும்பியபடி, "அப்படித் தான் இருக்கட்டுமே! எப்படியாவது அவனைச் சாப்பிட வையுங்க. எனக்குப் பெத்த வயிறு பிசையுது. பசி தாங்காமல் குழந்தை வாடிப் போயிட்டதைத் தாங்க முடியலை!" என்றாள்.

அப்பா அதை லட்சியம் செய்யாத மாதிரி, சாதத்தைப் பிசைந்து ஒரு கவளம் எடுத்து உண்ணப் போகும் போது, அவருக்கு மனம் வலித்தது. பாவம். பிஞ்சு உடம்பு பட்டினி கிடக்கும் போது மனமார நாம் மட்டும் எப்படிச் சாப்பிடுவது என்று மனசாட்சி உறுத்தியது. வாயருகே கொண்டு போன கை தானாகவே தாழ்ந்தது. கையிலிருந்த சோற்றுக் கவளம் சிதறித் தட்டில் விழுந்தது. அப்படியே நிலை

குத்தி உட்கார்ந்து விட்டார்.

அதற்கு மேல் அம்மாவால் தாள முடியவில்லை. "வாங்க, அவன் விருப்பப் படியே செய்துடுவோம். மாமாவை நாம் அலட்சியப்படுத்தியதும் தப்புத்தான். எனக்கே மனசு உள்ளுக்குள்ளே உறுத்திக் கிட்டேதான் இருந்தது. இனிமே அவரை நல்ல முறையில் நடத்துவோம்னு ராஜா கிட்டே சொல்லிடுவோம்" என்று அம்மா அழுதபடி அப்பாவின் கைகளைப் பற்றி இழுத்தாள். அப்பாவும் அதற்கு மேல் பிடிவாதம் காட்டாமல் எழுந்தார்.

இன்னும் ராஜா வெறித்த பார்வையுடன் மோனத்தவத்தில் இருக்கிற மாதிரி தான் உட்கார்ந்திருந்தான். தாத்தா கண்களில் நீர் வழிய அவனது தலையை வருடிக் கொண்டிருந்தார்.


அப்பாவும் அம்மாவும் ராஜாவின் அருகில் வந்தார்கள். அப்பா ஆதரவாக அவனது முகத்தைத் தன் கைகளில் தாங்கிக் கொண்டு இறைஞ்சலாக, "ராஜா! தாத்தாவை இனிமேல் உன்னைக் கவனிக்கிற மாதிரியே கவனித்துக் கொள்ளுவோம். நீ கவலைப்படாதே! உனக்கு இருக்கிற பொறுப்புக் கூட எங்களுக்கு இல்லாது போயிட்டுது. நீ புத்தி சொன்ன பிறகுதான் எங்களுக்குப் புரியுது. நீ சாப்பிடு. அப்பா - நீங்களும் எங்களை மன்னிச்சுடுங்க" என்று அப்பா குரல் தழுதழுக்கக் கேட்டுக் கொண்டார்.

"ஆமாண்டா கண்ணு! இனிமேல் தாத்தாவை நாங்கள் அருமையாக் கவனிச்சுக்கிறோம். நீ சாப்பிட வா. மாமா! நீங்களும் வாங்க!" என்று அம்மா தேம்பினாள்.

ராஜா நிமிர்ந்து அப்பா அம்மாவைப் பார்த்தான். அவர்கள் கண்களிலிருந்து வழிகிற கண்ணீர் அவர்கள் நடிக்கவில்லை என்பதைக் காட்டியது. பாய்ந்து அப்பா அம்மா இருவரது கழுத்தையும் கட்டிக் கொண்டான். பிறகு தாத்தாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு தேம்பினான்.

"சரிடா ராஜா! அதான் நீ ஜெயிச்சுட்டியே! அப்புறம் என்ன அழுகை? வா, சாப்பிடப் போவோம்!" என்று அவனை வாரி எடுத்துக் கொண்டு அடுக்களைக்கு நடந்தார் தாத்தா. அப்பாவும் அம்மாவும் அழுகையை நிறுத்தி ஆனந்தம் தாண்டவமாட அவருடன் பின்னால் நடந்தார்கள்.

காந்தியும் - காவி உடையும்



ஒரு சமயம் முற்றும் துறந்த முனிவர் ஒருவர் காந்தியடிகளின் ''சபர்மதி'' ஆசிரமத்தை பார்ப்பதற்கு வந்திருந்தார். ஆசிரமத்தின் விதிமுறைகளும் ஒழுங்கும் அவரது உள்ளத்தைக் கவர்ந்தன. அங்கு நிலவிய அமைதி அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. காந்தியடிகளிடம், ''நான் ஆசிரமத்தைச் கற்றிப் பார்த்தேன். எனக்கு மிகவும் பிடித்து விட்டது. இங்கேயே தங்கிக் கொள்ள விரும்புகிறேன்'' என அனுமதி கேட்டார் அந்தக் காவி உடையணிந்த துறவி.

''தாங்கள் தாராளமாய்த் தங்கிக் கொள்ளலாம். ஆனால் ஒரு நிபந்தனை. காவி உடையை மாற்ற வேண்டும்'' என்றார் காந்தியடிகள்.

''காவி உடை மீது ஏன் இவ்வளவு வெறுப்பு?''

''நமது நாட்டில் காவி உடை அணிந்தவர்களுக்கு மற்றவர்கள் பணிவிடைகள் செய்வது வழக்கமாய் இருந்து வருகிறது. இந்த ஆசிரமமோ மற்றவர்களுக்குத் தொண்டு செய்வதற்காகவே இருக்கிறது அதோடு, இங்கே எல்லோரும் உழைத்துச் சாப்பிட வேண்டும். காவி உடையில் இருக்கும் உங்களை யாரும் வேலை வாங்கத் தயங்குவார்கள். அதனால்தான் காவியை மாற்றச் சொன்னேன்'' என்றார் காந்தியடிகள்.

- சுகாராஜ், மதுரை - 2.

மன்னன் பெயரை!

சிவபுரி மன்னரின் சபை கூடியிருந்தது. விவசாயி ஒருவன் ஒரு கோழியுடன் மன்னன் முன்னால் வந்து வணங்கினான்.

"என்ன வேண்டும்?" என்று கேட்டார் மன்னர்.

"உங்கள் பெயரை வைத்து ஆடு புலி ஆட்டம் அடினேன். ஜெயித்து விட்டேன். அதுதான் இந்தக் கோழி. நியாயப்படி உங்கள் பெயரை வைத்து ஆடி வென்றதால் இது உங்களுக்கே உரிமையானது. பெற்றுக் கொள்ளுங்கள் மன்னவா" என்று கோழியைப் பணிவாக நீட்டினான் விவசாயி.

மன்னர் பெருமையோடு அவையோரைப் பார்த்து விட்டு மந்திரியையும் பார்த்தார்.

"மன்னா, இந்தக் கோழியை வாங்கிக் கொள்ளாதீர்கள். மன்னன் பெயரை வைத்து சூதாடியது தவறு என்று இவனைக் கண்டித்து, எச்சரித்து அனுப்புங்கள்" என்றார் அமைச்சர் இரகசியமாக.

"என் பெயருக்கு எத்தனை அதிர்ஷ்டம் இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது. உங்களுக்கு என் பேரில் பொறாமை. அதனால்தான் வாங்கிக் கொள்ளாதே என்று கூறுகிறீர்கள். இந்த விஷயத்தில் நான் உங்கள் யோசனையைக் கேட்கப் போவதில்லை," என்று சிடுசிடுத்த மன்னர் பெருமை பொங்கக் கோழியை வாங்கிக் கொண்டார்.

அடுத்த நாள் சபை கூடியது. அதே விவசாயி ஓர் எருமையுடன் வந்தான்.

அவைக்குள் எருமையைக் கூட்டி வரக் கூடாது என்று காவலர்கள் தடுத்து விட்டனர். விவசாயி. தான் மட்டும் உள்ளே வந்து மன்னரை வணங்கினான்.

"மன்னவா, உங்கள் பெயரைக் கூறினாலே எல்லாக் காரியங்களும் வெற்றி பெறுகின்றன. நேற்று உங்கள் பெயரைக் கூறி ஆடுபுலி ஆட்டம் ஆடினதும் கோழியை ஜெயிச்சேனா? இன்று உங்கள் பெயரைச் சொல்லி தாயக் கட்டம் ஆடினேன். ஜெயித்தேன். பரிசுப் பொருளாக எருமை கிடைத்தது. அவைக்குள் கொண்டு வரக் கூடாது என்று தடுத்து விட்டார்கள். உங்கள் பெயரை வைத்து ஆடி ஜெயித்த பரிசுப் பொருள் உங்களையே சேர வேண்டியதுதான் முறை. ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றான் விவசாயி.

"இப்பொழுதாவது மன்னர் பெயரை வைத்து சூதாடக் கூடாது என்று கண்டித்து, இவனை எச்சரித்து அனுப்புங்கள். உங்களுக்குப் பெருமையாக இருக்கிறது என்பதற்காகத் தவறான ஒரு வழக்கத்தை ஊக்குவிக்காதீர்கள்" என்று கெஞ்சினார்

காசி மன்னரின் அவையில் திருடர்களைப் பற்றி ஓர் பிரச்னை எழுந்தது.

"எல்லோரும் அவரவர்கள் பாதுகாப்பாகவும் புத்திசாலித்தனமாகவும் இருந்து விட்டால், திருடர்களுக்குத் திருட வாய்ப்பே கிடைக்காது" என்றார் மன்னர். அமைச்சர் இதை ஏற்கவில்லை.

"எத்தனைதான் பாதுகாப்புச் செய்து கொண்டாலும் திருடன் புத்திசாலியாக இருந்தால், திருடு போவதைத் தடுக்கவே முடியாது" என்றார் அமைச்சர்.

அரசர் இதை ஏற்க மறுத்தார். அரசரின் தளபதி, அரசரின் உறவுக்



அமைச்சர்..

மன்னன் கேட்க வில்லை. விவசாயி யைக் கௌரவிக்கும் வகையில் எழுந்து அவைக்கு வெளியே வந்து எருமையின் தலைக் கயிற்றை வாங்கிக் கொண்டார் பெருமையோடு.

இரண்டு நாட்கள் ஓடின. அவை கூடியது. அதே விவசாயி அன்றும் வந்தார். ஆனால் முகத்தில் மகிழ்ச்சி இல்லை.

"இன்று என் பெயரை வைத்து என்ன ஜெயித்தீர்கள்?' என்று பெருமை பொங்கக் கேட்டார் மன்னர்.

"இன்று நான் எதையும் ஜெயிக்க வில்லை மன்னா. உங்கள் பெயரைச் சொல்லி, என் வீட்டையே பணயமாக வைத்து ஆடினேன். தோற்றுப் போனேன். ஆயிரம் வராகன் கொடுத்தால்தான் வீட்டைத் திரும்பத் தருவேன் என்று ஜெயித்தவன் கூறிவிட்டான். என்னிடம் பணம் இல்லை. மன்னரின் பெயரை வைத்து ஆடித் தோற்றதால், மன்னர் பணம் தருவார், வாங்கித் தருகிறேன் என்று அவனையும் இதோ அழைத்து வந்துள்ளேன்'' என்றான் விவசாயி.

மன்னனின் முகம் வாடிப் போனது. அமைச்சரைப் பார்த்தார்.


''எச்சரித்தேன். கேட்கவில்லை. பலனை அனுபவித்தே தீரவேண்டும். பணத்தைக் கொடுத்து இவனை அனுப்பி விட்டு 'மன்னரின் பெயரைச் சொல்லி யாரும் சூதாடக் கூடாது. மீறினால் கடும் தண்டனை' என்று உத்தரவு பிறப்பியுங்கள்' என்றார் அமைச்சர்.

சூடுபட்ட அரசர் அப்படியே செய்தார்.

- ஜி.இந்திரா

காரரே! அவரும் அரசரை ஆதரித்தார். மற்ற அதிகாரிகளும், பிரபுக்களும் கூட அரசர் கூறியதே சரி என்று ஆமாம் போட்டனர். விஷயம் பெரிதாக வளர்ந்தது. முந்தின நாளன்று பிடிபட்ட

புத்திசாலி



முகமூடித் திருடன் ஒருவனைச் சிறையில் இருந்து அழைத்து வரச் சொன்னார் அரசர். அவன் வந்ததும் அவனிடம் நூறு பொற்காசுகளைக் கொடுத்து, "என்னுடைய தலைநகரில் இன்னும் ஒரு வாரத்திற்குள் பிடிபடாமல் திருடிக் காட்டினால் உனக்கு மன்னிப்பு" என்று உறுதியளித்து அனுப்பி வைத்தார்.

அடுத்த நாள் காலை தளபதியாரின் மாளிகை வாசலில் ஒரு பல்லக்கு வந்து நின்றது. தடபுடலாக உடையணிந்த ஒரு பிரபு அதில் இருந்து இறங்கினார்.

"தளபதியார் ஊரில் இல்லையே! இன்று காலை அவசர விஷயமாக பக்கத்து ஊர் போயிருக்கிறார்" என்றனர் காவலர்கள்.

தகவல் தளபதியாரின் மனைவிக்கு எட்ட அவள் வந்து விசாரித்தாள்.

"நான் தளபதியின் பால்ய நண்பன். கடல் வாணிபம். தளபதியையும் பார்த்து விட்டு அவர் உதவியோடு மன்னரையும் தொழில் முறையாகக் காண வந்தேன்" என்றார் பிரபு.

"மாலையில் தளபதி திரும்பி விடுவார். பார்த்து விட்டுப் போகலாமே?" என்றாள் தளபதியின் மனைவி. பிரபுவின் ஆர்பாட்டம், தோரணை எல்லாமாகச் சேர்ந்து அவளுக்கு வந்தவன் பெயரில் புது மரியாதையை ஏற்படுத்தி இருந்தது.

"சரி. என்னுடைய பெட்டியை இங்கேயே வைத்து விட்டுப் போகிறேன். மன்னருக்கு ஏதாவது விலை மிக்க காணிக்கைப் பொருள்களை வாங்க விரும்புகிறேன். எனக்கு இந்த ஊர் புதிது. அதனால், வழிகாட்ட யாராவது

ஒரு காவலாளியை அனுப்ப இயலுமா?" என்று குழைந்து கேட்டார் பிரபு.

வீட்டில் இருந்த பணியாளர்களுள் ஒருவரை அழைத்த தளபதியின் மனைவி, பிரபுவுடன் அனுப்பி வைத்தாள்.

பிரபு பல்லக்கில் ஏறிக் கொண்டு பணியாளனுடன் ஒரு நகைக் கடைக்குள் நுழைந்தார். தளபதியின் வீட்டுப் பணியாளரையே அழைத்து வந்திருப்ப தால் "மிகப் பெரிய இடம்" என்று எண் ணிய வியாபாரி, பிரபு கேட்டதை யெல்லாம் எடுத்து வைத்து கடையையே திருப்பிப் போட்டுக் காட்டினான்.

"மன்னருக்குக் காணிக்கையாக சில நகைகளைத் தரவே இவைகளை எடுத் திருக்கிறேன். அரசியாருக்கும் பரிசளிக்க சிலவற்றை எடுக்க விரும்புகிறேன். நான் தேர்ந்தெடுப்பதை விட தளபதியாரின் மனைவி தேர்ந்தெடுத்தால் இன்னும் பொருத்தமாக இருக்கும். பெண்கள் விஷயமாயிற்றே? அதனால் இவற்றை என்னுடன் அனுப்பி வையுங்கள். நான் வரும் வரை தளபதியாரின் பணியாளர் இங்கே இருப்பான்" என்றார் பிரபு.

நகைக் கடைக்காரருக்கு ஒரே மகிழ்ச்சி. ஒரே தடவையில் இத்தனை நகைகளை விற்க வாய்ப்புக் கிடைக் கிறதே! அரிய வாய்ப்பு இல்லையா? அழகாக கையடக்கமாக பேக் செய்து மரியாதையுடன் பிரபுவை அனுப்பி வைத்தார்.

பிரபு போனவர் போனவர்தான். தன் பணியாளனை மீட்க தளபதி பெருந் தொகையை இழக்க வேண்டியிருந்தது. நகை வியாபாரி தளபதியின் வீட்டில் விட்டுச் சென்ற பெட்டிக்குள் பத்து முழுச் செல்கல்களே இருந்தன! தலை நகரே பரபரப்பானது.

பிரபுவாக வந்த முகமூடி அடுத்த நாள் மன்னரை வணங்கி, நகைகளைத் திரும்ப அளித்தான்.

"அமைச்சரே, புத்திசாலி புத்தி சாலிதான்! அவன் திருடனாக இருந் தாலும், புலவனாக இருந்தாலும் அவனை வெல்ல யாராலும் முடியாது" என்று கூறிப் பரிசளித்த மன்னர் முகமூடித் திருடனுக்கு மன்னிப்பளித்தார்.

- சி. பழனியப்பன், வாரணவாசி.

நட்டு வைப்போமா?

நெட்டை குட்டை தென்னை மரம்
நட்டு வைப்போமா?
நட்டு வைப்போமா? - அது
பட்டுத் தான் போகாமல்
பாதுகாப் போமா? - பாப்பா
பாதுகாப்போமா?

கிட்ட வரும் ஆடு மாட்டை
விரட்டிட லாமா? - பாப்பா
விரட்டிடலாமா? - அதைச்
சுற்றியொரு முள் வேலி
போட்டிடலாமா? - பாப்பா
போட்டிடலாமா?

நட்டமில்லா உழைப்பு இது
நம்பி செய்வோமா? - பாப்பா
நம்பி செய்வோமா? - தினம்
பட்ட பாட்டின் பலன் தன்னை
பார்த்து மகிழ்வோமா? - பாப்பா
பார்த்து மகிழ் வோமா?



- ஜெயதுரை பரந்தாமன்

அவாந்தி

அவாந்தி சீனாவில் வாழ்ந்த அறிவாளி. அவாந்தி என்பதன் அர்த்தமும் அறிவாளி என்பதுதான். மதியூகமும் திறமையும் கொண்ட இவரைப் பற்றிய கதைகளை சீனமக்கள் ஆர்வமாகக் கேட்டு வருகிறார்கள். நீதி, நேர்மை, அன்பு, கருணை, திறமை என்பனவற்றை வலியுறுத்தும் அவாந்தியின் கதைகளில் ஒன்று இதோ.

பெரிய பணக்காரர் ஒருவரிடம், ஒருமுறை பானை ஒன்றை இரவல் வாங்கினார் அவாந்தி. அந்தப் பணக்காரன் பேராசையும் நயவஞ்சகமும் கொண்டவன் தன்னிடம் அவாந்தி வாங்கிய பானைக்கு ஒவ்வொரு நாளும் வாடகை தர வேண்டும் என்று பணக்காரன் வற்புறுத்திக் கூறினான். அவாந்தியும் அதற்குச் சம்மதித்தார்.

சில நாட்கள் சென்றன. பணக்காரனின் வீட்டிற்கு அவாந்தி மகிழ்ச்சியோடு வந்தார். பணக்காரனைப் பார்த்து, "நீங்கள் கொடுத்த பானை, குட்டி போட்டிருக்கிறது" என்று கூறினார். இதைக் கேட்ட பணக்காரன் சத்தம் போட்டான். அவாந்தியைப் பார்த்து, "அறிவு கெட்ட மனிதனே, எங்காவது பானை, குட்டி போடும் வழக்கம் உண்டா? அது உயிரில்லாத பொருளல்லவா" என்றான்.

அவாந்தி தனது கையிலிருந்த சிறிய பானை ஒன்றைப் பணக்காரனிடம் காண்பித்தார். "நான் சொல்வதை நீங்கள் நம்புங்கள். இதோ இந்தச் சிறிய பானைதான். நீங்கள் கொடுத்த பானை போட்ட குட்டிப் பானை" என்று கூறினார். "அம்மாப் பானையைப் போல இந்தக் குட்டிப் பானை எவ்வளவு



அழகாயிருக்கிறது! தொட்டுத்தான் பாருங்களேன்" என்று தொடர்ந்து கூறினார் அவாந்தி.

பேராசை கொண்ட பணக்காரனுக்கு அளவுக்கு மீறிய மகிழ்ச்சி. பானைக்கு உரிய வாடகையுடன் தனக்கு ஒரு சிறிய பானையும் கிடைக்கப் போகிறது என எண்ணி "நீ சொல்வது முற்றிலும் உண்மை தான்" என்று கூறினான். அத்துடன் நில்லாமல், "நான் தந்த பானையை நீ இன்னும் நன்றாகக் கவனித்துக் கொள். அப்போது தான் அது இன்னும் பல குட்டிகள் போடும்" என்றும் கூறினான்.

அவாந்தி தனக்குள்ளேயே சிரித்துக் கொண்டார். "அப்படியே செய்கிறேன்" என்றார்.



சில நாட்கள் சென்றபின் அவாந்தி மீண்டும் பணக்காரனிடம் வந்தார். அவாந்தியின் முகம் கவலையால் நிறைந்திருந்தது. பணக்காரனைப் பார்த்து விம்மி, விம்மி அழத் தொடங்கினார். "ஒரு கவலை தரும் செய்தி" என்று அழுகையோடும் விம்மலோடும் கூறினார். "என்ன விஷயம்?" என்று கேட்டான் பணக்காரன்.

"நீங்கள் எனக்குத் தந்த பானை இறந்து விட்டது" என்றார் அவாந்தி அழுதபடியே.

பணக்காரன் அவாந்தியை ஆத்திரத்தோடு "முட்டாள் மனிதனே, எங்காவது பானை செத்துப் போகுமா?" என்று கேட்டான்.

அவாந்தி சாதாரணமாக, "ஐயா, ஒரு பானையால் குட்டி போட முடியும் என்றால் நிச்சயமாக இறந்து போகவும் கூடுமல்லவா?" என்றார்.

அவாந்தியின் தந்திரச் செயலை அப்போதுதான் பணக்காரன் உணர்ந்து கொண்டான். அவன், தந்திரத்தை தந்திரத்தால் வெல்ல எண்ணினான். "அப்படியானால் இறந்துப் போன பானையை என்னிடம் திருப்பிக் கொடுத்து விடு" என்றான்.

அவாந்தி கவலையோடு பணக்காரனைப் பார்த்தார். "பானை இறந்து போனதும் நான் அதை உடனே புதைத்து விட்டேனே! என்றார்.

"என்னிடம் இந்த ஏமாற்று வேலையை வைத்துக் கொள்ளாதே? எனது பானையை மரியாதையாகத் திருப்பிக் கொடுத்துவிடு" என்று பணக்காரன் கோபத்தோடு கத்தினான்.

இப்படியே இருவரும் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொண்டனர். இந்தச் சத்தத்தைக் கேட்டு அண்டை அயலார்கள் கூடி விட்டனர். பணக்காரன் அவாந்தியைப் பார்த்து மெல்லிய குரலில், "அவாந்தி நான் உன்னிடம் குட்டிப் பானை வாங்கியதை யாரிடமும் கூறி விடாதே. ஏனென்றால் என்னை எல்லோரும் திட்டுவார்கள். நான் தந்த பானையை நீயே வைத்துக் கொள்" என்றான்.

அதற்குள் அங்கு கூடியிருந்தவர்களுக்கு விஷயம் புரிந்து விட்டது. பணக்காரனின் பேராசைக்கு சரியான பாடம் கற்பித்த அவாந்தியை அனைவரும் பாராட்டினர். பணக்காரன் தலையைக் குனிந்து கொண்டு அங்கிருந்து சென்றான்.

- தக்கோலன்

நான் எடுக்கலே!



வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களின் பைகளையும் சோதித்துப் பார்த்தாகி விட்டது. கோபியின் சிங்கப்பூர் பேனா மட்டும் கிடைக்கவில்லை.

கோபியையே உறுத்துப் பார்த்தான் வகுப்புத் தலைவன் பாலு.

“என்ன கோபி... நீ வீட்டுல இருந்து கிளம்பும் போது பேனாவை ஞாபகமா எடுத்து வைத்தாயா?”

“ஆமாம் பாலு எடுத்து வச்சேன்!”

“சரி! தங்கப்பன்தான் பேனாவ எடுத்திருப்பான்னு எப்படிச் சொல்ற?”

“நேத்தைக்கு அந்தப் பேனாவைக் காட்டினப்போ அவன்தான் ரொம்ப நேரம் ஆசையா பார்த்துக்கிட்டு இருந்தான்...”

புன் முறுவல் பூத்தான் பாலு.

“என்ன கோபி ஒரு பொருள் அழகானதாவோ, வித்யாசமானதாகவோ இருந்தா, அதப் பார்க்கறவங்க ஆசையாகவோ, ஆச்சர்யமாகவோ பார்க்கறது இயல்பு தானே? அப்படிக் கூட தங்கப்பன் பர்த்திருக்கலாம் இல்லையா?”

“இல்ல... நான் பேனாவைத் திருடல, நான் திருடன் இல்ல!” என்றான் தங்கப்பன்.

அவன் மேல் இரக்கம் கொண்ட பாலு கோபியிடம் திரும்பினான்.

“கோபி, தீர விசாரிக்காம யார் மேலயும் பழி போடக் கூடாது? கண்டிப்பா உன்னோட பேனா கிடைக்கும்.”

சொன்ன பாலு தீவிரமாகச் சிந்தித்தான்.

ஆசிரியர் விடுப்பு எடுத்திருந்த தால் அன்று அவர் வரவில்லை. வகுப்புத் தலைவனான பாலு மேற்பார்வையிட, மாணவர்கள் படிக்க வேண்டிய பாடங்களை அமைதியாகப் படித்துக் கொண்டிருந்தனர்.

அப்போதுதான் கோபி தன் சிங்கப்பூர் பேனாவைக் காணோம் என்றும், அதைத் தங்கப்பன்தான் எடுத்திருப்பான் என்றும் குற்றம் சாட்டினான்.

அன்று மாலை.

வீட்டிற்குச் செல்லும் வழியில் திடீரென்று கோபியை நிறுத்தினான் பாலு.

“கோபி ஒரு நிமிடம் நில்லேன் அங்கே பார்....” என்றான் பாலு.


அவன் சுட்டிய இடத்தைப் பார்த்தான் கோபி.

குயவர் ஒருவர் மண் பாண்டம் தயாரிப்பதில் முனைப்பாய் இருந் தார். அவர் அருகே விதம்விதமான வடிவங்களிலும், பலவிதமான அளவுகளிலும் மண்பாண்டங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

பாலு பேசினான்.

“கோபி, இந்தக் குயவர் எத்தனையோ வடிவங்கள்ல மண் பாண்டங்களைத் தயாரிக்கிறார். ஆனா அவைகளோட ஒரே அடிப்படை நோக்கம் தண்ணீர் நிரப்பி வைப்பதுதான். இந்தப் பாண்டங்களில் நீர் நிரப்பும் போது அந்தந்த பாண்டங்களின் வடிவத்திற்கேற்ப நீரும் வடிவம் கொள்கிறது. நீருக்கு தனி வடிவம் இல்லை.

(அரு. வி. சிவபாரதி)



அது போலத் தான் ஒருவன் வளரும் சூழ்நிலைக்கேற்பத்தான் அவன் நல்லவனாகவோ, கெட்டவனாகவோ மாறுகின்றான். என்றோ ஒருநாள் சிறுவனாக இருக்கும்போது தங்கப்பனின் தந்தை திருடினார் என்பதற்காக அவர் மகனும் திருடனாகத்தான் இருப்பான் என்று சொல்வது அறிவீனமாகும். ஆழ்ந்து யோசித்துப்பார். உன் தவறு உனக்கே புலப்படும்..."

பாலு சொன்னதை நன்கு மனத்தில் வாங்கிக் கொண்டான் கோபி. அதன் விளைவு தனக்குள் முதல் முறையாகச் சிந்திக்கத் தொடங்கினான்.

மறுநாள் காலை....

பாட வேளை ஆரம்பித்தவுடன் வகுப்பிற்குள் நுழைந்த ஆசிரியர் தேவபாலன், "கோபி இங்கே வா?" என்று அழைக்கவும் அவர் அருகில் விரைவாக சென்றான் கோபி. அவர் கையில் கோபியின் 'அந்த' சிங்கப்பூர் பேனா!

"இந்தா உன் பேனா. நேற்று காலை விடுப்பு விண்ணப்பத்தை எழுதுவதற்காக உன்னிடம் பேனாவை வாங்கி விட்டுத் திருப்பிக் கொடுக்க மறந்து விட்டேன்...."

பேனாவை வாங்கிக் கொண்ட கோபி, தலை குனிந்தவனாகத் தன் இருக்கைக்குச் சென்று அமர்ந்தான்.

பாலு அறிவுறுத்தினான்.

"கோபி, தங்கப்பனுடைய களங்கமற்ற மனதை நீ புண் படுத்திவிட்டே! தங்கப்பனிடம் மன்னிப்புக் கேள்!"

கோபி சிறிது தயங்கினான்.


"கோபி தவறு செய்வது பெரிய குற்றமல்ல. ஆனால் அது தவறு என்று தெரிந்த பிறகு அதை வெளிப்படையாக ஒப்புக் கொண்டு பாதிக்கப்பட்டவனிடம் மன்னிப்புக் கேட்பதுதான் மனித நேர்மை" என்றான் பாலு.

கோபி தங்கப்பனுக்கு அருகே சென்றான். அவனுடைய தயக்கம் போன இடம் தெரியவில்லை.

"தங்கப்பா, தீர விசாரிக்காம நான் தவறு பண்ணி விட்டேன். தயவு செய்து என்னை மன்னித்து விடு!"

"பரவாயில்லை கோபி... ஆனா நீ நேத்தைக்குத் தெறிச்ச அந்தத் தீப்பொறி என்னைப் புதிய குற்றவாளிக் கோணத்தில் பார்க்க வழிவகுத்து விட்டது. இனிமேல் நம்முடைய வகுப்பில் எது காணாமல் போனாலும் எல்லோரும் என்னைத் தான் முதலில் சந்தேகிப்பார்கள். அதனால் பேனாவை நான் திருடவில்லை என்பதை எல்லாரும் அறியக் கூறிவிடு. எனக்கு அது போதும்" என்றான் தங்கப்பன்.

ஆசிரியருடன் எல்லோர் முன்னிலையிலும் உண்மையை உணர்த்தி மன்னிப்புக் கேட்டுக் கொண்டான் கோபி.



"**யா**ராவது குமார் பத்துப் பதினைந்து அடி உயரமான இடத்திலிருந்து கீழே குதிக்கச் சொன்னால் என்ன பண்ணுவீர்கள்? மறுத்து விடுவீர்கள். மனத்தில் பயம். காரணம் அதுதானே?

ஆனால் விமானத்தில் பதினைந்தாயிரம் அடி உயரத்திலிருந்து பாராசூட்டை விரிக்காமல் தைரியமாகக் குதித்து பலவித சாகசச் செயல்களைச் செய்து காட்டும். 'ஸ்கை டைவிங்' எனும் விளையாட்டு இன்று உலகம் முழுவதும் பிரபலமாகி வருகிறது. இந்த மயிர்க்கூச்செரியும் சாதனைச் செயல்களை ஸ்டார், கேபிள் போன்ற டீ.வி. நிகழ்ச்சிகளிலும் பார்த்து வியந்திருக்கலாம்.


பாரா ஜம்ப்பிங் எனப்படும் 'பாராசூட் விளையாட்டு, ஸ்கை டைவிங் ஆகிய இரண்டுமே விமானத்திலிருந்து குதித்து சாதனை புரிவதுதான் என்றாலும் ஸ்கைடைவிங் செய்பவர்கள் விமானத்திலிருந்து விடுபட்டதும் தங்களது பாராசூட்டை உபயோகப்படுத்தாமல் பூமியை நெருங்கும் போதுதான் குடையை விரிக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதில் ஏதாவது கோளாறு ஏற்பட்டு பாராசூட் விரிய மறுத்து விட்டால் அவ்வளவுதான்... சம்பந்தப்பட்ட சாதனை வீரர் உடல் சிதறித் தனது முடிவைத் தேடிக் கொள்ள வேண்டியதுதான்! இப்படி எத்தனையோ நடந்திருக்கிறது!

ஒருவர் எடுத்த எடுப்பிலேயே ஸ்கை டைவிங்கைச் செய்து விட முடியாது. முதலில் மருத்துவப் பரிசோதனை. பிறகு மைதானத்தில் மூன்று நாள் பயிற்சி. பின்னர் ஃபிராங்க் பொஸிஷன் பயிற்சி என்று பல்வேறு பயிற்சிகள். அதற்குப் பிறகுதான் வானில் மிதக்க முடியும். முதல் ஜம்ப் தரையிலிருந்து நான்காயிரம் அடி உயரத்திலும் பின்னர் படிப்படியாக உயரம் அதிகரிக்கப்பட்டு பதினான்காயிரம் வரை உயர்த்தப்படும்.

முன்பெல்லாம் கைகளால் இயக்கும் பாராசூட்கள் பயன்படுத்தப்பட்டன. தற்சமயம் இதிலும் தானியங்கி என்னும் ஆட்டோமேடிக் முறை வந்து விட்டது. 'ஸ்பிரிட் ஈகிள்' எனப்படும் இதன் விலை 30லிருந்து 40 ஆயிரம் ரூபாய்களாகும். இதில் திசைமாறிச் செல்லும் வசதி மற்றும் ஃபார்வர்டு ஸ்பீடைக் குறைக்கும் வசதி எல்லாம் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது. ஸ்கை டைவிங் செய்பவர்களின் முதல் எதிரி தந்திக் கம்பங்களும், மின்கம்பிகளும்தான். எனவே, முடிந்தவரை ஊரைவிட்டு ஒதுங்கியே இந்த வீர விளையாட்டில் ஈடுபடுகின்றனர்.

- ஏ. ஜே. ஜப்பார்

THE SHAKUNI PLAN



WHAT IS IT?

Find out in the OCTOBER issue of

GOKULAM

The monthly magazine for children

A new mystery serial begins in the OCTOBER issue.

Write to :
GOKULAM,
47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Madras - 600 097.
For Subscription details

BUY YOURSELF A COPY TODAY!

96 pages for just Rs. 3/-

பதினோரு வயதேயான அந்தப் பள்ளி மாணவியைப் பார்த்து, "என்ன வேண்டும் உனக்கு?" என்று கேட்டாள் சக்கரவர்த்தினி.

"என்ன வேண்டுமென்று என்னைக் கேட்கிறீர்களே மகாராணியாரே, என்னைப் பார்த்தாலே தெரியவில்லையா எனக்கு நல்ல உடையில்லை, நல்ல உணவில்லை என்று? எனக்குச் சோறும், நல்ல உடையும்தான் வேண்டும்" என்றுதான் அந்தப் பள்ளிச் சிறுமி கேட்பாள் என்று மகாராணி எதிர்பார்த்தார்.

ஆனால் சிறுமி அப்படிக் கேட்கவில்லை.

"எங்கள் நாடு தங்கள் ஆட்சிக்குள் வந்த பின்னர் எங்கள் உரிமைகள் எல்லாம் பறிக்கப்பட்டு விட்டன. உங்களுடைய தாய்மொழியில்தான் நாங்கள் பேச வேண்டும் என்று அரசின் கடுமையான உத்தரவு. மீறினால் கடும் தண்டனை. எனவே, எங்கள் சொந்த மொழியை நாங்கள் இரவிலே அதிகாரிகளின் காதுகளில் விழுந்து விடுமோ என்று பயந்து நடுங்கிக் கொண்டே வீட்டிலே பேச வேண்டிய வெட்கக்கேடான நிலையிலிருக்கிறோம். இந்த இழிநிலையைப் போக்க வேண்டும். எங்கள் தாய்மொழியை நாங்கள் தாராளமாகப் பேச உரிமை கொடுங்கள். எங்கள் நாட்டுக்கு விடுதலை கொடுக்கா விட்டாலும் முதலில் எங்கள் தாய் மொழிக்காகிலும் விடுதலை கொடுங்கள்" என்று கண்ணீர் விட்டவாறே கெஞ்சினாள் சிறுமி.

மகாராணியார் திடுக்கிட்டாள்.

சிறுமியின் துணிவையும், திறமையையும், நாட்டுமொழிப்பற்றையும் கண்டு மகாராணியார் வியந்தார். இருந்தபோதிலும் அச்சிறுமியின் வேண்டுகோள் சாதாரணமானதல்லவே. அரசர் எடுத்த நடவடிக்கை அல்லவா அது?

அதற்காக, நாமே என்ன வேண்டும் என்று கேட்டுவிட்டு, சிறுமியின் வேண்டுகோளை "முடியாது. வேறு ஏதாவது கேள்" என்று சொல்லி விடத்தான் முடியுமா? அப்படிச் சொல்வது அவமானமாயிற்றே! எப்படி இதைச் சக்கரவர்த்தியிடம் சொல்லிச் சிறுமியின் வேண்டுகோளை நிறைவேற்றுவது?" என்று ஏங்கினாள் மகாராணி. என்றாலும் 'ஆகட்டும், குழந்தாய். உன் ஆவலைப் பூர்த்தி





தெரியும்?

செய்கிறேன்" என்று சிறுமிக்கு உறுதி யளித்து விட்டு அவளை அணைத்து முத்தமிட்டு நகர்ந்தார் மகாராணி யார்.

இது நடந்தது - ஐரோப்பாவில். முதல் உலகப் போருக்குப் பின் ஆஸ்திரியா, ஜெர்மானிய சர்வாதிகாரி கெய்சரின் ஆட்சியின் கீழ்வந்தது. ஆஸ்திரிய நாடு கொடுங்கோலாட்சிக் குட்பட்டது. ஜெர்மன் மொழியே அரசியல் மொழியானது, அதுமட்டுமா? எல்லோரும், எங்கும், எப்போதும் கண்டிப்பாக ஜெர்மன் மொழியி லேயே பேச வேண்டும். சொந்த மொழி யில் பேசக் கூடாது. மீறினால் கடுமை யான தண்டனை என்ற கட்டளைகளும் பிறந்தன.

இந்த நிலையில் கெய்சரின் மனைவி ஆஸ்திரிய நாட்டிலுள்ள அல்சோனான் மாநிலத்தைச் சேர்ந்த ஓர் ஊரிலுள்ள தொடக்கப் பள்ளிக்குச் சென்றாள். அங்குள்ள ஏழை மாணவி ஒருவளிடம் அவளுக்கு என்ன வேண்டும் என்று கேட்டறிந்தாள். அந்த மாணவிதான் பதிலளித்து, அரசியாரை அயர வைத்தாள்.

சிறுமி கேட்டது எல்லோர் மனத்திலும் இருந்த கோரிக்கைதான். எனினும், அவ்வளவு வெளிப்படை யாகக் கேட்க யாருக்கும் துணிவு பிறக்க வில்லை. ராணியார் சென்ற பிறகு, சிறுமியின் தைரியத்திற்காக எல்லோரும் பாராட்டினாலும், அவளுக்கு ஏதாவது தீங்கு வருமோ என்று அஞ்சினார்கள். ஆனால் அவர்கள் அஞ்சியது போல் அப்படி எதுவும் நடக்கவில்லை.

சிறுமியின் கோரிக்கை நிறைவேறியது. ஆஸ்திரிய மக்களுக்கு அவர்கள் விரும்பியபடி சொந்த மொழியில் பேச உத்தரவு பிறக்கப்பட்டது.

- சிவரஞ்சன்

எங்கள் வீட்டு இட்டிலி

உயர்ந்த மல்லிகை போலிருக்கும்
எங்கள் வீட்டு இட்டிலி
உள்ளே தும்பை போலிருக்கும்
எங்கள் வீட்டு இட்டிலி
வயறுக் கொன்றும் தீமை செய்யா
எங்கள் வீட்டு இட்டிலி
வாய்க்கு நன்கு சுவைத்திடுமாம்
எங்கள் வீட்டு இட்டிலி!

விலை மதிப்பே இல்லாதது
எங்கள் வீட்டு இட்டிலி!
வேண்டி வேண்டி கேட்க வைக்கும்
எங்கள் வீட்டு இட்டிலி
காலையிலே தனிச்சுவையாம்
எங்கள் வீட்டு இட்டிலி
காத்திருந்தால் கிடைக்கும் வாங்க
எங்க வீட்டு இட்டிலி!

- ஆர். புனிதா.




செருப்பு

எட்டு ரூபாய் செருப்பு
எந்தன் காலுச் செருப்பு
திட்ட மான அளவில்
திரு விழாவில் எடுத்தேன்

காடு மலை சுற்றும்
கழனி முள்ளில் நடக்கும்
வீட்டில் வீழ்ந்து கிடக்கும்
வேண்டும் போது உதவும்

பனியை வெயிலைத் தாங்கி
பரிவாய் உதவி புரியும்
பணிந்து நிற்கும் இதுபோல்
பாரில் நண்பன் உண்டோ?

- எம். கே. முத்துவேல்.




பல்லி

சுவரில் நகர்ந்து ஓடிடும்
சுறுசுறுப் புடனே வந்திடும்
எவரும் வியந்து கண்டிடவே
எல்லா வித்தையும் செய்திடும்

நாவை வெளியே நீட்டிவிடும்
நன்கு பூச்சியைப் பிடித்துவிடும்
வாலைப் பிடித்தால் விட்டுவிடும்
விரைந்து தப்பி ஓடிவிடும்!

- செ. நடராசன்.



பிருந்தாவனக் கவியரங்கம்!

மோதிரம்

சின்ன கல்லு மோதிரம்
சிவப்புக் கல்லு மோதிரம்
வண்ண வண்ண மோதிரம்
வைரம் பதித்த மோதிரம்!

வட்ட வட்ட மோதிரம்
வனப்பு மிக்க மோதிரம்
திட்ட மான மோதிரம்
திருடத் தூண்டும் மோதிரம்!

விரலுக்கு அழகாம் மோதிரம்
விந்தை முகப்பு மோதிரம்
இரவல் கேட்டால் யாருக்கும்
இல்லை என்றே சொல்லுவேன்!

- வே. தாமரைச்செல்வன்.





காந்தி

மண்ணில் வந்து பிறந்தாரே
மனிதரில் உயர்ந்து நின்றாரே
அன்பின் வழியில் நடந்தாரே
அகிலம் வியக்க வாழ்ந்தாரே


தீண்டாமை பேயை ஒழித்திடவே
திட்டம் இட்டு முயன்றாரே
உண்மை வெல்லும் என்றாரே
உலகே வியக்க உயர்ந்தாரே.

அடிமை வாழ்வை முடித்திடவே
அன்னியர் மெச்ச முயன்றாரே
விடுதலை பெற்றுத் தந்தாரே
வியக்க காந்தி மறைந்தாரே

விடுதலை சத்தியம் உள்ளவரை
வாழ்வார் காந்தி உலகினிலே
நாட்டு மக்கள் மனதினிலே
நல்லவர் காந்தி நிலைப்பாரே!

- ம. கணேசன்.

பலகை



எண்ணும் எழுத்தும் கற்றிட
எண்கள் நமக்கு உதவிடும்
கண்கள் போன்ற கல்வியை
கடிதில் கற்க வைத்திடும்

எழுதும் குச்சி உதவியால்
எண்ணும் எண்கள் அனைத்தையும்
பழகி எழுதிக் கற்கலாம்
படித்துத் திருத்தி அமைக்கலாம்!

அழகு மிளிர எழுதிட
அருமை யான பயிற்சியாம்
பழகிப் பழகி பலகையில்
பயிற்சி செய்தே உயருவோம்!

- வே. பூங்குன்றன்.

புலியே...!

பூனை போன்ற தோற்றம்
புலியே உமக்கு இருந்தும்
ஏனோ உறுமிக் காட்டி
அஞ்ச வைக்க லாமோ?

மயக்கும் வண்ணம் முதுகில்
மஞ்சள் நிறக் கோட்டை
வியக்கும் வண்ணம் போட்ட
விந்தைக் கலைஞன் யாரோ?




யானை சிங்கம் இருந்தும்
அவற்றை ஒதுக்கி விட்டே
ஏனோ உம்மை மட்டும்
அஞ்சல் அட்டையில் போட்டார்?

- எம். மனோ.

சட்டை

புதிய புதிய சட்டை
பூக்கள் நிறைந்த சட்டை
விதத்தில் நிறத்தில் ஒன்றாய்
வேண்டும் எனக்குச் சட்டை!



அப்பா வாங்கித் தருவார்
அழகு மிக்க சட்டை
இப்போ கேட்டு வைத்தால்
இந்த ஆண்டே கிடைக்கும்

அப்பா மறுத்தால் உடனே
அம்மா விடம் கேட்பேன்
அப்பா விடம் சொல்லி
அம்மா வாங்கி வைப்பாள்!

- வே. பாரதி.


யானைக் குட்டி

அழகு அழகு யானைக்குட்டி
ஆறு முகனின் அண்ணாக்குட்டி
மழலைக் கூட்டம் விரும்பிடும்
மாண்பு மிக்க யானைக்குட்டி

கரும்பைக் கண்டால் வந்திடும்
கறுப்பு வண்ண யானைக்குட்டி
விரும்பி விரும்பி அழைக்கிறேன்
வருவாய் அருகில் யானைக்குட்டி

என்னைத் தாங்கிக்கொள் யானைக்குட்டி
எங்கும் திரிவோம் யானைக்குட்டி
தின்ன ஐஸ்கிரீம் வாங்கித்தாரேன்
துடிப்பாய் வந்துடு யானைக்குட்டி

- கே. ஜெ. ஜெயஸ்ரீ




சாக்கட்டி

சின்னச் சின்ன சாக்கட்டி
சிரிக்கும் வெள்ளைச் சாக்கட்டி
கண்ணைக் கவரும் வண்ணங்களில்
கிடைக்கும் மாவுச் சாக்கட்டி

குட்டிக் குழந்தை அழுகையிலே
கொடுத்தால் சிரிக்கும் சாக்கட்டி
சற்று அழுத்தி எழுதிட்டால்
சட்டென உடையும் சாக்கட்டி

பாடம் விளக்க ஆசிரியர்
பாரில் எல்லா நாட்டிலும்
தேடி எடுத்து எழுதுவது
தம்பியர் விரும்பும் சாக்கட்டி!

- ஆர். சேஷாத்ரிநாத்.



அஞ்சலட்டை


பத்து ஐந்து பைசாவில்
பாரதத்தைச் சுற்றிடுவேன்!
நித்தம் நித்தம் செய்திகளை
நானே சுமந்து சென்றிடுவேன்

தோற்றுப் போன செய்திகளை
தேர்வில் வென்ற மகிழ்ச்சியினை
சற்றும் சலனம் காட்டாது
சடுதியில் சுமந்து சேர்த்திடுவேன்

இன்பம் துன்பம் எதுவுமின்றி
எல்லாம் சென்று சேர்த்திடுவேன்
என்னை அதிகம் நாடிடுவார்
ஏழை மக்கள் நண்பன் நான்!

- தெ. தமிழ்க்குமரன்.






• முதல் பரிசு :
என். பாலமுருகன்

அப்பா! எத்தனை வண்ணங்கள்! எத்தனை கற்பனை! கேமல் சேம்ப் போட்டிக்கு வந்த வண்ணந்தீட்டிய ஓவியங்களைத்தான் சொல்லுகிறேன். "ஒவ்வொன்றுக்கும் ஒரு தனிப் பரிசு தரலாம் போல இருக்கிறதே!" என்று அசந்து போனார் போட்டிக்கு வந்தவைளைப் பரிசீலித்து பரிசுக்குரியதைத் தேர்ந்தெடுத்த பிரபல கார்டூனிஸ்ட் "மதி".

• 2 ஆவது பரிசு :
ஆர். சுரபதி



கேமல் சேம்ப் போட்டி முடிவு!

முதல் பரிசு :
என். பாலமுருகன்,
பழனி.

இரண்டாவது பரிசு
ஆர். சுரபதி,
திருமழபாடி.

மூன்றாவது பரிசு :
எம். தினேஷ்,
சென்னை - 2.

• 3 ஆவது பரிசு :
எம். தினேஷ்





பரிசு பெற்றவை இங்கு வெளியாகியுள்ளன. இவை தவிர நூறு ஆறுதல் பரிசுகளுக்கு உரியவைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டு சேம்ப் ஸ்டிக்கர்கள் அனுப்பப்படவுள்ளன. கலந்து கொண்டு சிறப்பித்த நூற்றுக்கணக்கான சிறுவர்க்கு வாழ்த்துக்கள். பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டுகள்.

• கார்டூனிஸ்ட் மதி பரிசீலிக்கிறார்.


– புகைப்படம்: ராஜு

கேட்கட்டுமா டாக்டர்?

• ஜி. அருண்குமார், கிருஷ்ணகிரி - 1.

? எனக்கு வயது 16. அடிக்கடி ஜலதோஷம் பிடிக்கிறது. இரவில் தூங்க முடிவதில்லை. இதற்கு ஒரு வழி சொல்லுங்கள், டாக்டர்!

! ஜலதோஷம் என்பது ரைனோ வைரஸ் (RHINOVIRUS) என்ற அதிநுண்ணுயிர்களால் ஏற்படும் தொல்லை. மூக்கடைப்பு, தும்மல், இருமல், மூக்கில் சளி போன்ற அறிகுறிகளுடன் ஜலதோஷம் தோன்றும். ஆனால், அடிக்கடி ஜலதோஷம் பிடிப்பதற்கு வைரஸ் கிருமிகள் மட்டும் காரணமாக இருக்காது. ஒவ்வாமை (ALLERGY) மற்றும் முக எலும்பறை அழற்சி (SINUSITIS) காரணமாகவும் உங்களுக்கு அடிக்கடி ஜலதோஷம் பிடிக்க வாய்ப்பிருக்கிறது. தகுந்த நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை (ANTIBIOTICS)



யும், ஹிஸ்டமின் எதிர்ப்பிகளை (ANTIHISTAMINES)யும் சில வாரங்களுக்குத் தொடர்ந்து சாப்பிட்டால் தொல்லை நீங்கும். அத்துடன் கீழ்க்காணும் தவிர்ப்பு முறைகளையும் பின்பற்ற வேண்டும். 1. குளிர்ச்சியான உணவு வகைகளை உண்ண வேண்டாம். 2. குளிர்ச்சியான இடங்களில் படுத்து உறங்க வேண்டாம். 3. தினமும் காலையிலும் இரவிலும் 'ஆட்ரிவின்' (OTRIVIN) எனும் மூக்குச் சொட்டு மருந்தை ஒரு மாத காலத்திற்கு உபயோகித்து வர வேண்டும். 4. இரவில் வெந்நீரில் டிங்க்சர் பென்சாயின் (TINCTURE BENZOIN) என்ற மருந்தை 5 சொட்டு விட்டு ஆவி பிடிக்க வேண்டும். 5. ஒவ்வாமைப் பொருள்களை ஒதுக்க வேண்டும்.

• ஆர். திருநீலகண்டன், வேப்பத்தூர்.

? டாக்டர் சார், என் கெண்டைக்கால் குதிரை முகத்தில் பெரிய காயத் தழும்பு உள்ளது. பிளாஸ்டிக் சர்ஜரி செய்ய வசதி இல்லை! வேறு சிகிச்சை இருந்தால் கூறுங்களேன்?

! அசிங்கமாகத் தோன்றும் தழும்புகளை அறுவை சிகிச்சை மூலம் அகற்றி விட்டு அந்த இடங்களை அழகூட்டுவதற்கு இப்போது 'அழகூட்டும் அறுவை சிகிச்சை' (COSMETIC SURGERY) செய்யப்படுகிறது. இந்த சிகிச்சை பெரிய நகரங்களில் இருக்கும் அரசு மருத்துவமனைகளில் இலவசமாகச் செய்யப்படுகிறது. அங்கு சென்று உங்கள் பிரச்னைக்குத் தீர்வு காணலாம், இலவசமாக!


ஜலதோஷம் போக என்ன வழி?

• கா. சிவராஜன், திருபுரந்தான்.

? டாக்டர், எனது தந்தையின் முதுகில் சிறு கட்டி போல் இருந்தது. வலி

இல்லை. ஆனால் அது இப்போது பெரியதாக வளர்ந்துள்ளது. இப்போதும் வலி இல்லை. இதற்கு என்ன செய்ய வேண்டும்?
! வலி இல்லை என்பதற்காக உடம்பிலுள்ள கட்டியைக் கவனிக்காமல் இருப்பது உசிதமல்ல. கட்டிகளில் பல வகை உண்டு. சாதாரண வளர்ச்சிக் கட்டிகள், காசநோய்க் கட்டிகள், புற்றுநோய்க் கட்டிகள் என்பவை அவற்றுள் சில. உங்கள் தந்தைக்கு வந்துள்ள கட்டி எவ்வகையைச் சார்ந்தது என்பதை உடனே மருத்துவரிடம் பரிசோதித்துத் தெரிந்து கொள், சிவராஜன். அதற்குப் பிறகு மருத்துவர் பரிந்துரைப்படி கட்டியை அறுவை சிகிச்சை மூலம் அகற்றி விட்டால் பின்னால் வரும் ஆபத்தினைத் தவிர்க்கலாம்.

• **இ. சிவா, போரூர்.**
? உடம்பில் தையல் போட டாக்டர்கள் பயன்படுத்தும் செயற்கை நரம்புகள் எந்த இழையைக் கொண்டு செய்யப்படுகின்றன, டாக்டர்?




! உடம்பில் தையல் போடுவதற்குப் பயன்படும் செயற்கை இழைகள் இரு வகைப்படும். 1. உடம்பினுள் உட்கவரும் தன்மை உடையவை (ABSORBABLE SUTURES). 2. உட்கவரும் தன்மை இல்லாதவை (NON-ABSORBABLE SUTURES). இவற்றில் முதல் வகை செயற்கை இழைகள், ஆடுகளின் குடலிலிருந்து தயாரிக்கப்படுகிறது. இரண்டாம் வகை செயற்கை இழைகள் துணிநூல், நைலான், பட்டுநூல் போன்றவற்றால் தயாரிக்கப்படுகிறது.

• **டி. ஷைலா, எடையூர்.**
? உடற்பயிற்சி செய்வதால் முகத்தில் உள்ள சதையும் குறையுமா, டாக்டர்?
! உடற்பயிற்சி செய்வதால் முகத்தில் உள்ள சதை குறையாது. சதைக்கும் தோலுக்கும் இடையிலிருக்கும் அதிகப்படியான கொழுப்பு தான் குறையும்.

• **அ. செந்தில்குமார், கல்பாடி.**
? பல் ஈறுகளைப் பாதுகாப்பது எப்படி?
! தினமும் காலை, இரவு இரு நேரங்களிலும் பல் துலக்குங்கள். ஒவ்வொரு முறை உணவு உட்கொண்ட பின்னரும், வாயை நன்றாக சுத்தப்படுத்துங்கள். இரவு படுக்கச் செல்லும் முன் காரட், வாழைப்பழம் சாப்பிடுவது நல்லது. இவை ஈறுகளில் சிக்கியிருக்கும் உணவுத் துகள்களை அப்புறப்படுத்தி, பற்களை சுத்தமாக்கி விடும். இனிப்புப் பண்டங்களை அளவுக்கதிகமாக உட்கொள்ள வேண்டாம். லவங்கம், சீரகம், பாக்கு போன்றவற்றை உபயோகிக்க வேண்டாம். புகை பிடிப்பது, புகையிலை போடுவது, பான்மசாலா சாப்பிடுவது போன்ற தீய பழக்கங்களை அண்ட விடாதீர்கள். கால்சியம் மற்றும் புரதச் சத்து நிறைந்த உணவுகளை அடிக்கடி உபயோகியுங்கள். பற்களில் கறை ஏற்பட்டால் உடனுக்குடன் பல் மருத்துவரிடம் காண்பித்து, கறையை அகற்றி விடுங்கள்.


டாக்டர் கு. கணேசன்


சிரிப்!
"அந்தக் காலத்துலேயே நம்ம முன்னோர்களுக்கு 'ஆங்கிலம்' தெரியும் போல இருக்குடா?"
"எப்படிடா சொல்றே?"
"நம்ம ஊர் அம்மன் கையில வச்சிருக்கறது 'த்ரீ' சூலம்னு சொல்றாங்களே."
ஜி.ஆர்.
"வியாழன் கிரகத்து மேல வால் நட்சத்திரம் மோதியும் ஒண்ணும் ஆகலையாமே!"
"ஏண்டா வருத்தப்படறே?"
"வியாழன் கிரகம் இல்லாம போயிருந்தா இனிமேல் வியாழன் இடையாதே வாரத்தில நாலு நாள் மட்டும் பள்ளிக்கூடம் போனால் போதுமே?
– எழில் பிரேம் ஆனந்த்
"நீ என்ன ஆக ஆசைப்படறே?"
"கால்நடை டாக்டராக."
"ஏன்? எதற்கு?"
"அவைதான் நான் செய்யும் ட்ரீட்மெண்டைக் குறைசொல்லாது."
– ஆர்.கே.அருண்
"ஏண்டா நாய் கடிச்சிடிச்சின்னு சொல்றியே, கடிக்கற வரைக்கும் நீ என்ன செஞ்சே?"
"அது என்னோடு வந்த 'வினோத்'தைத்தான் கடிக்க வருதுன்னு நினைச்சிக்கிட்டேன்..."
– சீர்காழி ஜே. பலராமன்.

விக்கிரமாதித்தனும் நான்கு திருடர்களும்

கதை: ஆனந்தி

படம்: லலிதா





ரொம்ப சரி! ஊர் எல்லையில் பதுங்கும் திருடர்களைக் கண்டு பிடிக்கத்தான் போகிறேன்!
தனியாகவா?
பின்னே! உளவு பார்க்கப் பட்டாளத்தோடனா போவார்கள்? கவலைப் படாதே!
நள்ளிரவில் நாலு பேர் நகருக்குள் புகுவதைப் பார்த்தார்...
ஊர் அடங்கிய பிறகு இவர்களுக்கு உஜ்ஜயினியில் என்ன வேலை?
அடிக்கடி ஒருவன் முண்டாசைத் தொட்டுக் கொண்டே நடக்கிறான்... என்னவாயிருக்கும்? உம்...?
அண்ணே! நம்மை ஒருத்தன் பின் தொடர்ந்து வரான்.
திருடர்கள் திடீரென்று திரும்பி...
டேய்! யாருடா நீ? எதுக்கு எங்க பின்னாடியே வரே?
திருடத்தானே போறீங்க? என்னையும் சேர்த்துக்குங்க.


ஓஹோ! அப்படியா சேதி! உனக்கு என்ன வித்தை தெரியும்?
உங்களுக்குத் தெரிந்த வித்தையைச் சொல்லுங்க! நானும் சொல்றேன்
பய நம்மையே பதம் பார்க்கிறானே!
கெட்டிக்காரன்
சரி, சொல்லுங்க!
எனக்கு நல்ல நாள், நேரம் பார்க்கத் தெரியும். எந்தக் காரியமும் வெற்றி பெற சரியான நேரத்தைத் துல்லியமாகக் கணிப்பேன்!
எனக்கு மிருக பாஷை தெரியும். பட்சியோ, மிருகமோ ஆபத்துக் காலத்தில் எச்சரிக்கும். அதைப் புரிந்து கொண்டு சொல்வேன்!
எனக்கு இருட்டிலே கூட கண் தெரியும். பூனை மாதிரி நடந்து, இருட்டிலும் வழிகாட்டி அழைத்துப் போவேன்!
நான் இவர்களின் தலைவன்!



... இவர்கள் இணைந்து செயலாற்றி வெற்றி பெறச் செய்வேன்!
அடேயப்பா! எனக்கு இந்த மாதிரி பெரிய வித்தைகள் ஒன்றும் தெரியாது!... போய் வரேன்!
தலைவன் அவனை இறுகப் பற்றி...
டேய்! உளவு பார்த்துக் கொண்டு கம்பி நீட்டவா பார்க்கிறே...!
அதானே! நம் திறமைகளை வேறு பறை சாற்றி விட்டோம்!
பின்னோடு அழைத்துச் செல்வோம்! நம் கண் பார்வையில் வைத்துக் கொள்வோம்!
காரியம் முடிந்த பிறகு தீர்த்துக் கட்டி விடலாம்!
ஐயா! அதுக்கு அவசியமில்லை. என்னாலும் உதவ முடியும்!
எப்படி?
பதுக்கி, ஒளித்து வைக்கப் பட்டிருந்தால் கூட, நகைகள், பொற் காசுகள் எங்கு உள்ளன என்று என்னால் கண்டு பிடிக்க முடியும்!
உன்னை எப்படி நம்புவது?


மூன்றாவது திருடன் மீது பாய்ந்து அவன் தலைப்பாகையை எடுத்து உதறினார், அரசர் —
பார்த்தீங்களா?
அட, இவன் சொன்னது உண்மைதான்!
ஆச்சரியமாயிருக்கே! அரண்மனையின் கஜானா எங்கே இருக்குன்னு உன்னால் காட்ட முடியுமா?
ஓ! நிமிஷமா கண்டு பிடிச்சுடுவேன்!
விக்கிரமாதித்தனையும் சேர்த்துக் கொண்டு திருடர்கள் அரண்மனையை நெருங்கினர் —
டேய்! பொக்கிஷ நிலவறையைக் காட்டா விட்டால் உன்னை உயிரோடு விட மாட்டோம்!
முதல் திருடன் நல்ல நேரம் கணித்து...
உடனே போனால் காரியம் சுலபமா முடியும்.
அரண்மனையின் பின் பக்கம் மதிலேறி...



உள்ளே குதித்துப் பதுங்கிப் பதுங்கிச் சென்றார்கள்...
காவலரைக் கண்டபோது ஒளிந்தார்கள்...
விக்கிரமாதித்தன் பயந்தது போல் நடிக்க...
உம்! மேலே நட... இல்லே, கத்தி பாயும்!
அட... பழகிய இடத்தில் நடப்பது போல் போகிறானே!... கஜானா இங்கே தான் இருக்குமோ!
ஒரு வாசலை அடைந்ததும்...
இதுதான் கஜானா!
பூட்டை உடை தலைவா!
நான் வெளியே காவலிருக்கேன்!
நீக பாதை தெரிந்தவன் வெளியே இருக்க, மற்றவர்...
அடேயப்பா! பெட்டி பெட்டியா தங்கக் காசு!
அள்ளக் குறையாத நகைகள்!


வெளியே இருந்தவன் ரகசியக் காவல்...
படிகள் அருகே வருவதாகப் பேசிக் கொள்கின்றனர்! சீக்கிரம்...
கொண்டு வந்த சாக்குகளில் நிரப்பிக் கொண்டனர்...
அள்ளுங்க! நேரமாகிறது!
திருடர்கள் வந்த வழியே மூட்டைகளுடன் திரும்பினார். அரசன்...
நான் பின் தங்கி விடுகி-றேன். அவசரப் பரபரப்பில் கவனிக்க மாட்டார்கள்!
அரண்மனைக்கு வெளியே சற்று தூரம் சென்ற பிறகு...
அப்பாடா! என்ன கனம்! சற்று இளைப்பாறலாம்!
அது சரி ஆளைக் காண -வில்லையே!



ஒரு வேளை அவன் மதிலேறு முன் கயிற்றை அவசரப்பட்டு இழுத்துட்-டோமா?
நல்லதாப் போச்சு...
... அவனிருந்தால் அவனுக்கும் ஒரு பங்கு பிரிக்கணுமே!
ஒரு பங்கு கொறஞ்சாலும் பரவாயில்லை... ஒரு கெட்டிக்காரன்... நமக்கு ரொம்ப உதவியா இருந்திரு-ப்பான்...
பின் தூங்கிவிட்ட அவன் ஒற்றர் படைப் பிரிவு தங்குமிடம் சென்று—
முட்டாள்களா! கஜானா கொள்ளை போகுது! எல்லாரும் தூங்குங்க!
ஒற்றர் தலைவன்—
பிரபோ, மன்னிக்கணும்!
போங்கடா, போங்க! சீக்கிரம் நாலு திருடர்களையும் கண்டு பிடியுங்க!
விக்கிரமாதித்தன் அந்தப்புரம் சென்றார்!
இவ்வளவு நேரமா? கவலையா இருந்தது. திருடர்களைப் பிடிச்சீங்களா?


கண்டு பிடிக்கவாவது? அவர்களோடு சேர்ந்து நானும் என் கஜானாவை-யே கொள்ளையடிச்சேன்!
பரிகாசமா?
இல்லை! ஒற்றர் தலைவனை எழுப்பி, அவர்கள் பின்னால் அனுப்பி-விட்டுத்தான் வர்றேன்.
அன்று பிற்பகலில் கடைத்தெருவில் ஒரு திருடன் பொற்காசை மாற்ற முயலும் போது...
இது அரண்மனைக் காசு போலிருக்கே!
கடைத்தெருவில் வேவு பார்த்துக் கொண்டிருந்த ஒற்றனுக்குச் செய்தி தெரிவிக்க...
எனக்கு ஒன்றும் தெரியாது. ஊருக்கு வெளியே மரத்தடியில் கிடைச்சது...
திருடனை இழுத்துப் போய் சோதித்தார்கள்...
டேய்! முரடா! மடியில இத்தனை பொற்காசு கட்டிக்கிட்டிருக்கே! மரியாதையா சொல்லு, உன் கூட்டாளிங்க எங்கே?


உதைக்குப் பயந்து திருடன் உண்மை கூற, நான்கு திருடர்களும் அரசவையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர்...
அட! ராஜாவைப் பார்த்தா நம்மோடு சேர்ந்து திருடிய அந்த ஐந்தாவது ஆள் போல இருக்கே!
மந்திரி பட்டி—
குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கேட்டால், ராஜா தண்டனையைக் குறைப்பார்!
குற்றத்தை ஒப்புக் கொள்கிறோம். ஆனா உங்க ஆள்களுக்குச் சாமர்த்தியம் போதாது. நாங்க ஐந்து பேர் கஜானாவைக் கொள்ளையடிச்சோம். நாலு பேரைத்தான் பிடிச்சிருக்காங்க!
பட்டி, ஒற்றர் தலைவனை விசாரிக்க...
நாலு பேர்னுதான் நினைச்சோம்; ஐந்தாவது ஒருவன் இருந்தது தெரியாது...
பட்டி, திருடர் தலைவனிடம்...
அந்த ஐந்தாவது ஆசாமி யார் என்று சொல்! ராஜா உங்கள் தண்டனையை மேலும் குறைப்பார்.



இதோ சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கிறாரே, இவர்தான் எங்களை அரண்மனையில் திருடத் தூண்டினார்! பொக்கிஷ அறைக்கு வழி காட்டினார்!
பட்டி, திடுக்கிட்டுத் திணற, அரசி...
உண்மைதான்! மாறு வேடமணிந்து சென்ற அரசர் விடியுமுன் திரும்பி, "என் கஜானாவை நானே கொள்ளையடித்தேன்" என்றார்!
சக்ரவர்த்தி! என்னிடம் கூடச் சொல்லாமல் இப்படி ஆபத்தை வரவழைத்துக் கொள்ளலாமா?
திருட்டுப் பயம் அதிகரிப்பதாக மக்கள் முறையிடும்போது— ஒற்றர்களால் கண்டு பிடிக்க முடியாத போது— எனக்கு வேறு வழி என்ன? கடமையைச் செய்தேன்.
திருடர்களே! உங்களிடம் அபாரத் திறமை இருக்கிறது; நேரில் பார்த்தேன். ஏன் தவறான வழியில் போகிறீர்கள்?


சின்ன வயசிலிருந்து அனாதையா வளர்ந்தேன். முதலில் பசிக்குத் திருடினேன். அப்புறம் அதுவே பழகிடுச்சு. கூட்டாளிகளைச் சேர்த்துக்கிட்டேன்.
பட்டி! குழந்தைகளை அனாதைகளாக விட்டதும், அவர்கள் வளர்ந்த பிறகு வேலை வாய்ப்பு தராததும் நம் தப்புத்தானே!
இவர்களுக்குத் தொழில் கற்றுத் தரலாம். ஆனால் செய்த குற்றத்துக்குத் தண்டனை பெற்றே தீர வேண்டும்.
ஆனால் இவர்களுக்கு வழி காட்டியவன் நான்தானே!
மன்னரின் நேர்மையில் திருடர்கள் மனமுருகி...
தர்மத்தின் காவலரே! எங்களுக்குத் தண்டனை வழங்குங்கள்; திருந்தி வாழ்கிறோம்.
பட்டி! தப்பு செய்த மன்னருக்கு மட்டும் தண்டனை கிடையாதா?
இனி இரவில் தன்னந்தனியாக வெளியே போகவே கூடாது! அதுதான் தண்டனை!

3. பிறந்தநாள் பரிசு

அன்று ஞாயிற்றுக் கிழமை. சந்தீப் மிக்க மகிழ்ச்சியோடு காணப்பட்டான்.

காரணம். அன்று அவனுக்குப் பிறந்த நாள். நகரத்தில் கொண்டாடுவது போல் கேக் வெட்டி, "ஹேப்பி பர்த் டே டு யூ" என்று பாடி ஆடி ஆடம்பரமான முறையில் கொண்டாடப்பட வில்லை. மிக எளிமையான முறையில் கொண்டாடப் பட்டது. தாத்தா அவனுக்குப் புது டிராயர் சட்டை வாங்கிக் கொடுத்திருந்தார். அதை அணிந்து கொண்டுதான் பிள்ளையாரை வழக்கம்போலக் கும்பிட்டான். டேவிட் அவனுக்குப் பேனா ஒன்றைப் பரிசாக அளித்தான். மயிலு, திருக்குறள் புத்தகம் ஒன்றையும், முருகன் உண்டியல் ஒன்றையும், அகமது கலர் பென்சில் அடங்கிய பாக்ஸ் ஒன்றையும் பரிசாக அளித்தனர். பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு நன்றி தெரிவித்த சந்தீப்... நண்பர்கள் பின் தொடர ஹாலை நோக்கி நடந்தான். ஹாலில் உள்ள ஊஞ்சலில் மேஜர் அமர்ந்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் அவருடைய நண்பர் சிதம்பரம் உட்கார்ந்திருந்தார்.

சந்தீப் தன் தாத்தாவின் காலில் விழுந்து வணங்கினான். பிறகு சிதம்பரம் காலிலும் விழுந்து வணங்கினான்.


"சந்தீப்" உன்னோட பிறந்த நாளைக்கு என்னோட பரிசு இந்தா" என்று தன் மடியின் மீது செய்தித்தாளில் சுற்றி வைத்திருந்த அந்தப் பெரிய போட்டோவை நீட்டினார் சிதம்பரம்.

சந்தீப் செய்தித்தாளைப் பிரித்து வெளியே எடுத்தான். அது ஓர் அழகான பெரிய போட்டோ. "பளபள" பிரேம் போட்டு அமைக்கப்பட்டிருந்தது. ஐந்து ஜோடிக் கண்களும் போட்டோ வையே ஆவலுடன் பார்த்தன. படத்தில் காந்தி மகான் புன் சிரிப்போடு காட்சி அளித்துக் கொண்டிருந்தார்.

படத்திற்கு அடியில்:

''அன்பினால் பகைவர்களையும் நண்பர்களாக்கிக் கொள்ளலாம்"என்று எழுதப் பட்டிருந்தது.

2வது சாவி



"சந்திப்! பரிசு பிடிச்சிருக்கா? உனக்காக,. நேற்றைக்கு விராலி மலைக்குச் சென்று வாங்கி வந்தேன்" என்றார் சிதம்பரம்.

"ரொம்ப நன்றி சார். எனக்கு

த. ஜானகி

ரொம்பப் பிடிச்சிருக்கு. இதோ... இந்த ஹாலிலே தான் மாட்டப் போகிறேன்?" என்றான் உண்மையான மகிழ்ச்சியுடன் சந்தீப்.

மேஜர் தேவநாதனின் நண்பரான சிதம்பரம், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்றவர். தியாகி சிதம்பரம் என்ற பெயர் அவருக்கு உண்டு. ஆனால் சந்தீப்பும் அவனுடைய நண்பர்களும் அவரை அன்போடும் உரிமையோடும் தாத்தா என்றுதான் அழைப்பார்கள். சேலத்தில் வசிக்கும் அவர் வருடத்திற்கு இரண்டு முறை மேஜர் வீட்டிற்கு வந்து இரண்டு மூன்று நாட்கள் தங்கி விட்டுச் செல்வார். நேற்றே ஊர் திரும்புவதாக இருந்தார். சந்தீப்பின் பிறந்த நாளை முன்னிட்டு அவர்களுடனேயே தங்கி விட்டார்.

அவர் கொடுத்த படத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மயிலு கேட்டான்.

"அன்பு காட்டினா – பகைவனும் திருந்தி நண்பனாகி விடுவான்னு காந்தி மகான் சொல்லியிருக்கார். அப்படி இருக்க ஏன் எல்லோரும் சண்டை போடறாங்க? ஒரு நாடு மற்ற நாட்டின் மீது ஏன் போர் தொடுக்கிறது?"

"அன்பு இல்லாததாலேதான். அன்பு காட்டினால்தான் திருந்த முடியும்"

"அப்ப, அன்பு காட்டாத திருடனைத் திருத்த முடியுமா?"– இதுமுருகன்.

"ஏன் முடியாது? கட்டாயம் திருத்த முடியும்."

"போங்க தாத்தா! அன்பு காட்டினா, அவன் நம்ம தலையிலயே மிளகாயை அரைச்சிடுவான்."

"ஆமாம் தாத்தா! திருடனை அடித்து உதைத்தால்தான் திருந்துவான்"– இது மயிலு.

"மயிலு! நீ சொன்னபடி செய்தால் தண்டனைக்குப் பயந்து கொண்டு திருடன் கொஞ்ச நாளைக்குத் திருடாம இருப்பான். இது தற்காலிக மன மாற்றம். திருடுவது பாவம். இது பண்பான செயல் அல்ல என்று திருடன் தானாக எப்பொழுது உணர்கிறானோ, அப்பொழுதே அவன் திருட்டுத் தொழிலை விட்டு விடுகிறான். திருந்தி வாழ்கிறான். இது தான் நிரந்தரமான மனமாற்றம். இந்த மன மாற்றத்தை அன்பு வழியினால்தான் கொண்டுவர முடியும் என்று காந்தி மகான் கூறுகிறார். இதை நானும் நம்புகிறேன்!"

"அன்பே கடவுள் என்று எங்க பைபிள் கூடச் சொல்கிறது!" என்றான் டேவிட்.

"ஆமாம். அன்பினால் எதையும் சாதிக்கலாம். திருடனை, பகைவனை, பொய் சொல்பவனை, ஏமாற்றுபவனை... இப்படிப் பட்ட எல்லாத் தீயவர்களையும் அன்பினால் திருத்த முடியும். அன்பு நிரம்பி வழியும் உள்ளத்திலே வெறுப்பு, திருட்டு, பொய், பகைமை, பேராசை போன்ற தீய குணங்கள் இருக்கவே இருக்காது. அதனால அன்புங்கற பண்பிற்கு முதலிடம் கொடுங்கள். நீங்க மற்றவங்க பேர்லே செலுத்தும் அன்பு அவங்க திருந்தி வாழக்கூட காரணமாக அமையலாம்."

சிதம்பரம் தாத்தா சொன்ன கருத்து அவர்கள் உள்ளத்தில் மெதுவாக இடம் பிடிக்க ஆரம்பித்தது. சந்தீப்பின் உள்ளத்தில் பசுமரத்தில் அடித்த ஆணிபோல் அவர் சொன்னது பதிந்து விட்டது.

மறுநாள்.

பள்ளியில் இலக்கிய மன்ற விழா. மாலை ஐந்தரை மணிக்குத்தான் விழா முடிந்தது. பண்ணையாள் சுப்புவுக்கு


"கரண்ட் கட் ஆயிடக் கூடாதேன்னு பயமாயிருக்கு...!"

"ஏன் கரண்ட் கட் ஆனா உனக்கென்ன ஆச்சு...?'

"வாஷிங் மெஷின் வேலை செய்யாது பின்னே மூட்டை சுமந்து கிட்டு குளத்துக்குப் போய் துணி துவைக்கனுமே...!"

ச. காணிக்கைராஜ்





உடல் நலம் சரியில்லாமல் இருந்ததால் சந்தீப்பை அழைத்துச் செல்ல துணைக்கு அவன் வரவில்லை. டேவிட் ஊருக்குச் சென்றிருந்தான். எனவே நண்பர்கள் நான்கு பேரும் சைக்கிளில் காந்தி சாலையில் வந்து கொண்டிருந்தனர்.

விராலி மலையிலிருந்து அத்தியூர் கிராமத்துக் கோவில் வரை உள்ள காந்தி சாலையில் இருபக்கங்களிலும் நெல்லும், வாழையும் பயிர் செய்யப்பட்டிருந்தன. மண் சாலையாக இருந்த அந்தச் சாலை மேஜரின் முயற்சியால்தான் இரண்டு வருடங்களுக்கு முன்பு தார் போட்ட சாலையாக மாறியது. சைக்கிள், டயர் வண்டி போன்றவை பகல் நேரத்தில் சென்று கொண்டிருக்கும்.

'ஒரு நாள் கிரிக்கெட் டெஸ்டில்' இந்தியா நியுசிலாந்தை தோற்கடித்து வெற்றி பெற்றதைப் பற்றிப் பேசிக் கொண்டே கபில்தேவைப் பற்றி... அஸாருதீனைப் பற்றி...சித்துவைப் பற்றி வினோத் காம்ளியைப் பற்றி... ஒருவர் மாற்றி ஒருவர் உற்சாகமாகப் பேசிக் கொண்டே சாலையின் வளைவில் வலது பக்கமாக உள்ள ஆலமரத்தை நெருங்கிய பொழுது...

இவர்கள் வருவதையே மறைவாகப் பார்த்துக் கொண்டிருந்த அந்த உருவம். அவசர அவசரமாக முகமூடியை அணிந்து கொண்டது. அவர்கள் இன்னும் சற்று அருகில் வந்ததும்–

"டேய்...பையன்களா... சைக்கிளை நிறுத்தி விட்டு அப்படியே கீழே இறங்குங்க... சத்தம்... கித்தம் போட்டீங்க.. ஒரே குத்து! உடம்பு பீஸ் பீஸா போயிடும்! கத்திக்கு வேலை வைக்காம நல்ல பிள்ளைங்களா இறங்கிடுங்க."

உரத்த குரலில் அதட்டியபடி கையில் கத்தியுடன் அவர்கள் முன் திடீரென்று வந்து நின்றது அந்த உருவம்.

மறு நிமிடம்.

சொல்லி வைத்தாற்போல் நான்கு சைக்கிள்களும் பசை போட்டு ஒட்டியது மாதிரி அப்படியே நின்று விட்டன.

"உம்...கீழே...இறங்குங்க"

படக் படக் என்று அடித்துக் கொள்ளும் இதயத்தோடு நால்வரும் கீழே இறங்கினர்.

"யார் இந்த முகமூடி?" என்ற வினா ஒரே சமயத்தில் நான்குபேர் உள்ளத்திலும் எழும்பியது.

பகல் பொழுது குறைவாக உள்ள மார்கழி மாதத்து மங்கிய மாலை நேரத்தில் கத்தியின் பளபளப்பும் அதன் கூர்மையும் அவர்கள் வாயை அடைத்தன.

முகம் சரியாகத் தெரியா விட்டாலும் கத்தியைப் பிடித்திருந்த வலது கையைப் பார்த்த சந்திப் திடுக்கிட்டான். தலையில் ரத்தம் அப்படியே குபுக் என்று ஓடுவது போன்ற உணர்வு.

ஆம்! கத்தி பிடித்திருந்த அந்த உருவத்தின் வலது கையில் அவன் பார்த்தது ஆறாவது விரல்! போன மாதம் பள்ளிக்கு வெளியே காரை வைத்துக் கொண்டு தன்னைக் கடத்த முயற்சி செய்த கறுப்புக் கண்ணாடி அணிந்த ஆளின் கையில் ஆறாவது விரல் இருந்ததை பேச்சு வாக்கில் சந்திப் கவனித்திருந்தான். சந்தேகமே இல்லை. அதே ஆள்தான் இந்த முகமூடி அணிந்த உருவம். நிச்சயம் தன்னைக் கடத்திக் கொண்டு போகத்தான் வந்திருக்கிறான்.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டான். "யார் நீ? உனக்கு என்ன வேணும்?"

"என்ன பொடியா? ரொம்ப தைரியமா பேசறே! நீதான்டா எனக்கு வேணும். நான் சொல்றபடி கேட்காட்டி என்னவாகும் தெரியுமா?" கத்தியை நெஞ்சுக்கு நேராக நீட்டினான் முகமூடி.

"முருகா காப்பாத்து." -மயிலு மனத்துக்குள் வேண்டிக் கொண்டான்.

"யா.. அல்லாஹு" -அகமதின் உள்ளம் இறைஞ்சியது.

"பிள்ளையாரப்பா.. காப்பாத்து" என்று முறையிட்டப்படியே முன்பக்கம் பார்த்தான் முருகன். கண்ணுக்கு எட்டிய வரை யாரும் தென்படவில்லை. பின்னால் திரும்பிப் பார்க்க பயமாக இருந்தது.

"உம்... என் பின்னாடி நீ மட்டும் வா.. யாராவது அசஞ்சீங்கன்னா... அவ்வளவுதான். உங்க உடம்புதான் வீட்டுக்குப் போகும். அதோட இவனை உயிரோடு பார்க்க மாட்டீங்க."

நான்கு பேர் நாக்கும் அச்சத்தி னால் அசையக் கூட மறுத்து விட்டன. அவர்களையும் அறியாமல் கால்களில் நடுக்கம்.

சந்திப் ஒரு அடி முன்னோக்கி வைத்தான்.

அப்பொழுது.. அவர்கள் பின்னாலிருந்து, "டேய்... யார்டா அவன் கத்திய காட்டி மிரட்டறவன்? தைரிய மிருந்தா என்னோட மோதிப்பார் என்று ஒரு கத்தல்!"

கூவியபடி திடீரென்று முகமூட்டியை நோக்கிப் பாய்ந்து கத்தியைப் பிடுங்கிக் கொண்டு முக மூடியை ஓட ஓட விரட்டினான் ஓர் பட்டிக் காட்டு இளைஞன். கத்தியைக் காட்டி அத்தனை மிரட்டல் மிரட்டிய முகமூடியும் விழுந்தடித்துக் கொண்டு மறைந்தே போனான்!


எதிர் பாராது நடை பெற்ற நிகழ்ச்சியினால் நிலை குலைந்து போன நால்வரும் மெதுவாக சுய நினைவிற்குத் திரும்பினர். சமயத்தில் வந்து உதவி செய்தவனை நன்றியுடன் பார்த்தனர்.

கோடுபோட்ட அரைக்கை சட்டை, பழுப்புநிற வேட்டி.. தலையில் முண்டாசோடு நின்ற அந்த பட்டிக் காட்டு இளைஞன் அவர்கள் மதிப்பில் உயர்ந்து விட்டான்.


"முயலார் ஏன் தூக்கத்திலிருந்து திடீர் திடீர்னு முழிச்சுக்கிறார் ஏதும் சிம்ம சொப்பனமா...?"

"இல்லை 'ஆமை' சொப்பனம்!"

ச.காணிக்கைராஜ்







துணிவே துணை!

பயந்து போனால் உலகம் – உன்னைப்
பரிகசிக்கும் தம்பி!
வியக்கும் வண்ணம் துணிக – நீ
வீறு கொண்டே எழுக!

வையம் போற்று கின்ற – வி
வேகா னந்தர் ஒருநாள்
பைய நடந்து போனார் – ஒரு
தெருவின் பக்க மாக!

குரங்கு அவரை மிரட்ட – கொஞ்சம்
பயந்து நடந்து போனார்!
குரங்கு மேலும் விரட்ட – சற்று
நின்று முறைத்துப் பார்த்தார்!

மிரட்டி வந்த குரங்கு – பின்
மிரண்டு போன தங்கே!
மிரண்டால் உலகம் நம்மை – மேலும்
மிரட்டும் என்று ணர்ந்தார்!

அன்றி லிருந்தே அவரும் – வாழ்வில்
அச்ச மற்றி ருந்தார்!
என்றும் துணிவு கொண்டு – மிக
ஏற்றமுடன் வாழ்ந்தார்!

துணிவே துணை யாகும் – இதைத்
தெளிவாய்த் தெரிந்து கொண்டு
துணிவு நீயும் கொள்க – என்றும்
துணிவுடனே வாழ்க!

– வே.இரா. சிவஞான வள்ளல்.

"நீங்க தெய்வம் மாதிரி சமயத்துக்கு வந்து உதவி செஞ்சீங்க! இதை நாங்க மறக்கவே மாட்டோம்..." என்று மயிலு கூறிய போது இளைஞன் வெண்பற்கள் பளிச்சிட லேசாக முறுவல் செய்தான்.

"தம்பிங்களா. நான் உங்க கிராமத்தை நோக்கித்தான் வந்துகிட்டிருந்தேன். வழியிலே உங்களைக் காப்பாத்தற வாய்ப்பை ஆண்டவன் எனக்குக் கொடுத்தாருன்னு நினைக்கறேன்" என்றான்.

"நீங்க இந்த கிராமத்துக்குப் புதுசா?" அகமது கேட்டான்.

"ஆமா தம்பி."

"கிராமத்திலே யாரைப் பார்க்கப் போறீங்க?"

"மேஜர் தேவநாதன்னு ஒரு மகராசன் இருக்காராம். அவர் வீட்டுக்குத்தான் போகப் போறேன்."

"அவரை உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது தம்பி..."

"எங்க தாத்தாதான் நீங்க சொல்ற மேஜர் தேவநாதன். முருகனோட சைக்கிள் தான் பெரிசு. அதன் பின் சீட்டிலே உட்கார்ந்துக்குங்க."

"அண்ணே..உங்க பேரு... என்ன?"

"என் பேரு ராஜா..."

"சந்தீப்! உன்னை கடத்த எடுக்கப் பட்ட முயற்சிகளை மறந்து கொண்டிருக்கும் சமயத்திலே இன்னொரு முயற்சி பார்த்தியா?" என்றான் மயிலு.


"இசகு பிசகா – மாட்டிக்கிட்டோம். கொஞ்சம் கவனமா இருந்திருந்தா... நாம நாலுபேரும் ஒண்ணு சேர்ந்து அந்த முகமூடிய பீஸ் பீசா கிழிச்சிருக்கலாம்." – பொறுமினான் அகமது.

"சரி...சரி... நேர மாயிடுச்சு அண்ணே! என் சைக்கிள் சீட்டிலே உட்கார்ந்து கொள்ளுங்க" என்று முருகன் கூறவே ராஜா என்ற அந்த இளைஞன் அவன் சைக்கிளின் பின் சீட்டில் அமர்ந்து கொண்டான். தன்னுடைய சாயம் போன துணிப்பையைத் தன் மடியில் வைத்துக் கொண்டான்.

அடுத்த வினாடி நான்கு சைக்கிள்களும் அத்தியூரை நோக்கி வேகமாக விரைந்தன.

(தொடரும்)

மீதியைப் போடுங்கள்



இவர்கள் யார்? — போட்டி

இந்த ஆண்டு மகாத்மா காந்தியின் 125 ஆவது பிறந்த நாள் கொண்டாடப் படுகிறது. நாட்டின் தந்தை என்று பெருமையோடு அழைக்கப் படும் அவரைப் பற்றி உங்களுக்கு என்ன தெரியும் என்பதைச் சோதிக்கவே இந்தப் போட்டி.



கேள்விகளுக்கான விடைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவற்றைக் கவனித்து சரியாக எழுதி அனுப்ப வேண்டியது தான் நீங்கள் செய்ய வேண்டியது. கூப்பனில்லாது வருபவை ஏற்கப் படமாட்டா. அயல் நாட்டு வாசகர்கள் இந்தியாவில் உள்ள தங்கள் நண்பர் அல்லது உறவினரின் பெயரைக் கண்டிப்பாகத் தரவேண்டும்.

1. பசும்பால், எருமைப் பாலைக் குடிப்பது இல்லை என்று காந்தி உறுதியாக இருந்தார். உடல் நிலை காரணமாக பால்குடிக்க வேண்டிய நிலை ஏற்பட்ட போது, ஆட்டுப் பாலைக் குடிக்க யோசனை கூறியவர்.

2. பாரதியாரைக் காந்தியடிகளிடம் அறிமுகப்படுத்தியவர்.

3. இருட்டில் பயப்படும் போதும், பிற்காலத்திலும் ராமநாமத்தைச் சொல்லி காந்தி மன உறுதி பெறக் காரணமானவர்.

4. ஆரம்பக் கல்வி கற்ற இடம்.

5. காந்தி முழுத்துண்டு அணிய உறுதி பூண்ட இடம்.

6. காந்தி விரும்பிய 'வைஷ்ணவ ஜனதோ' பாடலை இயற்றிய கவிஞர்.

7. காந்தியின் வாழ்க்கை வரலாற்றை முதன் முதலாக எழுதி உலகுக்கு வெளிப் படுத்தியவர்.

8. இவரது மறைவுக்கு மரியாதை செலுத்த காந்தி ஓராண்டு காலம் காலில் செருப்பு அணியாது இருந்தார்?

9. காந்தியடிகள் தனது வழிகாட்டியாகக் கொண்டு அவரது பெயரால் தெ. ஆப்பிரிக்காவில் ஆசிரமம் அமையக் காரணமானவர்.

10. தெ. ஆப்பிரிக்காவில் காந்தி தொடங்கிய வார இதழின் பெயர்.

11. தீண்டாமை இயற்கைக்கு விரோதமானது என்ற எண்ணம் காந்தியின் மனதில் தோன்றக் காரணமாக இருந்தவர்.

12. ஆசிரம ஊழியர்கள் தாங்கொணாத மனத் துயரால் வாடும் போது மன அமைதி பெற போகும்படி காந்தி யோசனை கூறியது.

- குடும்ப கக்கூசைக் கழுவ வரும் உகா என்ற தோட்டி.
- கோகலே.
- மதுரை
- கஸ்தூரிபா காந்தி
- லியோ டால்ஸ்டாய்
- ரம்பா
- ஜோஸப் டோக்
- ராஜ்கோட்
- இந்தியன் ஒப்பீனியன்
- நரசிம்ம மேத்தா.
- திருவண்ணாமலை ரமண முனிவரின் ஆசிரமம்.
- ராஜாஜி.

இவர்கள் யார்?
- போட்டி

பெயர் :..

வயது :..

முகவரி :..


....

பின்கோடு :..


முடிவு தேதி 31.10.94


சூரியனும் சூரிய சக்தியும்

ஆழி



பல்லாயிரம் கோடி ஆண்டுகளுக்கு முன்பு, பிரபஞ்சத்தில், மேகம் போன்ற தோற்றமுடைய 'நெபுலா' வேகமாகச் சுழன்று கொண்டிருந்தது. அது காலப் போக்கில் பிய்த்து எறியப்பட்டு, குளிர்ந்து, திண்மையும் அடர்த்தியும் பெற்று ஆங்காங்கே சிறு கோளங்களாக மாறியது. அந்த நெபுலாவின் மத்திய பாகம் தான் சூரியன் — இப்படி கருதுகிறார்கள் விஞ்ஞானிகள்.









சூரியனும் ஒரு நட்சத்திரம்தான். நமக்குப் பக்கத்தில் இருப்பதால்தான் அது பெரிதாகத் தோன்றுகிறது. பூமியிலிருந்து சுமார் 15 கோடி கி.மீ. தூரத்தில் சூரியன் இருக்கிறது.


கனபரிமாண அளவில் பார்த்தால், பூமியை விடச் சுமார் 13 லட்சம் மடங்கு பெரியது. சூரியனின் குறுக்களவு சுமார் 13,82,560 கி.மீ. சூரியனின் எடை, பூமியைப்போல் சுமார் 3,32,000 மடங்கு.

ஹைட்ரஜன், ஹீலியமாக மாறி, அபரிமிதமான சக்தியை வெளிப்படுத்துகிறது. இந்தச் சக்தி, சூரியனின் கதிர் வீச்சால் இழக்கும் சக்திக்குச் சமமாக இருப்பதால், சூரியன் ஒரே நிலையில் இருந்து வருகிறது. சூரியன் ஒரு விநாடி எரிவதற்கு, 40 லட்சம் டன் எரிபொருள் செலவாகிறது. சூரியனின் மேற்பரப்பின் வெப்ப நிலை 12,000° பாரன் ஹீட். உட்புறத்தில் 4,00,00,000° பாரன் ஹீட்!






சூரியன் திடப்பொருள் அல்ல; அது ஆவிதான். சூரியனின் ஹைட்ரஜன் அணுக்கள், கார்பன்-நைட்ரஜன் அணுக்களின் உதவியால், ஒன்றோடு ஒன்று கலந்து 'ஹீலியம்' அணுக்களாக மாறுகின்றன. இந்த நிகழ்ச்சி, சூரியனில் தொடர்ந்து நடந்து கொண்டே யிருக்கிறது.





சூரியனின் ஹைட்ரஜன் வாயு தீப்பற்றி எரிவதால் சுமார் 1,28,000 கி.மீ. உயரம் வரை சுடர் எழும். இது சூரியனின் 'சுடர் எழுச்சி' எனப்படும்.

சூரியன் தன்னைத்தானே சுற்றிக் கொள்ளுகிறது. சராசரியாக ஒருமுறை சுழல 25 நாட்கள் ஆகிறது. பூமி, சூரியனைச் சுற்றி வருகிறது. சந்திரன், பூமியைச் சுற்றி வருகிறது. அவ்வாறு சுற்றும்போது, சந்திரன், சூரியன், பூமி ஆகிய இம்மூன்றும் சரியாக ஒரே நேர்க்கோட்டில் வந்தால் அப்போது கிரகணங்கள் உண்டாகின்றன.




துருவப் பகுதிகளில், நடுக் கோடையில் அடிவானத்தில் சூரியன் மறைவதில்லை! 24 மணி நேரமும் தெரியும்! நள்ளிரவில் கூடச் சூரியனைப் பார்க்கலாம்!






சூரியனில் தோன்றும் கரும் புள்ளிகள் அதன் அபரிமிதமான ஆற்றலால் ஏற்படுகின்றன. பெயருக்குத்தான் அவை கரும் புள்ளிகள். உண்மையிலேயே அவை ஒளிப்புள்ளிகளே!



சூரியனிடமிருந்து பூமிக்கு வெளிச்சம் வர சுமார் 8 நிமிடங்கள் ஆகின்றன. பூமியின் மீது ஒரு மணி நேரம் விழும் சூரிய சக்தி சுமார் 2,10,000 லட்சம் டன் நிலக்கரி தரும் சக்திக்குச் சமம்.


சூரியனே நமக்குக் கிடைக்கும் சக்திக்கு மூல காரணம். சூரியன் இல்லையானால், உலகில் தண்ணீரே இராது. எல்லாம் பனிக் கட்டியாகவே இருக்கும். மழை பெய்யாது, பனி பெய்யாது. கோடை, மாரி— காலங்கள் ஏற்படமாட்டா.






சூரியனின் ஒளிச்சக்தியால், தாவரங்களின் இலைகளில் உள்ள குளோரோபில், காற்றில் உள்ள கரியமில வாயுவைக் கிரகித்து, பிராணவாயுவாகவும் கரியாகவும் பிரிக்கிறது. கரி, இலைகளில் தங்கிவிடுகிறது. பிராணவாயு, வெளிக்காற்றில் கலந்து உயிரினங்கள் சுவாசிக்க முடிகிறது.

கடந்த சுமார் 400 கோடி ஆண்டுகளாகச் சூரியன் எந்த பெரிய மாறுதலும் பெறாமல், ஒரே நிலையில் நின்று, அணுப்பிளவின் விளைவாக உற்பத்தியாகும் சக்தியை ஒளியாகவும் வெப்பக் கதிர்வீச்சாகவும் வீசிக்கொண்டிருக்கிறது. சூரியனின் எரிபொருள் எல்லாம் தீர்ந்து விட்டால் என்னவாகும்? சூரியன் பெரிதாக ஆரம்பிக்கும். அது பெரிதாகி, அதன் உள்ளே, பூமி அடங்கிவிடும். தவிர, சுக்கிரன், புதன் எல்லாமே வெறும் ஆவியாகிவிடும். ஆனால், இது நடக்க கோடிக்கணக்கான ஆண்டுகளாகும்.




சிலிகான் செல்களை உபயோகித்து சூரிய ஒளி மின்சாரமாக மாற்றப் படுகிறது.

சூரியன் வெளிவிடும் ஏராளமான வெப்பசக்தியால் மின்சாரம் தயாரிக்கப் படுகிறது. விண்ணில் செலுத்தப்படும் ராக்கெட்டுகள், செயற்கைக் கோள்கள் முதலியவற்றுக்கு வேண்டிய மின்சாரம் சூரிய சக்தியால் கிடைக்கிறது.




இது சூரிய செல். இது காப்பர், இண்டியம் டிஸெலினைடுடன் காரீயம் கலந்த உலோகத்தால் உருவாக்கப் பட்டது.

மிகப் பெரிய தொழிற்சாலைகளில் இது போன்ற சூரிய சக்தி 'நீர் கொதிகலன்கள்' அமைக்கப் படுகின்றன.




இது சூரிய அடுப்பு. 'சோலார் குக்கர். சூரிய வெப்பத்தைப் பல மடங்கு பெருக்கித்தர கண்ணாடிகள் இதில் பொருத்தப் பட்டுள்ளன.




இந்தக் கடிகாரம் சூரிய சக்தியால் இயங்கக் கூடியது. சூரிய ஒளி இல்லாத நேரத்தில் பாட்டரியால் இயங்கும்.






சூரிய
சக்தியால்
இயங்கும்
காற்று ஆலை
இது.



இது சூரிய செல் சக்தியில் இயங்கும் தொலைக் காட்சிப் பெட்டி. ரஷ்யாவின் கண்டுபிடிப்பு.



இது சூரிய சக்தியால் இயங்கும் கிளைடர் விமானம். இதில் சூரிய சக்தியைச் சேமிக்கும் கண்ணாடிப் பட்டைகளுக்குப் பதிலாக, சூரிய சக்தி பிலிம்கள் பதிக்கப் பட்டிருக்கின்றன. ஒரு கிலோ எடையுள்ள பிலிம், சூரிய சக்தியில் 200 வாட் மின் சக்தியைத் தரும்.

இது சூரிய சக்தியால் இயங்கும் கார். 250 கிலோ எடையுள்ளது. பகலில் கிடைக்கும் சூரிய சக்தியைத் தேக்கி வைத்து, இரவிலும் ஓட்டலாம். மணிக்கு 20 முதல் 25 கி.மீ. வேகத்தில் செல்லும். தற்போது மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் செல்லும் சூரிய சக்திக் காரைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.



...தவிர, தண்ணீர் இறைக்கும் எந்திரம், தெருவிளக்கு, வானொலிப் பெட்டி, சிறிய குளிர் பதனப் பெட்டி, பாட்டரி சார்ஜிங் போன்றவற்றிற்கும் இந்தச் சூரியசக்தி மின்சாரம் பயன் படுத்தப் படுகிறது.



கழுதை இளவரசன்

சின்னபாபு

பவளபுரி மன்னன் சிவசேனன் மிகவும் நேர்மையானவன். குடிகளின் நன்மையையே எண்ணி அரசாண்டு வந்தவன். அரசனை யார் வேண்டுமானாலும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் கண்டு குறைகளை முறையிடலாம். சிவசேனன் தானே விசாரித்து நியாயம் வழங்குவான். தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என்று பரிந்து சலுகை காட்டாமல், யார் தவறு செய்தாலும் தக்க தண்டனை அளித்து நீதி வழங்கினான்.

ஒருமுறை மன்னனின் தாய் பெரிய ராணியார் பல்லக்கில் கோவிலுக்குப் போனார். யாரும் வழியில் பல்லக்கைத் தூக்கும் மூங்கில்களில் ஒன்று முறிந்துவிட்டது. நல்ல காலம். பெரிய ராணி ஆபத்தின்றித் தப்பினார். அந்த வழியாக ஒரு காவிப் பல்லக்கு வந்து கொண்டிருந்தது.

வீரர்கள் அதை நிறுத்தி, மகாராணியை அந்தப் பல்லக்கில் ஏற்றிக் கோவிலுக்கு அனுப்பி வைத்தனர். அருகே இருந்த மூங்கில் காட்டுக்குப் போய் புதிய மூங்கிலை வெட்டி வந்து, ராணியாரின் பல்லக்கைச் சரிசெய்தனர். ராணியார் திரும்பும்போது தனது பல்லக்கிலேயே திரும்பி வந்தார்.

அடுத்த நாள் சிவசேனனின் சபை கூடிய போது இரண்டு பேர் தங்கள் குறைகளை முறையிட வந்தனர்.

ஒருவர், ராணியார் முந்தின தினம் ஏறிக் கோவிலுக்குப் போன காவிப் பல்லக்கின் உரிமையாளர் தேவநாதன். மற்றொருவர், மூங்கில் காட்டின் குத்தகைக்காரர் பூபதி.

"அரசே, என் தாயாருக்கு உடம்பு சரியில்லை. ஒரு வாரமாகப் படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். வைத்தியரை அவசரமாக அழைத்து வரவே என் பல்லக்கை அனுப்பினேன். அரண்மனை வீரர்கள் அதைக் கடை வீதியில் மறித்து, ராணியாரை அதில் ஏற்றிக் கோவிலுக்கு அனுப்பி வைத்து விட்டார்கள். அதனால் மிகவும் காலதாமதமாகவே வைத்தியர் என் வீட்டுக்கு வர முடிந்திருக்கிறது. அதற்குள் என் தாயார் இறந்துவிட்டார். என் தாய்க்கு சரியான நேரத்தில் வைத்தியர் உடனே வந்து ஆலோசனை

கிடைத்திருந்தால் அவர் பிழைத்திருக்கக் கூடும். எனவே என் தாயின் மரணத்திற்குப் பெரிய ராணியாரே காரணம்" என்று முறையிட்டுக் கண்ணீர் சிந்தினார் தேவநாதன்.

ராணியார் சபைக்கு அழைத்து வரப்பட்டார். குற்றவாளியாக மன்னர் முன் நிற்க வைக்கப்பட்டார்.

"மகாராணியாரே, உங்கள் அவசரத்திற்காக தேவநாதனின் பல்லக்கை நிறுத்திக் கோவிலுக்குப் போனது நியாயமல்ல. பல்லக்கு உங்களுடையது இல்லை என்பது உறுதியாகத் தெரிந்த பிறகு, அதற்கு உரியவர்களிடம் அனுமதி பெற்றே நீங்கள் கோவிலுக்குப் போயிருக்க வேண்டும். அவர்களுடைய அவசரத்திற்காகத்தானே பல்லக்கு போய்க் கொண்டிருந்தது? உரிமை அவர்களுக்குத் தானே? அதை, உரியவர்களின் அனுமதியைப் பெறாது பயன்படுத்துவது அநியாயம் அல்லவா? மற்றவர்களுக்கு வழி காட்ட வேண்டிய மகாராணியாரே இப்படிச் செய்தால், குடிமக்களை எப்படிக் கண்டிக்க இயலும்? தேவநாதனின் தாய், சரியான மருத்துவ உதவி இன்றி மரணமடைய மறைமுகமாகக் காரணமாகி விட்ட நீங்கள் ஒரு குற்றவாளியே" என்றான் நீதிமானான சிவசேனன்.

அடுத்தபடியாக மூங்கில் காட்டு உரிமையாளர் பூபதி முன்னே வந்தார்.

"அரசே, நல்ல விலை போகும் என்று பல்லக்கு மூங்கில்களை மிகவும் கவனமாக வளர்த்து வருகிறேன். உங்கள் வீரர்கள், என் அனுமதி பெறாது காட்டுக்குள் புகுந்து, ஒரு மூங்கில் தேவை என்பதற்காக, வெட்டத் தெரியாது வெட்டி, என் பல்லக்கு மூங்கில்களுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தி விட்டார்கள். எனக்குப் பெரும் இழப்பு" என்றார் பூபதி.

"அனுமதி இன்றி மூங்கில்களை வெட்டி, பல்லக்கு மூங்கில் காட்டுக்கு சேதம் ஏற்படுத்தியது குற்றமே. அரசனும், அரச குடும்பத்தாரும் குடிமக்களே. நியாயத்தை நிலைபெறச் செய்ய வழி காட்டியாக இருக்க வேண்டியவர்களே இப்படி அநியாயம் செய்தால், மக்களை எப்படிச் சந்திக்க முடியும். சட்டமும் நியாயமும் எல்லோருக்கும் ஒன்றே.



விதிவிலக்கு என்பது யாருக்கும் இல்லை," என்று கூறிய சிவசேனன் ராணியாருக்கு ஒரு வாரம் சிறைத் தண்டனையும், நூறு பொன் அபராதமும் கட்ட உத்தரவிட்டான்.

இப்படிப்பட்ட மன்னனின் ஆட்சியில் குடிமக்கள் தாங்களும் நியாய உணர்வோடு நடந்து கொண்டு வாழ்ந்ததில் அதிசயம் என்ன இருக்க முடியும்?

ஒருநாள் மன்னனின் அவைக்கு ஒரு மந்திரக்காரக் கிழவியும், ஒரு பெண்ணும் வந்தனர்.

"அரசே, நான் ஒரு மந்திரக்காரி. எனக்குப் பிடிக்கவில்லை என்றால் யாரை வேண்டுமானாலும் சபித்து விடுவேன்" என்று முதலிலேயே பயப்படுத்திய கிழவி, "இது என்னுடைய மோதிரம். இதை இந்தப் பெண் தன்னுடையது



என்று கூறுகிறாள். நீங்கள்தான் நியாயம் வழங்க வேண்டும்" என்று முறையிட்டான்.

சிவசேனன் மோதிரத்தை வாங்கிப் பார்த்தான். அது அழகான தங்க மோதிரம்.

"எங்கே, இதை நீங்கள் போட்டுக் காட்டுங்கள் பார்க்கலாம்?" என்று கேட்டான் சிவசேனன்.

கிழவி போட்டுக் கொண்டாள். மோதிரம் எந்த விரலுக்கும் சரியாகப் பொருந்தவில்லை.

"நீ போட்டுக் காட்டும்மா" என்றான் மன்னன் பெண்ணிடம்.

பெண்ணின் வலது கை மோதிர விரலுக்கு சரியாகப் பொருந்தியது மோதிரம். அதோடு, மோதிரம் போட்டிருந்த அடையாளமாக, அந்த விரலில் வளையமாக வெளுப்பு ஓடியிருந்தது.

"நீங்கள் மந்திரவாதி என்று கூறிக் கொள்கிறீர்கள். நீங்கள் மனது வைத்தால் இதைப் போல் எத்தனை மோதிரங்களை வேண்டுமானாலும் வரவழைத்துப் போட்டுக் கொள்ளலாம். இது உங்களுடையது அல்ல. பெண்ணுடையது" என்றான் மன்னன்.

"எனக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கிய உன் அழகிய முகம் கழுதை முகமாக மாறட்டும்" என்று சபித்தாள் கோபம் கொண்ட மந்திரக்காரக் கிழவி.

ஆனால் கிழவியின் சாபம் அங்கே பலிக்கவில்லை. எல்லோரும் அதிசயித்து நின்றனர்.

"மன்னவா, நான்தான் நீதிதேவதை. தருமம் தவறாத உன்னுடைய நீதியின் சக்திக்கு எதிராக எதுவும் செய்து விட முடியாது. இந்த சிங்காதனத்தில் நீ இருக்கும் வரை இந்த மந்திரக் கிழவியின் சாபம் உன்னைத் தொடாது. கவனமாக இருந்து கொள்" என்று வானில் இருந்து குரல் கேட்டது.

மந்திரக் கிழவி சீறினாள் கோபத்துடன். அவளுடைய கோபத்தைத் தாங்க முடியாது அரண்மனை எரிந்தது. பூகம்பத்தால் நகரமே நடுங்கியது. மக்கள் பெருந்துன்பத்திற்கு ஆளாகினர். ஆனால் சிவசேனன் இருந்த சிங்காதனத்திற்கும், அரச சபைக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

"மன்னா எங்களைக் காப்பாற்று" என்று மக்கள் வந்து அழுத காட்சி, மன்னனைக் கலங்க வைத்தது.

மன்னன் நீதிதேவதையை அழைத்தான்.

"நீதியின் தெய்வமே. மன்னனின் முதல் கடமை குடிமக்களைக் காப்பாற்றுவதே. இப்பொழுது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடர் என் பொருட்டு ஏற்பட்டதே. என்னுடைய சுயநலத்திற்காக அவர்களை இப்படியே துன்பப்பட விட்டு விட்டு சாபத்தில் இருந்து தப்பித்துக் கொள்ள நான் விரும்பவில்லை. நான் கழுதையாக மாறுவதால், என் குடிமக்களின் துயர் நீங்கும் என்றால், நான் சாபத்தை ஏற்க விரும்புகிறேன்" என்ற மன்னன், சிங்காதனத்தில் இருந்து கீழே இறங்கினான். அடுத்த கணமே சிவசேனன் கழுதையாக மாறினான்.

மன்னன் கழுதையாக மாறி விட்ட போதும், மக்கள் சிவசேனனை விடவில்லை. கழுதையாக சிங்காதனத்தில் இருந்து வழக்கப்படி அரசாண்டான்.

கழுதையாவதற்கு முன், சிவசேனனை மணக்கப் பல நாட்டு அரசகுமாரிகள் போட்டியிட்டனர். ஆனால், அவன் இப்படிக் கழுதை முகம் கொண்டவனாக ஆன பிறகு யாரும் முன்வரவில்லை.

ஒருநாள், மந்திரக் கிழவியுடன் மோதிரம் விஷயமாக பிரச்னையை எழுப்பி, சிவசேனன் கழுதையாவதற்குக் காரணமாக இருந்த பெண் வந்தாள்.


"அரசே, என்னால்தானே இத்தனையும் ஏற்பட்டது? நீங்கள் இப்படிக் கழுதை முகமுடையவராக மாறும்படி ஆயிற்று" என்று வருந்திய அவள், "அரசே, உங்களுக்கு மறுப்பு இல்லை என்றால், நான் உங்களை மணந்து கொள்கிறேன்" என்றாள்.

"பெண்ணே, உன் நன்றி உணர்வைப் பாராட்டுகிறேன். ஆனால், என்னைத் திருமணம் செய்து கொண்டால் உன்னை எல்லோரும் கழுதை ராணி என்பார்கள். உனக்குக் கஷ்டமாக இருக்கும். வேண்டாம். இந்த ஆசை" என்றான் சிவசேனன்.

"இல்லை மன்னா. நான் மனப்பூர்வமாக உங்களை மணக்க மகிழ்ச்சியாகச் சம்மதிக்கிறேன். தருமதேவதையே உரு வெடுத்து வந்தது போன்ற உங்களை மணப்பதில் நான் பெருமையடைவேன்" என்றாள் அந்தப் பெண்.

சிவசேனன் அந்தப் பெண்ணை மணந்து கொண்டு சிங்காதனத்தில் அமர்ந்ததும், அவனுடைய கழுதை முகம் மறைந்து பழைய உருவம் வந்தது.

"உன் மனைவியின் தியாகம், சாபத்தை விலக்கி விட்டது. நீதி தவறாது ஆண்டு, மகிழ்ச்சியாக இருங்கள்" என்று வாழ்த்தியது தர்மதேவதை.



"ஏங்க தவளையாரே இப்படி ஓடி வர்றீங்க?"

"'பாம்பே' சர்க்கஸ்னு பார்க்கப் போனா அது 'பாம்பு' சர்க்கஸா இருக்கு!"


– லட்சுமி பிரகாஷ்

ஒன்று

அருப்புக்கோட்டை செல்வம்

ரகுவும் சேகரும் ஒரே வகுப்பில் படிக்கும் சிறுவர்கள். இருவரும் நண்பர்கள் இல்லை. ஆனால்... விரோதிக்க மாட்டார்கள். ரகுவுக்கு படிப்பறிவோடு பொது அறிவும் அதிகம். சேகருக்கோ... படிப்பறிவே குறைவு. ரகுவுக்கு, பொது அறிவுள்ள விஷயங்கள் எப்படி வருகிறதென்று ஆராய்ந்தான் சேகர். அவனது நடவடிக்கைகளையும் தினமும் கவனித்தான். அவனிடமிருந்து, ஒரு புது விஷயம் சேகருக்குக் கிடைத்தது. அதாவது, தினமும் மாலையில் ரகு, பள்ளிக்கூடம் விட்டு வரும் போது, வழியில் உள்ள மாவட்டக் கிளை நூலகத்திற்கு, தினமும் ஒரு பத்து நிமிடமாவது, சென்று விட்டுத்தான் வருவான். அதைக் கவனித்த சேகர், தானும் நூலகத்திற்குச் சென்று வர ஆரம்பித்தான்.

ரகுவோ, அன்றைய நாளிதழ்களைப் படிப்பான்.



பின்பு, வார, மாத இதழ்களைப் படிப்பான். அதோடு, நூலகத்தில் ஒரு உறுப்பினராகி, புத்தகங்களை வீட்டிற்கும் எடுத்துச் செல்வான். சேகரும், அதைப் பின்பற்ற ஆரம்பித்தான்.

ஒவ்வொரு நாளிதழையும் எடுத்து, வெறுமனே புரட்டி விட்டுக் கீழே வைத்து விடுவான் சேகர். ஒருநாள் ஒரு புத்தகத்தை எடுத்து, நூலகரிடம் கொண்டு போய்க் கொடுத்தான்.

"தம்பீ... நூலகத்திலிருந்து புத்தகத்தை எடுத்துட்டுப் போகணும்னா, முதல்ல நூலகத்துல உன்னை உறுப்பினர் ஆக்கிக்கிடணும். அப்பத்தான், புத்தகத்தை எடுத்துட்டுப் போக முடியும்" என்றார், நூலகர்.

"அதுக்கு என்ன செய்யணும்?" என்று கேட்டான், சேகர்.

உறுப்பினராவதற்குரிய விதிமுறைகளை நூலகர் விளக்கினார். மறுநாளே தன் அப்பாவிடம் பணம் வாங்கி வந்து, நூலகத்தில் உறுப்பினர் ஆனான், சேகர்.

ரகுவைப் போல் தனக்கும் பொது அறிவு வளர வேண்டும் என்ற வேகம் இருந்ததே தவிர, அதற்கான செயல் திட்டத்தை அவன் செயல்படுத்தவில்லை! நூலகத்திலிருந்து எடுத்து வந்த

புத்தகத்தைப் புரட்டுவான். படம் இருந்தால் பார்த்து ரசிப்பான். புத்தகங்களைப் படிக்கும் பொறாமை இல்லாததால் படிப்பதில்லை. திருப்பிக் கொடுத்து விட்டு வேறு புத்தகம் எடுத்து வருவான். அதற்கும் அதே கதிதான். படிக்க மாட்டான். ரசித்து விட்டுத் திருப்பிக் கொடுத்து விடுவான். அவனுக்குப் பொது அறிவு எப்படி வளரும்?

ஞாயிற்றுக் கிழமைகளில் காலை எட்டு மணிக்கு நூலகத்திற்குள் காலடி வைக்கும் ரகு, பதினொரு மணிக்குத்தான் திரும்பி வருவான். சேகரும், அதைப் போலவே செய்ய ஆரம்பித்தான். சில மாதங்கள் சென்றன. ஆனால் படிக்கும் வழக்கம் இல்லாததால் சேகருக்கு ஒன்றுமே புரியவில்லை. பொறுமை இழந்து நூலகம் போவதை நிறுத்தி விட்டான்.

அன்று பள்ளிக்கூட விளையாட்டு மைதானத்தில், ரகுவைத் தேடி வலிய வந்து பேசினான், சேகர்.

''என்னடா ரகு... இன்னும் நூலகத்துல இருந்து புத்தகம் எடுத்துப் படிக்கிறாயா...?'' என்று கேட்டான். சேகர்.

"ஆமாண்டா. படிச்சுக்கிட்டுதான் இருக்கேன். ஆமாம் நீ ஏன் இப்பல்லாம் நூலகத்துக்கு வர்றதேயில்ல...?"

"ஆமா... வந்து என்ன செய்ய? ஒரு பிரயோசனமும் இல்ல. எந்தப் புத்தகத்தைப் பிரிச்சாலும் படிக்கணும்னு தோணவே மாட்டேங்குது. அதான்... போறதை நிறுத்திட்டேன்" என்றான் சேகர்.

சேகரின் சலிப்பு, ரகுவுக்கும் புரிந்தது. அவனுக்கு எதையோ சொல்ல ரகு நினைத்த போது, அவன் நண்பன் மூர்த்தி, அங்கே வந்து கொண்டிருந்தான். நண்பனுக்கு மத்தியில், அந்த விஷயத்தைப் பற்றிப் பேச ரகுவுக்கு மனம் ஒப்பவில்லை.

"என்ன மூர்த்தி... நாளைக்கு லீவுக்கு நாம எங்கேயாவது போறோம்தானே..." என்று கேட்டான் ரகு.

"ஆமா ரகு... நாம ஏற்கெனவே பேசி வச்ச மாதிரி இருக்கன்குடிக்குப் போவோம்டா..." என்றான், மூர்த்தி.



"இருக்கன்குடின்னா... ஆறு இருக்குமே? அந்த ஊருக்கா? அது நம்ம ஊர்லயிருந்து எவ்வளவு தூரம் இருக்கு?" என்று கேட்டான், சேகர்.

நம்ம ஊர்லயிருந்து இருபது மைல்தான் இருக்கும். நானும் மூர்த்தியும் போறோம். நீயும் வர்றியா?"

சேகர், இதுவரை ஆற்றைப் பார்த்ததில்லை. அதனால், ரகு கேட்ட உடனே ஒத்துக் கொண்டான்.

மறுநாள் காலை. மூவரும் இருக்கன்குடிக்குச் சென்றனர்.

"ஏண்டா ரகு... ஆறுன்னா நிறைய தண்ணி இருக்கும்னு சொன்னே. இங்க ஒரேயடியா வறண்டு போய் கிடக்கே...?"



என்றான் சேகர்.

''தண்ணியில்லேன்னு ஏண்டா கவலைப்படுறே? கொஞ்ச நேரத்துல பாரு. டேய் மூர்த்தி... இப்படி உட்காரு'' ரகு சொல்ல, எதிரே உட்கார்ந்தான், மூர்த்தி.


சற்று நேரம் வரை, இருவரும் மண்ணை அள்ளி அந்த இடத்தில் குழி தோண்டினர். தண்ணீர் தென்பட ஆரம்பித்தது.

"டேய் மூர்த்தி... இதோ பார். தண்ணீர் தெரியுது. ம்... குடி. சேகர்... நீயும் குடிடா,'' என்று சொல்லிக் கொண்டே தண்ணீரைக் குடித்து விட்டு நிமிர்ந்தனர் இருவரும். சேகரும் மகிழ்ச்சியோடு தண்ணீரைக் குடித்து விட்டு நிமிர்ந்தான்.

"டேய் சேகர்... ஆற்றுக்கு வந்து தண்ணீர் இல்லேன்னு திரும்புறது மடத்தனம். கொஞ்சம் முயற்சி செய்து தோண்டினா... நிச்சயம் தண்ணீர் கிடைக்கும்'' என்று ரகு, மிகச் சாதாரணமாகத் தான் சொன்னான்.

ஆனால்... சேகருக்கு ஏதோ ஒன்று புரிந்தது. 'நூலகத்துக்குப் போய்.. பொது அறிவு வளரலேன்னு சொல்றதும் மடத்தனம்தானே...?'

"ரகு, எனக்குப் புரிந்து போச்சு. இனிமே புத்தகங்களை ஆழ்ந்து படிப்பேன்'' என்று சிரித்தான்.


ஆத்தூருக்கு எவ்வளவு தூரம்?
இன்னும் எவ்வளவு தூரம் போகணுமோ தெரியலை!
வழியில் ஒரு நரி வந்தது.
ஆத்தூருக்கு எவ்வளவு தூரம் போகணும்?
௨ மைல் போகணும்!
இரவு பகலா நடக்கறேன். இன்னும் ஊரு வரலையே!
ஆத்தூருக்கு எவ்வளவு தூரம் போகணும்?
4 மைல்!
பொய்! நான் அங்கே நரியிடம் கேட்டப்பவே ௨ மைல். இப்ப தூரம் குறையணுமே!
பிறகு... புலியிடம் கேட்ட போது....
ஆத்தூருக்கா? 5 மைல்!
அஞ்சு மைலா?
ஆமை புலியிடம் நடந்ததைக்கூறியது.
பாவம் நீ! ரொம்பதூரம் நடந்து வறியா?
ஆமா! ஏன்?
ஏன்னா நீ ஆத்தூருக்கு எதிர்திசையில் போய்க்கிட்டு இருக்கே!
?!
தி.ரமேஷ்



கர்ண மகாராஜா!

குரு. சீனிவாசன்

அந்த சிட்டி பஸ் அந்தியூருக்கும் அரசங்குளத்துக்கும் இடையில் ஓடிக் கொண்டிருந்தது.

"சரி, இப்போ நீ எங்கே போகணும்?" கண்டக்டரின் வினாவில் கடுகடுப்புக் கனல் வீசியது.

"ஆனை மடத்துலே எறக்கி விட்டாப் போதும்." - வயோதிகர் கையெடுத்துக் கும்பிட்டார்.

"ஆனை மடத்துக்குச் சார்ஜூ ரெண்டு ரூவா. நீ கொடுத்த ஒத்த ரூவாய்க்கு அரசங்கொளத்திலே எறங்கி நடந்து போயிடு." - தாட்சண்யமற்ற அந்தக் கண்டிப்பால் பார்வையற்ற பெரியவரின் கண்ணிமைகள் 'பக்பக்'கென்று படபடத்து ஒடுங்கின.

"கண்ணில்லாத கிழவன் சாமி. இந்த ஏறு வெயிலுலே எப்படி நடப்பேன்? அந்தக் கடக்காரன் ரெண்டு ரூவான்னு ஒத்த ரூவாயக் கொடுத்து ஏச்சிப்புட்டானே! யாரு கிட்டே கேக்கட்டும்?" போக்கறியாத அந்த முதியவர் புலம்பத் தொடங்கிவிட்டார். அந்தப் பரிதாபத்தில் எந்தப் பயணியின் இதயமும் இளகியதாகத் தெரியவில்லை.

"சரி சரி, ஒன்னோட வழக்கடிக்க எனக்கு நேரமில்லே. ஒரு ரூவா டிக்கெட்டை வாங்கிட்டு அரசங்கொளத்துலே எறங்குறதுக்கு ரெடியா இரு" என்று சிடுசிடுத்தபடியே சீட்டைக் கிழிக்கப் போனார் கண்டக்டர்.

அப்போது "சார் இந்தாங்க ஒரு ரூவா!" என்று பின்னாலிருந்து பிஞ்சுக் குரல் ஒன்று அழைத்தது. திரும்பிய கண்டக்டரிடம் ஒரு ரூபாய் நாணயத்தை நீட்டிய ரவி, "அந்தப் பெரியவருக்கு ஆனை மடத்துக்கே ஒரு டிக்கெட் குடுத்துடுங்க!" என்று பெருமிதத்தோடு கூறினான்.

அந்த வாண்டுவைப் பார்த்ததும் நடத்துனரின் பார்வையில் ஒரு ஏளனம்.

"வாப்பா கர்ணமகாராசா! நீங்க போறதே எலவச பாஸிலே. இதுல தர்மம் வேறயா?" என்று பரிகாசம் பண்ணி ரவி கொடுத்த பணத்தை வாங்கிப் பையில் போட்டார் கண்டக்டர். அவரது எகத்தாளப் பேச்சைக் கேட்டு ரவியின் பள்ளி நண்பர்களும், வயதான சில பயணிகளும் 'கொல்'லென்று வாய்விட்டுச் சிரித்தார்கள்.

"இந்தா பெரிசு; ஒன்னக் காப்பாத்த

இங்கே ஒரு கர்ணக் கொடையாளி வந்துட்டாரு. ஓம் பாடு யோகந்தான்" என்று கூறியபடி பெரியவரிடம் கண்டக்டர் இரண்டு ரூபாய்க்கான பயணச் சீட்டை நீட்டிய போது பஸ்ஸுக்குள் மறுபடியும் ஒரு வெடிச் சிரிப்பு.

"இந்தக் கிழவன் மேலே கருணை வைச்ச மவ ராசன் நல்லாருக்கணும்" என்று வாய்விட்டு வாழ்த்திய பெரியவர், கையெடுத்தும் கும்பிட்டார்.

அரசங்குளம் ஸ்கூல் ஸ்டாப்பில் நின்று கிளம்பிற்று பஸ். ஒருமித்த பள்ளிச் சீருடையில் இறங்கிய மாணவர் பட்டாளம், ரவியைப் பற்றிக் கிண்டலும் கேலியும் அடித்துக் கொண்டு பின்னால் வர, அவனோ அவர்கள் பேச்சை சட்டை பண்ணாமல் பள்ளியை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான்.



மாலை பள்ளி முடிந்தது. அந்தியூர் திரும்பும் மாணவர்கள் வண்டியை எதிர் நோக்கி பஸ் ஸ்டாப்பில் காத்திருந்தார்கள். ரவி மட்டும் அந்தப் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்காமல் ஊரை நோக்கி நடக்கத் தொடங்கினான்.

"டேய் ரவி, நடந்தா போகப் போறே?" நண்பன் மணிகண்டனின் கூப்பாட்டைக் கேட்டுத் திரும்பினான் ரவி.

"வாடா, நான் ஒரு ரூவா கடனாத்தாறேன். நாளைக்கித் திரும்பத் தந்திடுறியா?" - இதைச் செவிமடுத்த ரவி அவனுக்குப் பதிலேதும் கூறாமல் வேகமாக நடையைக் கட்டி விட்டான்.

'அந்தக் கர்ண வள்ளலை நீ ஏண்டா வம்பாக் கூப்பிடுறே? நடந்தே போகட்டும் விடுடா!" - மணிகண்டனைக் கடிந்து கொள்ளும் மற்ற பசங்களின் பேச்சும் அவன் காதுகளில் விழாமல் இல்லை. ஆனால், அவன்தான் ஒன்றையும் கண்டு கொள்ளாமல் ஒரே போக்கில் புறப்பட்டு விட்டானே.

ரவி ஒரு கிலோ மீட்டர் தூரம் போவதற்குள்ளாகவே அந்த சிட்டி பஸ் அவனைக் கடந்து கொண்டு விரைந்தது. சாலையில் சற்று விலகி நின்று பஸ்ஸை ஏறிட்டுப் பார்த்தான் அவன். 'ஹோ ஹோ'வென்று கூச்சலிட்டும் விசிலடித்தும், சன்னலுக்கு வெளியே கையை நீட்டி ஏளனமாக அவனுக்கு 'டாட்டா' காட்டியும் சென்று கொண்டிருந்த தனது சக மாணவர்களைப் பார்த்துச் சற்றும் அலட்டிக் கொள்ள வில்லை அவன் மனம்.


எட்டாம் வகுப்புப்



கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், சிறு வயது முதலே ஒரு கட்டுக் கோப்பான ஒழுக்கத்தில் வளர்ந்து பழகிப் போன ரவி, தனது தேவைக்குத் தவிர ஒரு பைசா கூட அப்பாவிடம் அதிகம் வாங்கமாட்டான்.

கோடை விடுமுறைக்குப் பின் அப்போது தான் பள்ளி திறந்த சமயமாதலால் இன்னும் எவருக்கும் இலவச பஸ் பாஸ் வழங்கப்படவில்லை. அதனால் மாணவர்கள் எல்லோருமே காசு கொடுத்து பஸ்ஸில் போய் வந்து கொண்டிருக்கிறார்கள். அந்தியூருக்கும் அரசங்குளத்துக்கும் போக வர பஸ் டிக்கெட் இரண்டு ரூபாய்தான். அந்த இரண்டு ரூபாயை மட்டுமே பெற்றோரிடம் கேட்டு வாங்கி வருவது ரவியின் வழக்கம். இன்று அப்படி வாங்கி வந்த பணத்தில்தான் ஒரு ரூபாயைக் கண் தெரியாத பெரியவருக்குக் கொடுத்து உதவி விட்டான். அதனால் இப்போது ஊர் திரும்பக் காசு இல்லாமல் நான்கு மைல்கள் நடக்க நேர்ந்ததை நினைத்துக் கிஞ்சித்தும் வருந்தவில்லை அவன்.

எதிரும் புதிருமாக ஓடிக் கொண்டிருக்கும் வாகனங்களுக்கு விலகிச் சாலையோரமாக நடந்து கொண்டிருந்த ரவி, இரண்டு மைல்களைக் கடந்து விட்டான். அதிலும் அன்று பலமாக வீசிய ஆடிக் காற்று அவனை அலைக்கழித்து எதிர்த்துத் தள்ளியது. சாலையின் இருபுறமும் ஓங்கி உயர்ந்து நிற்கும் புளிய மரங்களின் சலசலப்பு வேறு தீவிரமாக இருந்தது. தோள்களைத் துவளச் செய்யும் புத்தகச் சுமை அவனது நடையில் தொய்வை உண்டாக்கி விட்டது. ஆனாலும், அவனது மனவுறுதி மட்டும் சற்றும் தளரவில்லை.



படித்துக் கொண்டிருக்கும் ரவி தன் பெற்றோருக்கு ஒரே பையன். அவனது அப்பாவும் அம்மாவும் கூட அந்தியூர் ஆரம்பப் பள்ளியில் ஆசிரியர்களாக வேலை பார்க்கிறார்கள். ரவி எதைக் கேட்டாலும் அவர்கள் மறுக்காமல்

வேகமாக அவனைக் கடந்து முன்னேறிய ஸ்கூட்டர் ஒன்று சிறிது தூரத்தில் பிரேக் போட்டு நிற்கிறதே! யாரோ என்று அசட்டையாக ஏறிட்டு நோக்கிய ரவி, ஸ்கூட்டரில் அமர்ந்திருக்கும் தனது வகுப்பாசிரியர் ஆறுமுகசாமியைப் பார்த்ததும் ஒரு கணம் ஆச்சரியப் பட்டுப் போனான். அவனது தந்தைக்கு நெருங்கிய



அட! நீயாடா கோபால்! சின்னப்ப நாம திருடன்-போலீ'ஸ் விளை யாட்டு விளையாடுவோமே நினை விருக்கா?

நண்பர் அவர்.

"என்ன ரவி, பஸ்ஸை மிஸ் பண்ணிட் டியா? இப்பத்தானே போகுது அந்தியூர் வண்டி?" என்று மிகவும் அக்கறையோடு விசாரித்தார் அவர்.

"இல்லே சார்...." என்று தயங்கிய வனை, "சரி ஏறு, போகலாம்" என்று துரிதப்படுத்தியவர் - அவன் ஏறி அமர்ந்த தும் வண்டியை ஸ்டார்ட் செய்தார்.

"பின்னே ஏன் பஸ்ஸிலே போகலே?" என்று விட்ட இடத்தில் மீண்டும் வினாவைத் தொடர்ந்தார் ஆசிரியர்.

"என் கையிலே காசில்லே சார்!"

"ஏன் வீட்டுலே வாங்க மறந்துட்டியா? இல்லே, வாங்கிய காசைத் தொலைச் சிட்டியா?"

அடுக்கடுக்காக வந்த ஆசிரியரின் வினாக்களுக்கு விடையாகக் காலையில் பஸ்ஸில் முதியவருக்கு உதவிய விவ ரத்தை முழுமையாகக் கூறாமல் இருக்க முடியவில்லை ரவியால். ஒன்று விடாமல் விளக்கமாகச் சொல்லி முடித்தான்.

எல்லாவற்றுக்கும் செவி கொடுத்து 'உம்' கொட்டிக் கொண்டு வந்த ஆசிரியர், "நீ உதவி பண்ணினதெல்லாம் சரி தாம்ப்பா. அதுக்காக இப்படி ஆறு கிலோ மீட்டர் நடக்கணுமா? உன் பிரண்ட்ஸ் கிட்டே ஒரு ரூவா கடன் வாங்க முடி யலியா? அது கூட வேணாம்; என் கிட்டே வந்து கேட்குறத்துக்கு என்ன பயம்?" என்றார்.

"என் பிரண்ட் மணிகண்டன் கூடத் தாறதாச் சொன்னான். நான்தான் வாங்கலே!"

"போடா கிறுக்கா போ, நாளக்கித் திருப்பித் தந்திட வேண்டியதுதானே? அப்பா அம்மாக்கிட்டே கேட்டா அவங் கென்ன முடியாதுன்னா சொல்லப் போறாங்க?"

"அதெல்லாம் இல்லே சார். கண் தெரியாத அந்தப் பெரியவருக்கு நான் உதவினது எங்கப்பா அம்மா கிட்டே கேட்காமே, நானா திடீர்னு எடுத்த முடிவாச்சே? நான் செய்த இந்தச் சின்ன தியாகத்துக்கு இன்னிக்கி ஒரு நாள் மட்டும் என்னோட சௌகரியத்தைக் கொஞ்சம் கொறச்சிக்கிட்டு, பஸ்ஸிலே போகாமே நடந்து போறதிலே தப்பொன் னும் இல்லையே? மகன் என்கிற உரிமை யிலே என்னோட தேவைகளைப் பூர்த்தி செய்யுறது மட்டுந்தான் பெத்தவங்க கடமை. கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கிற மாதிரி அவங்க காசை வாங்கி என்னோட இஷ்டத் துக்கு அடுத்தவங்களுக்குத் தானம் பண்ணி, நான் தியாகின்னு பேரெடுக்கிறது எனக்கு நியாயமாத் தோனலே சார்! பஸ் டிக்கெட்டுக்குக் கடன் வாங்கிட்டு, அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க அப்பா முன்னாடி போயி கண்ணைக் கசக்கிட்டு நிக்கிறதைக் காட்டிலும், நடந்து போறதுதான் என் மனசுக்கு நிம்மதியாப் பட்டது."

ரவியின் ஒவ்வொரு வார்த்தையையும் கேட்டு வாயடைத்துப் போய்விட்டார் ஆறுமுகசாமி. 'பன்னிரண்டு வயதுப் பையனின் வாக்கு மூலமா இது!' நம்பவே முடியவில்லை அவரால்.

"பேஷ் ரவி, அந்தக் கண்டக்டரும் உன்னோட பிரண்ட்சும் உன்ன கர்ணமகா ராசன்னு கேலி பண்ணினதாகச் சொன் னியே. ஆனா உண்மையில் நீ அந்தக் கர்ணனுக்கும் ஒரு படி மேலே போயிட்டே! ஆமாப்பா: கர்ணன் மக்களின் வரிப் பணத்தை எடுத்துத்தான் தான தர்மம் பண்ணியிருப்பான். ஆனா, நீ உன்னோட தானத்தின் சுமையை; வசதியை தியாகம் பண்ணிட்டு, ஆறு கிலோ மீட்டர் நடந்து போகத் துணிஞ்ச பாரு, இதுதாம்ப்பா உண்மையான தியாகம்!"

ஆசிரியரின் பாராட்டுக்குப் பதில் கூறத் தெரியாமல் மௌனத்தில் ஆழ்ந்து போனான் ரவி. அவன் நெஞ்சம் பெருமிதத்தால் விம்மியது.



அணில் ஏன் விழுவதில்லை?

ரேவதி

பாபு நண்பர்களோடு தோட்டத்தில் இருந்தான்.

''என்ன செய்யறே அங்கே?'' என்று அப்பா கேட்ட போது, ''என் நண்பர்களுக்கெல்லாம் கொய்யாப் பழம் பறிச்சுத் தரதா கூட்டிக்கிட்டு வந்திருக்கேம்பா'' என்றான் பாபு.

''மரமேறும் போது ஜாக்கிரதை'' என்றாள் அம்மா.

''நாங்க யாரும் மரமேறப் போறது இல்லேம்மா. பொன்னனை வரச் சொல்லி இருக்கேன். அவன்தான் மரமேறி எல்லாக் கொய்யாப் பழங்களையும் பறிக்கப் போறான். நாளைக்குக் கிருஷ்ண ஜெயந்திக்கு என் நண்பர்கள் வீட்டிலெல்லாம் நம்ப வீட்டுக் கொய்யாப் பழம்தான்.''

பொன்னன் பால் வியாபாரம் செய்பவன். அதோடு தோட்ட வேலை, கிணறு தூர் எடுப்பது, மரமேறுவது, வெள்ளை அடிப்பது என்று எல்லாம் செய்யும் திறமை மிக்கவன்.

''கொய்யாப்பழம் மரத்தில் இருக்கும் போதே இத்தனை வாசனை அடிக்கிறதே!'' என்று வியந்து கொண்டான் முத்து.

''பாரேன், ஒவ்வொரு பழமும் சின்ன சாத்துக்குடி அளவுக்கு இருக்கே!'' என்று ஒத்துப் பாடினான் சேகர்.

இதற்குள் பொன்னன் வந்து விட்டான். வேஷ்டியை மடித்துக் கட்டிக் கொண்டு, கயிற்றில் கட்டிய கூடையோடு மரத்தின் மேலே ஏறினான்.

''கூடை எதுக்கு பொன்னா? நீ பறிச்சுப் போடு. நாங்க இ஗ே 'கேட்ச்' பிடிக்கறோம்'' என்றான் பாபு.

''எல்லாம் பழுத்த பழங்கள். அமுக்கிப்



பிடிச்சா கன்றிப் போயிடும். அதனால கூடையில் பக்குவமா போட்டுத் தாரேன்."

நடுக் கிளையில் கூடையை மாட்டி விட்டு பொன்னன் பழங்களைப் பறிக்க ஆரம்பித்தான். அப்பாவும் அம்மாவும் கீழே வந்து நின்று கொண்டனர்.

"ஐயா, எல்லாப் பழங்களையும் அணில் கடிச்சிருக்குங்க. பெரிதாப் பழுத்தபழம் எதையும் விடலேங்க" என்று கூடையைக் கீழே இறக்கினான் பொன்னன். எல்லோரும் பார்த்தனர். இருபது பழங்கள் இருக்கும். எல்லாம் பெரிய பெரிய பழங்கள். எல்லாமே ஒரு பக்கமாகக் கடிபட்டிருந்தன. கடிபட்ட இடத்தில் 'செக்கச் செவேர்' என்று பழம் சிரித்தது!

"ஐயா, எல்லாப் பழங்களுமே இப்படித்தாங்க இருக்கு. காவெட்டா, பழுக்காத பழங்கள்தான் முழுசா இருக்கு" என்றான் பொன்னன்.

நண்பர்களை அழைத்து வந்த பாபுவின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது.

"பரவாயில்லை பாபு. உனக்கு நல்ல மனதுதான். அணில் கடித்து விட்டதற்கு நீ என்ன பண்ணுவே?" என்று நண்பர்கள் சார்பில் சேகர் சமாதானம் கூறினான்.

'கிக் கிக்'கென்று சத்தம் கேட்டது. இரண்டு அணில்கள் மாடிப்படி மேலிருந்து மரக்கிளைக்குத் தாவி, கிளைகளில் இறங்கி, வாலைத் தூக்கிக் கொண்டு ஒன்றை ஒன்று துரத்தி மறைந்தன.

"அப்பா, இந்த சனியன் பிடித்த அணில்களுக்கு ஏதாவது ஒரு வழி பண்ணணும்" என்றான் பாபு.

"மீதிப் பழங்களையாவது காப்பாத்தணும்னா ஏதாவது பண்ணத்தான் வேணும். நான் போன வாரமே பார்த்துட்டு சொன்னேன். கவட்டு வில்லால் ஒரு அணிலை அடித்து மரக்கிளையில் தலை கீழாத் தொங்கவிட்டா, அதைப் பார்த்து பயந்துக்கிட்டு கொஞ்ச நாளைக்கு எந்த அணிலும் வராதுன்னு சொன்னேன். எல்லாரும் வேண்டாம் வேண்டாம்னீங்க. இப்ப என்னாச்சு?" இது பொன்னன்.

"அணிலை அடிக்கற சமாசாரம் வேண்டாம். வேற வழி இருந்தா சொல்லு" என்றாள் அம்மா.

"காயா இருக்கும் போதே பறிச்சு நாமளே பழுக்க வைச்சுக்க வேண்டியது தான்."

"சரி, அப்படியே பண்ணு."

பொன்னன் கூடையைக் கட்டிவிட்டு காய்களைப் பறிக்கத் தொடங்கினான்.

"இப்ப நான் என்ன பண்றது? பெரிய பெருமையா எங்க விலங்கியல் ஆசிரியரிடம், நீங்க பழம் வாங்காதீங்க சார். நான் மாலையில் எங்க வீட்டுக் கொய்யாப் பழத்தைத் தருகிறேன்னு சொல்

விட்டு வந்தேன்" என்று கலங்கினான் பாபு.

"பரவாயில்லே, போகும் போது மார்க்கெட்டில் நாலு பழத்தை வாங்கிக் கொண்டு போய்க் கொடுத்துட்டு, இப்படி ஆனதையும் சொல்லிட்டு வா" என்றார் அப்பா.

பாபு நண்பர்களோடு கிளம்பினான். ஆசிரியரிடம் விளக்கிய போது அவன் தலை குனிந்து விட்டது.

"இதனால் என்ன பாபு வந்தது? கொய்யாப் பழத்தை மரத்தில் பழுக்க விட்டால் அணிலோ இல்லை கிளியோ பாழாக்கத்தான் செய்யும்" என்றார் ஆசிரியர்.

"பழுத்த பழம் ஒன்றைக் கூட விட்டு வைக்கலே சார். எல்லாத்தையும் கடித்திருக்கு" என்றான் சேகர்.

"பழுத்திருந்தால் தான் அணில் கடிக்கும், கிளி கொத்தும். காயை இவை தொடவே தொடாது. இன்னும் கேட்டால், அணில் கடித்த பழம் அதிகச் சுவையாக இருக்கும்" என்றார் ஆசிரியர்.

"சார், எங்க வீட்டு மாமரத்தில் ஒரு அணில் கூடு கட்டியிருந்தது சார்" என்றான் சிவா.

"அணில் பாலூட்டியாச்சே! எப்படிக் கூடு கட்டும்?" என்று வியப்புடன் கேட்டான் ஜார்ஜ்.

"அணில் பாலூட்டியானாலும், கூடு கட்டித்தான் குட்டி போடும்," என்று சிரித்தார் ஆசிரியர்.

"ஒரு அணிலைக் கொன்று மாட்டி வைக்கிறேன்னு சொன்னப்ப நான்தான் வேண்டாம்னுட்டேன் சார். அணிலே அணிலே வாவா, அழகு அணிலே வாவான்னு சின்னப்ப பாடிட்டு, இப்ப அதே அணிலைக் கொல்வது என்பதை என்னால் தாங்கவே முடியலே," என்றான் பாபு.

"நாம்ப அதிகம் நேசிக்கும் கிளியும், அணிலும் விவசாயிகளுக்குத் தீங்கு பண்ணற மாதிரி நாம நேசிக்கும் வேறு எந்த உயிரினமும் பண்ணுவதில்லை."

"எப்படி சார் அணில் கொஞ்சம் கூடக் கீழே விழாமல் தாவறது?"

"எதையும் விழாது முழுந்தப் பற்றிக் கொள்ளும்படி அதன் விரல் நகங்கள் கூர்மையா வளைஞ்சிக்கும். அதோடு தாவும் போது, பேலன்ஸ் பண்ண ஏத்தபடி அதன் அடர்ந்த வால் அமைஞ்சிருக்கு. பேரசூட் மாதிரி இது அணிலுக்குப் பயன்படுகிறது. அணில்னு சொன்னதும் அதன் அழகான வால் தானே நமக்கு நினைப்பு வருது. இது தன் கூட்டைக் கட்டியதும், குஞ்சுகளுக்கு மெத்து மெத்தென்று கதகதப்பாக இருக்க இந்த அழகான வாலில் இருந்து முடிகளை வாயால் கடித்து எடுத்துப் போட்டுத் தயார் பண்ணும்."

"அதிசயமா இருக்கே!"

"பிறந்த உடனே குட்டிகள் அழகாக இருக்காது. காதுகள் மடிஞ்சு, கண்கள் மூடியபடி பார்க்கவே சகிக்காது இருக்கும். ஒன்றரை மாதமான பிறகுதான் குட்டி அணில் மாதிரி ஆகும். அம்மா தான் எல்லாவற்றையும் கவனித்துப் பண்ணும்."

ஆசிரியர் தொடர்ந்தார்.

"இதன் வாயின் முன் பக்கத்தில் மேலும் கீழுமா இரண்டிரண்டு உளிப்பற்கள் இருக்கும். இவை தினமும் வளரும். அதனால் கடின ஓடுகள், மரக் கிளைகள் இவைகளை எலிகளைப் போலவே துருவும். எதுவும் கிடைக்கலேன்னா, மேலும் கீழுமா தாங்களே பற்களை




அறிவியல் உண்மைகள்.

- அணில்கள் கொறிக்கும் பாலூட்டி இனத்தைச் சேர்ந்தவை. பழங்களுக்குப் பெரும் சேதம் விளைவிப்பவை.
- கொறிக்கா விட்டால், முன் பற்களை அரைக்காவிட்டால் இவை வளர்ந்து வாயை அசைக்க முடியாதபடி செய்து பட்டினியால் இறந்துவிடும்.
- தாவும் போது வால் இதற்குப் பாராசூட்டைப் போல் பேலன்ஸ் செய்து கொள்ள உதவுகிறது.
- கைகளில் உள்ள வளைந்த நகங்கள், விழாமல் இருக்க உதவுகின்றன.
- பறக்கும் அணிகளும் உண்டு நம் நாட்டில் அல்ல.

அரைத்துக் கரைத்துக் கொள்ளும். இப்படிப் பண்ணலேன்னா, உளிப் பற்கள் நீளாமா வளர்ந்து, எதுவும் சாப்பிட முடியாம இவை இறந்துவிடும்."

"சார், அணிலின் முதுகில் உள்ள கோடுகள் ராமர் தனக்கு அணைகட்ட உதவியதற்காகப் போட்டவை என்கிறார்களே?"

ஆசிரியர் சிரித்தார். "இது அழகான அறியாமை. கேட்க இனியையா மகிழ்ச்சியா இருக்கு. ராமருக்கு அணில் போன்ற உயிரினங்களும் உதவின என்பதைக் காட்ட எழுந்த கற்பனை. இராமாயண காலத்திற்கு முன்பே அணில்களின் முதுகில் கோடுகள் இருந்திருக்கின்றன."





C.I.D. சிவா

செங்கல்பட்டி ருந்து மூன்று கிலோமீட்டர் தூரத்திலிருந்தது வள்ளுவர் நகர். நகரை விட்டு சற்று ஒதுக்குப்புறமாக இருந்ததால் விலை குறைவாக அங்கு வீட்டு மனை கிடைத்தது. அதனால் அங்கு ஒரு வீட்டு மனையை வாங்கி அதில் வீடு கட்டிக் குடியேறினார் சிவாவின் அப்பா. வள்ளுவர் நகரில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சுமார் நான்கைந்து வீடுகளே இருந்தன.

அந்த வீட்டிற்கு வந்து ஒரு வருடம் ஆகி விட்டது. இது வரை அங்கு எந்தப் பொருளும் திருடு போனதில்லை. எல்லாப் பொருள்களும் போட்டது போட்ட இடத்தில் அப்படியே இருக்கும். அந்த நகருக்குப் பக்கத்தில் குடிசைகள் நிறைந்த சேரிகள் பல இருந்தன. எல்லோரும் ஏழை மக்கள். வறுமை நிறைந்த பகுதிகள் இருந்தாலும் யாரும் இதுவரை எந்த ஒரு பொருளையும் திருட்டுக் கொடுத்ததாகப் புகார் இல்லை. ஆனால், முந்தைய நாள் இரவில் சிவாவின் வீட்டுக் கொல்லைப்புறத்தில் இருந்த வாழை மரத்திலிருந்து யாரோ வாழைக் குலையை அப்படியே வெட்டிச் சென்று விட்டார்கள். அதுதான் அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

சிவா, அவனுடைய வீட்டில் பார்த்துப் பார்த்து வளர்த்த வாழை மரம் அது. கற்பூர வாழை. அந்த வாழை மரத்தைச் சுற்றிலும் கொத்தி விட்டு எரு வைத்து அடிக்கடி நீர் பாய்ச்சுவான். அந்த வாழை மரம்தான் குலை விட்டிருந்தது. அது பழுக்கும் நேரம். குலையில் ஒரு பழம் கூட மஞ்சள் மெருகேறி விட்டது. நாளை வெட்டிப் பழுக்க வைக்க வேண்டும். காலனியில் குடியிருப்பவர்களுக்கும், நண்பர்களுக்கும் ஒவ்வொன்று கொடுத்து எல்லோரையும் அசத்த வேண்டும் என்று அவன் எண்ணியிருந்தான்.


அதற்குள் எந்தத் திருட்டுப் பயலோ முந்திக் கொண்டு விட்டான். இரவோடு இரவாக, சொல்லி வைத்தாற்போல யாரோ வாழைக் குலையை வெட்டிக் கொண்டு போய் விட்டார்கள்!

வாழைக் குலையை வெட்டியவனை எப்படியாவது கண்டுபிடித்து விட வேண்டும் என்று சிவாவுக்கு

வேடந்தாங்கல்
சுகுணன்

ஒரே துடிப்பு. இருக்காதா பின்னே? வளர்த்த அருமை அவனுக்குத்தானே தெரியும்?

வாழைக் குலை திருடு போனதைப் பற்றிப் போலீசில் புகார் கொடுக்கலாம். ஆனால், போலீஸ் இந்த மாதிரி அழுகு பொருள் திருட்டில் எல்லாம் அக்கறை காட்டுமா என்பது சந்தேகம்தான்.



சென்ற மாதம் கூட அப்பாவின் நண்பர் ஒருவரின் சை ்கிள் திருடு போனதற்கு போலீசில் புகார் கொடுத்தார்கள். அவர்கள் சந்தேகப்படும் நபரைப் பிடிப்பதற்காக டாக்சி வைக்கும்படி கூறினார்கள். ஆக அங்கே இங்கே என்று அலைந்து ஐந்நூறு ரூபாய் செலவானது தான் மிச்சம். சைக்கிள் கிடைத்தபாடில்லை. பணச்செலவு வேறு.

சிவாவிற்கு எப்படியும் இந்தத் திருட்டைத் துப்பறிந்து கண்டு பிடிக்க வேண்டும் என்று கொள்ளை ஆசை. துப்பறியும் நாவல்கள் படித்ததாலும், டீ.வியில் துப்பறியும் தொடர்கள் பார்த்ததாலும் இந்த ஆசை அதிகமாகி விட்டது.

அவர்கள் வீட்டில் இருந்த வாழை கற்பூர வாழை இனம். கொல்லைப்புறம் பின்புற காம்பவுண்டு சுவர் ஓரத்தில் அது இருந்தது. வாழைக் குலையை வெட்டியவன் அதன் மேல் ஏறி வந்து தான் அதை வெட்டியிருக்க வேண்டும்.

சிவா, காம்பவுண்ட் சுவர் மேல் ஏறிப் பார்த்தான். வாழைக் குலையிலிருந்து ஒழுகிய பாலின் கறை சுவரில் படிந்திருந்தது. காம்பவுண்ட் சுவரை ஒட்டினாற்போல் சில கால் தடங்கள் தெரிந்தன. அந்தத் தடங்களை அப்படியே பின்தொடர்ந்து சென்றான். கொஞ்ச தூரம் சென்றவுடன் தடத்தின் அடையாளம் ஏதும் தெளிவாகத் தெரியவில்லை. தேய்ந்து மறைந்து விட்டது. அதன்பிறகு திருடன் எந்தப் பக்கம் சென்றிருப்பான் என்பதை ஊகிக்க முடியவில்லை.

சிவா, இந்தத் திருட்டைத் துப்புத் துலக்குவதற்காக மூளையைக் கசக்கி யோசனை செய்து கொண்டிருந்தான். எதுவும் பிடிபடவில்லை.

இரண்டு மூன்று நாட்கள் சென்றன. ஒருநாள் அவர்கள் வீட்டில் வந்து கழுநீர் எடுத்துச் செல்லும் பாட்டி வந்தாள். தற்செயலாக அந்தப் பானைகளைப் பார்த்தான் சிவா. பானை நிறைய வாழைப்பழத் தோல்கள் இருப்பதைக் கண்டான்.

"பாட்டி, எங்க வீட்டுக்கு வரதுக்கு முன்னாடி, எந்தெந்த வீட்டில இருந்தெல்லாம் கழுநீர் கொண்டாந்தீங்க?" என்று கேட்டான் சிவா ஆவலோடு.

"குப்புசாமி வீட்ல இருந்து கழுநீர் தண்ணியை ஊத்திகிட்டு நேரா இங்க தான் வரேன். ஆமாம், எதுக்கு இதெல்லாம் கேக்கறே தம்பி?" என்றாள் பாட்டி.

"ஒண்ணுமில்லே பாட்டி சும்மா கேட்டேன்" என்று சொன்னபடி கழுநீர்ப் பானையிலிருந்த வாழைப் பழத் தோலை எடுத்துப் பார்த்தான். சந்தேகமேயில்லை. அது மெல்லிய தோலுடைய கற்பூர வாழைப் பழத்தின் தோல்தான். அருகே யார் வீட்டிலும் கற்பூர வாழை இல்லை.

சிவாவின் மூளையில் மின்னலடித்தது. வாழைப் பழக் குலை திருடியவனைக் கண்டுபிடித்து விட்டான்.

நேராகக் குப்புசாமியின் வீட்டுக்குச் சென்றான். குப்புசாமியின் மகன்கள், ரகுவையும், சுந்தரையும் வெளியில் அழைத்தான். இருவரும் அவன் வகுப்பே.

"சுந்தர், நீ என்னோட கிளாஸ் மேட்டாக இருந்தும் இப்படி செஞ்சுட்டயே! தப்பில்லையா?"

"என்ன சொல்றே சிவா! ஒண்ணுமே புரியலையே!" என்று புதிர் கேட்பவனைப் போல் விழித்தனர் ரகுவும் சுந்தரும்.

"எங்க வீட்டு வாழைக் குலையைத் திருடினதைத்தான் சொல்றேன். வாழைப் பழம் வேணும்னு கேட்டிருந்தா நானே உங்களுக்கு ஒரு சீப்பு கொடுத்திருப்பேனே" என்றான் சிவா.

"என்னை மன்னிச்சிடு சிவா, இனி மேல் நாங்க இது போல் செய்ய மாட்டோம்" என்று ஒரே நேரத்தில் ரகுவும் சுந்தரும் கெஞ்சினார்கள்.

"சுந்தர், ரகு நீங்க ரெண்டு பேரும் இப்பவே எங்க வீட்டுக்கு வாங்க, உங்களுக்கு ஒரு கற்பூர வாழைக் கண்ணு தரேன். ஓய்வு நேரத்தில் மரம் வளர்த்து உழைப்பின் பலனைப் பெறுவோம், வாங்க" - சிவா அவர்களுக்கு மகிழ்வோடு வழிகாட்டினான்.

காத்திடு



படிக்கும் நல்ல தம்பியே,
பார்த்துச் சிரிக்கும் நம்பியே!
அடியிரண்டில் உலகை அளந்த
வள்ளுவர்போல் வாழ்ந்திடு!

பள்ளி செல்லும் தங்கையே,
பாசமுள்ள நங்கையே!
கள்ளமில்லா இந்திரா
காந்தியைப் போல் வாழ்ந்திடு!

கல்வி பயிலும் தம்பியே,
கண்டு மகிழும் நம்பியே!
நல்ல தலைவர் நேருபோல்
நாட்டை என்றும் போற்றிடு!

அறிவு கொண்ட தம்பியே,
அழகு சிரிப்புத் தங்கையே!
சரித்திரத்தில் காந்தி போல்
சத்திய மண் காத்திடு!

- தியாகசாந்தன்

என்னைப் புகைப்படம் எடுத்தார்கள்

• குமார்



நான் திருக்கண்ணங்குடியில் இருக்கிறேன். பிலிப்பைன்ஸ் தலைநகரான மணிலா நகரிலிருந்து வெரிட்டாஸ் வானொலி உலகத் தமிழ் மக்களுக்காக தினமும் காலை மாலை தமிழ் ஒலிபரப்பு செய்து வருகிறது. கடந்த பிப்ரவரி மாதத்தில் இவர்கள் சேலம் நகரில் நேயர் கருத்தறியும் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய் திருந்தனர். அக் கூட்டத்திற்கு பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து வெரிட்டாஸ் வானொலியின் நேயர் பிரிவைச் சார்ந்த பெண்மணி ஒருவரும் அவ்வானொலி நிகழ்ச்சி தயாரிப்பாளர் ஒருவரும் வந்திருந்தார்கள். அக் கூட்டத்திற்கு சிறப்பு நேயராகப் பங்குகொள்ள நான் எனது அண்ணனுடன் சென்றேன். பலரையும் முன்னமே தனித்தனியாகப் புகைப்படம் எடுத்த பிலிப்பைன்ஸ் நாட்டுப் பெண்மணி நான் மேடையேறி மைக்கைப் பிடித்துக் கருத்துக் கூறுகையில் மேடையை விட்டுக் கூட்டத்திற்கு முன்னே சென்று நான் பேசும்போது என்னைப் பல கோணங்களில் புகைப்படம் எடுத்தார். இவ்வளவுக்கும் நான் அவரைப் பொறுத்தவரையில் முன்பின் அறிமுகம் இல்லாதவன். என்னை விட தகுதியும், அனுபவமும் உள்ள பலர் அந்தக் கூட்டத்தில் இருந்தும், பங்குகொண்டவர்களில் நான்தான் வயதில் மிக மிகச் சிறியவன் என்பதை கருத்தில் கொண்டு எனக்கு முக்கியத்துவம் அளித்து என்னைப் பெருமைபடுத்த வேண்டும் என்று அவர் புகைப்படம் எடுத்ததை பிறகுதான் நான் புரிந்து கொண்டேன்.


- ஏ. ராகவேந்திரா.

தவறின் விளைவு!

ஹிரோஷிமாவின் குண்டு வெடிப்புக்கு யார் காரணம்? அமெரிக்க அரசு ஜப்பானை சரணடையுமாறு கேட்டு இறுதி எச்சரிக்கை அனுப்பியது. அதற்கு ஜப்பானிய அரசு அனுப்பிய பதிலில் முக்கியமான ஜப்பானிய சொல் - "மோகுசட்சு" என்பது பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கு அர்த்தம் "உங்கள் இறுதி எச்சரிக்கையைப் பரிசீலனை செய்து வருகிறோம்" என்பதே. ஆனால் வாஷிங்டனில் கிடைத்த இதன் மொழிபெயர்ப்பில் உங்கள் இறுதி எச்சரிக்கையை நிராகரிக்கிறோம்" என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. விளைவு...? ஹிரோஷிமாவில் குண்டு வீசப்பட்டது. ஒரு சிறு கவனக்குறைவு எத்தனை விபரீதத்தை விளைவித்து விட்டது! சின்னஞ் சிறு துளையால் பெரிய கப்பலும் கூட மூழ்கி விடுகிறதல்லவா?

- சுகாராஜ், மதுரை - 2.





• ராகவேந்திரா

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் உள்ள பிளியூர் கிராமத்தில் நான் இருக்கின்றேன். ஏற்காட்டில் உள்ள கிளியூர் நீர்வீழ்ச்சி புகழ்பெற்ற சுற்றுலாத்தலம். அந்த இடத்தைப் பார்க்க அடிக்கடி வெளியூர்களிலிருந்து சுற்றுலா பயணிகள் வருவார்கள். ஒரு நாள் வீட்டில் இருந்து ஏற்காடு சென்று கொண்டிருந்தேன். வெளியூர் பயணிகள் சிலர் சுற்றிப் பார்ப் பதற்காக எதிரே வந்தார்கள்.

அவர்கள் என்னிடம் வந்து, "கிளியூர் நீர்வீழ்ச்சிக்கு எப்படிப் போக வேண்டும்?" என்று கேட்டனர். கிளியூர் நீர்வீழ்ச்சிக்குப் போகும் வழியை நான் காட்டினேன். அவர்கள் கையில் கேமிரா கொண்டு வந்திருந்தார்கள். நான் கிளியூர் நீர்வீழ்ச்சிக்குப் போகும் வழியைக் காட்டியதும் அவர்கள் என்னை நிற்க வைத்து அங்கேயே ஒரு போட்டோ எடுத்தார்கள். "ரொம்ப நன்றி" என்று கூறி விட்டு என்னுடைய விலாசத்தைக் கேட்டு எழுதிக் கொண்டார்கள். பிறகு தபாலில் எனக்கு அந்த போட்டோவை அனுப்பி வைத்தார்கள். மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். அப் புகைப் படத்தை இன்னமும் பத்திரப் படுத்தி வைத்து இருக்கின்றேன். நமக்கு மற்றவர் உதவினால் அதை எப்படி மறக்காது போற்ற வேண்டும் என்பதற்கு இது ஓர் உதாரணம். அவர்கள் அனுப்பிய புகைப்படத்தைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு ஒருவகை புத்துணர்ச்சியும், உதவி செய்யும் ஆர்வமும்தான் எழும்.


- மா. குமார்.

மனித நேசம்




ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட போது நீதிபதி மகாதேவரானடே இரயிலில் போய்க் கொண்டிருந்தார். அருகில் இருந்த வெள்ளையன் ஒருவன் மகாதேவரானடேயை கேலி செய்தான். தகாதவாறு நடந்து கொண்டான். ஸ்டேஷன் வரவும் படுக்கையை வெளியே தூக்கி போட்டான். மகாதேவரானடேவை வரவேற்க வந்தவர்கள் மிகவும் மரியாதையுடன் நடந்து கொண்டதிலிருந்து, அவர்களின் பேச்சிலிருந்து அவர் நீதிபதியெனத் தெரிந்தவுடன் அவ்வெள்ளையன், ''நான் கேலி செய்யும் போதே தாங்கள், நீதிபதி என்பதைச் சொல்லியிருந்தால் தவறாக நடந்திருக்க மாட்டேனே'' என மன்னிப்புக் கேட்டான். மகாதேவரானடே ''நீ மரியாதை தருவது பதவிக்கே. மனித உணர்வுகளுக்கல்ல. இந்தியனை கேலி செய்வதால் நீ சந்தோஷமடைவாய் என்றால் நான் இந்தியன் என சொல்லிக் கொள்வதில் பெருமையடைகிறேன்'' என்றார். வெள்ளையன் தன் தவறை உணர்ந்தான்.

- சுகாராஜ், மதுரை - 2.



கடிகாரம் ஓடாது!

எங்கள் வீட்டுக் கடிகாரம் அடிக்கடி 'மக்கர்' பண்ணும். அப்பாவும் ஓயாமல் அதை ரிப்பேர் செய்து வருவார். 'இதைத் தலையைச் சுற்றிப் போட்டுவிட்டு புதுசா வேறு ஒன்று வாங்குங்கள்' என்று நாங்கள் எத்தனையோ கூறியும் அப்பா கேட்கவில்லை. கடைசியாகப் போனவாரம் அதை ரிப்பேர் பண்ணிக் கொண்டு வந்து வைத்தார். இருந்தாலும் அது திடீர் திடீர் என்று நின்று எல்லோரையும் பழிவாங்கும். அதனால் கடிகாரத்தில் மணி பார்க்கும்போது ஒருவருக்கொருவர் "கடிகாரம் ஓடறதா பார்" என்று கேட்டுக் கொள்வோம். அப்படித்தான் அப்பா காலையில் என்னிடம் கேட்டார். நானும் பார்த்துவிட்டு "நல்லா ஓடுது அப்பா" என்றேன். சற்று நேரம் கழித்து என் சின்னத் தங்கை என்னிடம் வந்து "அண்ணா இனிமே கடிகாரம் ஓடாது. அதைக் கட்டிப் போட்டுட்டேன் என்றாள். ஒன்றும் புரியாமல் நான் போய்ப் பார்த்தேன். கடிகாரத்தை ஒரு சணல் கயிற்றில் கட்டி, படம் மாட்டியிருந்த ஆணியோடு பிணைத்திருந்தாள் தங்கை. எல்லாம் கடிகாரம் ஓடிப் போகாமல் இருக்க!



— - பி.சரவணன், கோயக்காடு

காரணம்

குடும்பத்தோடு பேருந்தில் சேலத்திற்குப் போய்க் கொண்டிருந்தோம். சாலையில் வழி நெடுகிலும் இரண்டு பக்கங்களிலும் புளிய மரங்கள். கண்ணுக்குக் குளிர்ச்சியாக, மனதிற்குப் புத்துணர்ச்சி தருவதாக இருந்தது அந்தக் காட்சி. புளிய மரங்கள் இல்லாத இடைவெளி ஒன்று வந்தது. அதில் ஒரு லாரி குப்புறக் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளாகி இருந்தது. எல்லோரும் கலக்கத்தோடு அதைப் பார்த்தோம். பஸ் தொடர்ந்து சென்றது.

திடீரென்று என் தம்பி என்னிடம் கேட்டான்.

"அண்ணா. அந்த லாரி ஏன் இப்படி விபத்துக்கு ஆளாகி இருக்கு தெரியுமா?"

"இவரு பெரிய எல்லாந் தெரிஞ்சவரு. நீதான் அதைச் சொல்லேன், அந்த லாரி ஏன் கவிழ்ந்து கிடக்கு?" என்று கேட்டேன் நான்.

அருகே இருந்த டிரைவரும் ஆவல் மிகுதியால் தம்பி என்ன கூறப் போகிறான் என்பதைக் கேட்க ஒரு முறை திரும்பிப் பார்த்து "சொல்லு தம்பி. நானும் கேட்டுக்கறேன்?" என்றார்.

"அங்கே புளிய மரங்கள் இல்லே. இருந்திருந்தால் டிரைவர் அதுமேல் இடிச்சு, விபத்து ஏற்படாமல் நிறுத்திஇருப்பார்" என்றான் தம்பி. எல்லோரும் சிரித்தோம்!

- - சி.பெருமாள், சித்தம்பூண்டி.




அம்மாவுக்கு உதவியா?


நான் எந்த வேலையும் செய்யாது குடும்பத்திற்கு உதவியாக எதுவுமே செய்யாது ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கிறேன் என்று அம்மா அடிக்கடி திட்டுவார்கள். அப்பாவும் சேர்ந்து கொள்வார். தம்பியும் ஒத்துப் பாடுவான். எனக்கு ரொம்பவும் கஷ்டமாக இருக்கும். 'இன்று எப்படியாவது அம்மாவுக்கு உதவியாக எதையாவது செய்வது' என்ற முடிவோடு எழுந்தேன். தம்பி கடைக்குப் போய் வெங்காயம் வாங்கிக் கொண்டு வந்து வைத்திருந்தான். 'சரி கடைக்குத்தான் தம்பி போய் வந்து விட்டான். வெங்காயத்தையாவது நாம் நறுக்கிக் கொடுத்து அம்மாவுக்கு சமையல் வேலையில் உதவி பண்ணுவோம்' என்று எழுந்தேன். 'வெங்காயத்தை நறுக்கினால் கண் எரியுமே?' என்ற தயக்கம் தோன்றியது. தண்ணீரில் போட்டு விட்டு நறுக்கினால் கண் எரியாது என்று ஏதோ பத்திரிகையில் வெளியாகியிருந்த குறிப்பு நினைவுக்கு வந்தது. அத்தனை வெங்காயத்தையும் எடுத்து வாளியில் போட்டுத் தண்ணீரை ஊற்றினேன். கஷ்டப்பட்டு நறுக்கி முடித்தேன். கண் எரிச்சல் தாங்கவில்லை. இருந்தாலும் அம்மாவுக்கு உதவியாக ஏதாவது செய்ய வேண்டும் என்ற துடிப்பு இருந்ததால் பொறுத்துக் கொண்டேன். சாதாரணமாக இந்த மாதிரி வேலைகளையெல்லாம் தம்பிதான் பண்ணுவான். நான் முடித்ததும் உள்ளே தற்செயலாக வந்த தம்பி, என் காரியத்தைப் பார்த்தான்.

"பார்த்தியா? இன்னிக்கி உன்னை நான் முந்திக் கிட்டேன். அம்மாவுக்கு ஒத்தாசையா கண் எரிச்சலைக் கூடத் தாங்கிக் கிட்டு வெங்காயம் உரிச்சி நறுக்கி வைச்சிருக்கேன்" என்றேன் பெருமையோடு.

"அண்ணா, இன்னிக்கு சமையல் முடிஞ்சு போச்சு. இது நாளைக்காக வாங்கி வந்தது. நறுக்கின வெங்காயம் நாளைக்கி 'கொழ கொழ'ன்னு இருக்கும். நல்லா இருக்காது" என்றான் தம்பி, என்னைப் பரிதாபமாகப் பார்த்து.

- டி.தென்னரசு, அனந்தபுரம்.





பாட்டி மட்டும்

என் தம்பி மது ரெட்டை வால்தான். அதோடு வேடிக்கையாகவும் பேசுவான். ஒரு நாள் அம்மாவிடம் குளிக்காமல் சாப்பிட அடம் பிடித்தான்.

"குளிக்காம இருக்கிறவங்களுக்கு இந்த வீட்டில் சாப்பாடு கிடையாது" என்றாள் அம்மா கண்டிப்புடன்.

தம்பி ஒரு வினாடி யோசித்தான்.

"அப்ப பாட்டி மட்டும் தினமும் குளிக்காமல் சாப்பிடறாளே?" என்று கேட்டான்.

பாட்டி அதிகாலையிலேயே குளித்து விடுவாள். ஏழுமணிக்குமேல் எழுந்திருக்கும் தம்பி அதை எங்கே கவனித்திருப்பான். எங்களுக்கு எல்லாம் ஒரே சிரிப்பு!

- - எஸ்.விஜு, சென்னை-24.

அது இல்லை!

என் தம்பி எல்.கே.ஜி. படித்துக் கொண்டு இருந்தான். பள்ளிக்கூடம் மிக அருகில் இருந்தது. ஒரு நாள் அவனுடைய டீச்சர் அழுதுகொண்டு இருந்த என் தம்பியை வீட்டிற்கு அழைத்து வந்தார். பேப்பரை மூக்கில் போட்டுக் கொண்டு விட்டானாம். "நாங்கள் பார்த்த வரை மூக்கில் ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் வலி என்று அழுவதால் வீட்டில் ஒப்படைத்து விட்டுப் போகிறோம்" என்று கூறிவிட்டுப் போனார்கள்.

அம்மாவும் தம்பியை ஒரு மூக்கை அழுத்தி 'ஹூம்' சொல்லு என்று பல விதமாக முயற்சித்துப் பார்த்தார். ஒன்றும் வரவில்லை. மூக்கில் எதுவும் இருப்பதாகவும் தெரியவில்லை. ஆனாலும் வலி என்று அழுகையைத் தொடர்ந்தான்.


மனப் பிரமையாக இருக்கும் என்று எண்ணிய அம்மா ஒரு தந்திரம் பண்ணினாள். அவனுக்குத் தெரியாமல் ஒரு சின்ன துண்டு பேப்பரைத் தண்ணீரில் நனைத்து சுருட்டி வைத்துக் கொண்டாள். தம்பியிடம் போய் "இப்போ ஹூம் சொல்லு" என்று சொல்ல வைத்து "இதோ வந்து விட்டது பார்த்தியா?" என்று நைசாகத் தன் கையிலிருந்து பேப்பரைக் கீழே நழுவ விட்டாள்.

தம்பி, வியப்புடன் அதை எடுத்துப் பார்த்தான்.

"நான் மூக்கில் போட்டு கொண்டது பஸ் டிக்கெட். இது இல்லை. இது வேற ஏதோ பேப்பர்."

பிறகென்ன. பேக்மென் பிஸ்கெட் விளம்பரத்தில் வருவானே ஒரு பையன். 'அதுபோல் அழுகையைத் தொடர்ந்தான். பிறகு டாக்டரிடம் காட்டி ஒன்றும் இல்லை என்று சொன்ன பிறகே சமாதானம் ஆனான்.

— கே.விவேகானந், சென்னை-78





இரக்கம்

நான் வீட்டிலிருந்து இளமபிப் பள்ளிக்கு வந்து கொண்டு இருந்தேன். பள்ளி வளாகத்தின் முன் கூட்டமாக மணவர்கள் நின்று கொண்டு இருந்தனர். புத்தகப் பையை வைத்து விட்டு நானும் வெளியே வந்து பார்த்தேன்.

ஒரு இளைஞர் நின்று கொண்டிருந்தார். மாணவர்கள் அவரைச் சுற்றி அவரிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். பக்கத்தில் இருந்த பையனிடம் விசாரித்தேன். அந்த மாணவரின் பெயர் ராஜாவாம். சென்னையில் காலேஜியில் படிச்சிக் கிட்டுக் இருக்கிறாராம் அப்பா அம்மா இல்லையாம். மாமா மட்டும்தான் இருக்காறாம். இவருக்கு பரீட்சை பீஸ் கட்டப் பணம் இல்லை. ஏழையாம். அதனால், பரீட்சைக்கு பணம் கட்டணும் எப்படியாவது உதவுங்கள். நான் அங்கு வந்து வாங்கிகிட்டு போறேன் என்று மாமாவுக்கு எழுதியிருந்தாராம். நண்பனிடம் பஸ் செலவுக்கு ரூ.50 கடன் வாங்கி கொண்டு வடுவூரில் மாமா வீட்டுக்கு வந்தாராம். ஆனால் வீடு பூட்டியிருந்ததாம். பக்கத்துல விசாரித்த போது எங்கேயோ ஊருக்கு பெட்டியோடு போயிட்டாங்கன்னு சொன்னாங்களாம். அதனால் அங்கு இருந்து இளம்பி கால்போன போக்கிலே நடந்து இந்த ஊருக்கு வந்திருக்கிறாராம். ஏதாவது நீங்களா கொஞ்சம் காசு போட்டுத் தந்தீங்கன்னா, நான் எப்படியாவது ஊர் போய்ச் சேர்ந்துடுவேன்

என்று மிகவும் பரிதாபமாச் சொன்னாராம்.

உடனே நாங்கள் பாவப்பட்டு எல்லோரும் 50 காசு, ஒரு ரூபாய் என்று எங்களிடம் இருந்த எல்லாத்தையும் சேர்த்து மொத்தமாக 45 ரூபாய் கொடுத்தோம்.

"நீங்களும் எங்களோடு இங்கு சத்துணவு சாப்பிட்டுச் செல்லுங்களேன்" என்று சொன்னோம். "வேண்டாம் தம்பி! ஒரு தம்ளர் தண்ணீர் தாங்க போதும்" என்று அந்த இளைஞர் சொன்னார். தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தோம். "ரொம்ப நன்றி தம்பி, தங்கைகளா. இதை நான் என்றைக்குமே மறக்க மாட்டேன்னு சொல்லிட்டுப் போனார். ஒரு நல்ல காரியம் செய்த மனநிறைவு எங்கள் எல்லோருக்கும் ஏற்பட்டது.

அடுத்த நாள் ஒரு வேலையாகப் பக்கத்து ஊருக்குப் போயிருந்தேன். ஒரு பள்ளிக்கு முன்னால் கூட்டம். சென்று பார்த்தால் அதே இளைஞர்! அதே காரணத்தைச் சொல்லி, இரக்கம் கொள்ள வைத்து எல்லோரையும் ஏமாற்றிப் பணம் சேர்த்துக் கொண்டு இருந்தார். நாங்கள் மிரட்டிக் கேட்டதும் எடுத்தார் ஓட்டம். இப்படி உழைப்பில்லாமல் ஏமாற்றும் கூட்டம் நிறைய இருக்கிறது. ஆகையால் இதுபோல ஏமாற்றுப் பேர்வழிகளிடம் ஏமாந்து விடாதீர்கள்!

- ஆர்.பிரசன்னா, மேலவாசல்.

5வது திருடன்

எங்கள் குடியிருப்பில் நடந்த ஒரு 'கோடை விழாவில்' அடுத்தடுத்த இரு நிகழ்ச்சிகளுக்கிடையே ஓர் இளைஞர் மேடையேறினார்.



"தயவு செய்து யாரும் கல்லைத் தேடாதீர்கள்" என்று பீடிகையோடு அவர் சொன்னார்.

"ஒரு ஊரிலே ஐந்து திருடர்கள் இருந்தார்கள். நாளுக்கு நாள் அவர்கள் தொல்லை அதிகரித்துக் கொண்டே இருந்தது. அரும்பாடுபட்டும் காவல் துறையினரால் அவர்களைப் பிடிக்க முடியவில்லை. எனவே பொதுமக்கள் ஒன்று கூடித் தங்களைக் காக்குமாறு இறைவனை வேண்டினர். அவர்களது வேண்டுதலுக்கு செவி சாய்த்த இறைவன் திருடர்கள் வழக்கமாக ஒன்று கூடும் ஒரு 'பேக்கரி'யின் வாசலில் வில் அம்புடன் ஆஜரானார். சற்று நேரத்தில் அங்கு வந்த 4 திருடர்களையும் அம்பு எய்து கொன்றார். வெகுநேரமாகியும் ஐந்தாவது திருடன் வரவில்லை. எனவே இறைவன் பேக்கரிக்குள் சென்று ஒரு 'செட்' காரபன் வாங்கி, அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தார். அந்நேரம் பார்த்து உள்ளே நுழைந்தான் 5வது திருடன். உடனே இறைவன் சற்றும் தாமதியாமல் அம்பை எடுத்து எய்தினார். ஐந்தாவது திருடன் சாகவில்லை'-என்று நிறுத்திய அவ்விளைஞர், 'இறைவன் அம்பு எய்தும் ஐந்தாவது திருடன் ஏன் சாகவில்லை?' என்று கூட்டத்தினரைக் கேட்டார்.

பார்வையாளர்களிடையே சலசலப்பு ஏற்பட்டது. சில வினாடிகளுக்குப் பிறகு அவ்விளைஞரே கூறினார்- "அரசன் இன்று கொல்வான். தெய்வம் 'நின்று' கொல்லும். ஐந்தாவது திருடனை இறைவன் அமர்ந்து அம்பு எய்ததால் அவன் சாகவில்லை!" சிரிப்பு அலைக்குக் கேட்கவேண்டுமா!

- கே.இலட்சுமி காந்தம், கோவை- 4.

வயது தடையல்ல!

அகில் ரஸ்தோகி அமெரிக்காவில் வாழும் ஓர் இந்தியச் சிறுவன். பிறந்தது இந்தியாவில் புது டெல்லியில். அவனது தந்தை அஜய் ரஸ்தோகி வாஷிங்டனில் உள்ள ஒரு கம்பெனியில் பொறியாளராகப் பணிபுரிகிறார்.

பன்னிரண்டே வயதான சிறுவன் அகில் இப்பொழுது அமெரிக்காவில் பிரபலமாகப் பேசப்படும் இந்தியச் சிறுவன். காரணம் அவனது கண்டுபிடிப்பு ஒன்று. அமெரிக்காவின் பாட்டிலிங் தொழிற்சாலையில் ஒரு புரட்சியையே உண்டுபண்ணியுள்ளது தான்.

அகிலின் கண்டுபிடிப்புக்காக அமெரிக்காவின் IPOA என்ற அமைப்பு சென்ற ஆண்டின் "இளம் கண்டுபிடிப்பாளர்" எனும் உயர்ந்த விருதை வாஷிங்டனில் நடைபெற்ற விழாவில் அளித்து அவனைக் கௌரவப்படுத்தியுள்ளது.



அகில் ரஸ்தோகியின் கண்டுபிடிப்பு என்ன தெரியுமா? திரவத்தைச் சிறிது கூடச் சிந்தாது கொட்டாமல் ஊற்றக் கூடிய ஒரு குவளை! இதன் பெயர் E-Z காலன்" மற்ற குவளைகளிலிருந்து இந்தக் குவளை சற்று மாறுபட்டது. மற்ற குவளைகளைப் போல் நடுவில் பெரியதாகவும் ஆனால் உயரவாக்கில் உள்வளைந்ததாகவும் உள்பகுதியானது நீண்ட குறுகிய பள்ளமாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றது.

இதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற உந்துதல் இந்தப் பன்னிரண்டு வயதுச் சிறுவனுக்கு ஏற்பட்டவிதம் சுவையானது.

அகிலுக்கு ஏழு வயதாக இருக்கும் போது அவனது தாயார் கையில் அடிபட்டு எந்த ஒரு பொருளையும் தூக்க முடியாத நிலையில் இருந்தார். அம்மாவுக்கு உதவ அகில் பிளாஸ்டிக் ஜக்கிலுள்ள பாலை எடுத்து ஊற்றும் பொழுதெல்லாம் பாலைக் கீழே சிந்தி விடுவான். அப்பொழுதுதான் அவனுக்குக் கீழே சிந்தாமல் ஊற்றக்கூடிய குவளை ஒன்றைக் கண்டுபிடித்தால் எல்லோருக்கும் பயன்படுமே என்ற எண்ணம் ஏற்பட்டது.

உடனே அகில் அமெரிக்காவிலுள்ள கண்டுபிடிப்புகளின் உரிமைப் பத்திரங்கள் பாதுகாக்கப்படும் அலுவலகத்திற்குச் சென்று இது போல் சிந்தாமல் ஊற்ற உதவும் ஏதாவது கருவியை யாராவது முன்னால் கண்டுபிடித்துள்ளனரா என்பதைக் கண்டறிந்தான். அப்படி ஒருவரும் கண்டுபிடிக்கவில்லை என்பது உறுதியானதும், அதற்கான ஆராய்ச்சியில் முழு மூச்சுடன் இறங்கி வெற்றியும் பெற்றான்.

அகிலின் கண்டுபிடிப்பைப் பாராட்டி IPOA அவனுக்கு விருதளித்தது. அவ் விழா

வில் கலந்து கொண்ட அனைவரும் ஓடி வந்து அவனைப் பாராட்டினார்கள். பன்னிரண்டு வயதுச் சாதனையாளன் ஆயிற்றே!

அவன படிக்கும் பள்ளி, அவனைப் பாராட்ட ஒரு சிறப்புக் கூட்டம் நடத்தியது. அதோடு அவன் படிக்கும் கராத்தே பயிற்சி வகுப்பில் அவர்கள் முறையில் அவனைப் பாராட்ட





எல்லோரும் தலைகுனிந்து மரியாதை செய்தனர். அகில் கராத்தேவிலும் "பிளாக் பெல்ட்" வாங்கியிருக்கிறான்.

அமெரிக்காவின் பிரபல பத்திரிகையான "வாஷிங்டன் போஸ்ட்" அகில் ரஸ்தோகியின் புகைப்படத்தை முன் அட்டையில் போட்டு அவனைப் பாராட்டி உலகறியச் செய்திருக்கிறது!

அகில் இந்தியாவில் பிறந்தவன். அவனுக்கு மூன்று வயதான போது குடும்பத்தோடு அவன் அப்பா அமெரிக்காவுக்குச் சென்று தங்கி விட்டார். இருந்தாலும் அவனது பாட்டி இப்பொழுது புதுடெல்லியில்தான் வசிக்கிறார். "நான் புதுடெல்லியை அதிகம் நினைவுபடுத்திக் கொள்வேன். எனக்குக் கிடைத்த பாராட்டை எண்ணி என் பாட்டி மிகவும் சந்தோஷப்பட்டிருப்பார்" என்று அகில் தனது பேட்டியில் கூறியுள்ளான்.

அகிலின் கண்டுபிடிப்பு இன்னும் புழக்கத்திற்கு வரவில்லை. ஆனாலும், நிறைய கம்பெனிகள் அதன் தயாரிப்பு உரிமையை அவனிடமிருந்து வாங்கப் போட்டி போடுகின்றன. "இதன் மூலம் வரும் வருவாயை என் கல்லூரிப் படிப்புச் செலவுக்கு வைத்துக் கொள்வேன்" என்று அகில் கூறியுள்ளான்.

வர்ஜினியாவிலுள்ள ஜெபர்சன் செகண்டரி பள்ளியில் படித்து அதன்பின் சோகுட் தொழில் நுட்பக் கல்லூரியில் பயின்று ஒரு விஞ்ஞானியாக வேண்டும் என்பதுதான் அகிலின் இலட்சியம். மனிதனால் முயன்றால் முடியாதது எதுவும் இல்லை. அதற்கு வயது ஒரு தடையல்ல என்பதற்கு அகில் ரஸ்தோகி ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறான். இந்தியாவில் பிறந்து அமெரிக்காவில் புகழ்பெற்ற அகில் ரஸ்தோகியைப் போல் இந்தியாவிலும் இன்னும் பல அகில் ரஸ்தோகிகள் தோன்ற வேண்டும்.

தொகுப்பு : பாளைபசும்பொன்



அறுக்கிறீர்களே!

• என்ன சார் இப்படிப் பழைய ஜோக்குகளையே போட்டு கோகுலத்தை அறுக்கிறீர்களே! - மாத்தூர் சொ. செல்லப்பன், குளத்துமாரி வெ. தெய்வானை, தேனூர் புனிதா, அரக்கோணம் எல். கோபால கிருஷ்ணன் மற்றும் பலர்.

• 'ஏ நீல ரிப்பன்' என் நண்பனைத் திருத்தி விட்டது! - நாகை. எஸ். சங்கர் நயான், மிட்டாகப்பட்டி எம். பரிமளம், இ. சிவசங்கர், பெருமாள் பாளையம் டி. தனசேகரன், மற்றும் பலர்.

• 'இரண்டாவது சாவி' இப்பொழுதே முழுக்கப் படிக்க வேண்டும் என்ற ஆசையைத் தூண்டி விடுகிறது. நல்ல பரபரப்பை உண்டாக்கி, ஆவலைத் தூண்டுகிறது - நெல்லிக்குப்பம் மா. ரமணி, புதுப்பாக்கம் பெரியதம்பி, விருதுநகர் சாத் தம்மாள், கெட்டிச் செவியூர் கே. பழனிச்சாமி மற்றும் பலர்.

• சகோதர பாசம் மனிதர்களை எப்படிப் பாடாகப்படுத்துகிறது என்பதை "அர்ஜுனனுக்குத் தேரோட்டிய அம்பை" சிறப்பாக விளக்கியது - படப்பை வேங்கப்பா, சின்ன தாராபுரம் பரமசிவம், சாத்தூர் பொன்னம்மாள், மேலப்பாதி நாகராஜன், கச்சிராபாளையம் கே. ராஜ், தக்கோலம் மொ. சையத் அப்துல்காதர் மற்றும் பலர்.

• சரத் குலகர்னியின் விசித்திர வாழ்க்கை நாங் கள் இதுவரை அறியாதது! - குன்றக்குடி மா. சேதுராமன், தலப்பாக்கம் சின்னப்பன்.

• 'டைனோசார்' கட்டுரை ஆங்கிலப் புத்தகங்களில் கூடத் தர முடியாத முழு விவரங்களைத் தந்து தெளிவுபடுத்தியது - சிதம்பரம் மு. தாண்டவராயன், திருவாரூர் த. கமலதியாகராசன், ஏரிப்பட்டரை இ. எஸ். லலிதா, சேலம் பெரு. இளங்கம்பன், வடமாதிமங்கலம் வே. பூங்குன்றன், வலங்கை பி. சிவக்குமார், காஞ்சி ஷே. தமீன் அன்சாரி, வேலூர் ஜி. அருண், கச்சிராபாளையம் க. கோவிந்தராஜ், ஏழு கிணறு எஸ். பாலாஜி, ஜோதிநகர் கணேஷ் ராகவன், வேம்புலியூர் சின்னத் தாயம்மா, கொண்டரசம்பாளையம் பி. மோகன் சுந்தரம், எம். எஸ். பெருமாள், ஆலப்பாக்கம் கி. சிவா, தருமபுரி எம். சோமசுந்தரம் மற்றும் பலர்.

• "லால் & லால்" ஜோர் & ஜோர்! வித்தியா சமான சுவையான பேட்டி! - நின்றாண்டபுரம் மு. கோபால்சாமி, பிரம்பாச்சிநகர் சண்முக சுந்தரவதன், கோழியூர் தா. சிமாட்டி, லால்குடி பிரதிபன், திருச்சி எஸ். வி. பார்த்தசாரதி, ஆரணி கே. யுவராஜ்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.

REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka